1121

# ஆரம்பக்கல்வி

## ELEMENTARY EDUCATION



FEBRUARY–1956



REGISTRAR OF BOOKS
28 FEB 1956

திரு பி. எஸ். லக்ஷ்மணசாமி
வரவேற்புக் கமிட்டித் தலைவர்
தென்னாற்காடு மானேஜர்கள் மாநாடு

1121
1-56

JL
T15m211, N46
M56.7.2
186305

ஆரம்பக்கல்வி ஆபீஸ்
94–95, புது தெரு
மண்ணடி, சென்னை-1

ASSOCIATION PUBLISHING HOUSE

"ARAMBA KALVI OFFICE"

94-95, New Street, Mannady P. O. Madras-1.

POST BOX NO. 1818

# “ஆரம்பக்கல்வி” இனாம்

ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரையில், எமது “**புதுமுறை சங்க வாசகங்களை**” அல்லது “**வீரபாண்டியன் தமிழ் வாசகங்களை**” பாட புத்தகங்களாக, அல்லது ரூ. 50–க்குக் குறையாமல் இதர பாட புத்தகங்களுக்கு ஆர்டர் கொடுத்து ஆதரிக்கும் எய்டெட் பஞ்சாயத்து, லேபர் ஆரம்பப் பாடசாலைகளுக்கு, “**ஆரம்பக்கல்வி**” மாதப் பத்திரிகையை இனாமாக மாதாமாதம் அனுப்பிவைக்கப்படும். மாதிரிப் பிரதிகள் வேண்டுபவர்கள் கீழ்க் குறித்துள்ள தொகைக்குத் தபால் ஸ்டாம்புகளை (Postal Stamps) வாங்கிக் கவரில் வைத்து அல்லது மாதிரிப் பிரதிகளுக்கு அனுப்பவேண்டிய தொகை ஒரு ரூபாய்க்கு மேற்பட்டிருந்தால் அந்தத் தொகையை M.O. மூலம் அனுப்பவும்.

## புதுமுறை சங்க வாசகங்கள்

| | புத்தகத்தின் விலை | | | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|---|---|
| முதல் வகுப்பு | 0 | 4 | 0 | 8 | 4–5–'55 |
| இரண்டாம் வகுப்பு | 0 | 5 | 0 | 22 | 19–5–'54 |
| மூன்றாம் வகுப்பு | 0 | 7 | 0 | 23 | 19–5–'54 |
| நான்காம் வகுப்பு | 0 | 8 | 0 | 23 | 19–5–'54 |
| ஐந்தாம் வகுப்பு | 0 | 9 | 0 | 23 | 19–5–'54 |

இந்த ஐந்து புத்தகங்கள் மட்டும் மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் ரூ. 1–0–0 அனுப்பவும்.

# ஆரம்பக்கல்வி




ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை மானேஜர்கள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்

ஆசிரியர் : **பி. வீரராகவன்**

**வருட சந்தா ரூ. 3.]** **[தனிப் பிரதி 4 அணா**

மலர் 17 | பிப்ரவரி 1956 | இதழ் 2


# புதிய ஆபத்து புறப்படுகிறது!

ஏனோ தெரியவில்லை, சென்ற சில ஆண்டுகளாகத் தமிழ் மக்களுக்கு ஆபத்துகள் அடுக்கடுக்காக ஏற்பட்டபடி இருக்கின்றன.

சில ஆண்டுகளுக்கு முன்பு, அன்பர் அவினாசிலிங்கனார் கல்வி அமைச்சராக இருந்தபோது, தமிழ் மாணவர்கள் மீதெல்லாம் இந்தி மொழியைக் கட்டாயமாகத் திணிக்க விபரீதமான ஏற்பாடொன்று நடைபெற்றது. செந்தமிழ் நாட்டவர் கொந்தளித்தெழுந்து, அஞ்சா நெஞ்சுடன் அறப் போர் ஆற்றிய பிறகே, கட்டாய இந்தித் திட்டம் தவிடு பொடியாயிற்று. தமிழ் மொழிக்கு ஏற்பட்டிருந்த பேராபத்துத் தடுக்கப்பட்டது.

அதுபோலவே, மற்[illegible] முறை, தமி[illegible]ன் தலை நகரமாகிய சென்னை, தமி[illegible] [illegible] பறிக்கப்பட்டு [illegible]ந்திர நாட்டு அன்பர்களுக்குப் பூ[illegible]னமாகத் தரப்பட்டுவிடுமோ என்[illegible] பயங்கர

186305

நிலைமை உருவாயிற்று. அப்போதும் தமிழர்கள் விழிப்புற்றெழுந்து வீர உணர்ச்சியுடன் பணியாற்றிய பிறகே, சென்னை தமிழருக்குத் தான் என்கிற நீதி நிலை நாட்டப்பட்டது.

வேறோர் சமயம், தகப்பனார் தொழிலையே மகனும் மேற்கொள்ளவேண்டும் என்கிற அடிப்படையில் அமைந்த பத்தாம் பசலிக் கல்வித் திட்டமொன்றை நண்பர் இராசகோபாலாச்சாரியார் கொண்டுவந்தார். ஆசிரியர்களும், மாணவர்களும், கல்வித் துறை வல்லுநர்களும், மக்கள் மன்றத் தலைவர்களும் ஒன்று திரண்டெழுந்து, ஆகாது இந்தத் திட்டம்—கூடாது இந்தக் கொடுமை என்பதை வற்புறுத்திக் கூறினர். இந்தத் திட்டம் மட்டும் தொடர்ந்து நடைமுறையில் இருக்குமானால், இந்த நாட்டின் கல்வித் துறை இருள் சூழ்ந்ததாகிவிடும் என்பதை எல்லாக் கட்சித் தோழர்களும் தெள்ளத் தெளிவாக விளக்கிக் காட்டி, புதிய திட்டத்தை ஒழிப்பதற்காகப் பெரியதோர் போராட்டத்தை நடத்திக் காட்டிய பிறகே அந்தப் பேராபத்தும் பொடிப் பொடியாயிற்று.

இப்போதோ, மற்றோர் ஆபத்து—ஆபத்தா, பேராபத்து—தமிழ் மக்களை நோக்கி வேகவேகமாக வந்துகொண்டிருக்கிறது. திடீரென்று உருவாகி, மட மடவென்று வளர்ந்து, இன்று விஸ்வரூபமெடுத்து, தமிழ் மக்களின் நாடு—மொழி—இனம்—இவற்றின் வளர்ச்சி அத்தனையையும் அழித்தே தீருவேன் என்று ஆர்ப்பாட்டப் போர்ப் பாட்டுப் பாடிக்கொண்டிருக்கிறது இந்தத் திட்டம். தட்சிணப் பிரதேசம்—தட்சிணப் பிரதேசம் என்று பேசப்படுகிறதே, அந்த விபரீதம் மிகுந்த விசித்திரத் திட்டத்தைத்தான் தமிழ் நாட்டிற்கு ஏற்பட்டுள்ள மிகப் பெரிய ஆபத்து என்று நாம் குறிப்பிடுகிறோம்.

தமிழ் நாடு, ஆந்திர நாடு, கேரள நாடு, கன்னட நாடு, ஆகிய நான்கு மாகாணங்களின் எல்லைக் கோடுகளை அழித்துவிட்டு, நான்கையும் ஒன்றாக இணைத்து ஒரே மாகாணமாக ஆக்கி, அந்த இணைக்கப்பட்ட மாகாணத்திற்கு ஒரே கவர்னர், ஒரே சட்டசபை, ஒரே அரசாங்கம் என்று ஏற்படுத்தவேண்டுமாம். இப்படி ஏற்படுத்துகிற அமைப்பிற்குத்தான் தட்சிணப் பிரதேசம் என்று பெயராம். இப்படி ஒரு பிரதேசம் அமைந்துவிட்டால், இந்தியாவின் ஒற்றுமை வானுற ஓங்கி வளம் பெறச் செழிக்குமாம். சொல்கிறது இது போல இந்தியப் பேரரசு.

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும், தமிழ் மொழியின் சிறப்புக்கும் தமிழ் இனத்தின் செழிப்புக்கும் பெருங்கேடு விளைக்கக்கூடிய



திட்டம் இதைவிட வேறென்ன இருக்க முடியும் என்று நமக்குப் புரியவில்லை.

தமிழ் நாடு என்பது தனி மாகாணமாக இருந்தால், அந்த மாகாணத்தில், அரசாங்க நடவடிக்கைகள் அனைத்தையும் தமிழ் மொழியிலேயே நடத்த முடியும். சட்ட சபையின் நிகழ்ச்சிகளைத் தமிழிலேயே ஆற்ற முடியும். உயர்நீதி மன்றம் உட்பட எல்லா நீதி மன்றங்களிலும் தமிழிலேயே நடவடிக்கைகளை நிகழ்த்த முடியும். கல்லூரிகளில், வரலாறு—விஞ்ஞானம்—பொருளாதாரம் முதலிய எல்லாப் பாடங்களையும் தமிழிலேயே பயிற்றுவிக்க முடியும்.

இதைப் போலவே, ஆந்திர மாகாணம் தனியாக இருக்குமானால், அந்த மாகாணத்தின் சட்டசபை—அரசாங்கம்—கல்லூரிகள்—நீதி மன்றங்கள் ஆகிய நால்வகைத் துறைகளிலேயும் தெலுங்கு மொழி களிநடம் புரிந்து கவினுற வளரும்.

இந்த வகையிலேயே, கேரள மாகாணமும், கன்னட மாகாணமும் தனித் தனியாக அமையுமானால், அந்தந்த மாகாணத்தில் அந்தந்த மொழி, ஓங்கி வளர்ந்து உயர் இடம் பெற்றுத் திகழும்.

இப்படியெல்லாம் தனித் தனி மாகாணங்களாக அமையாமல், இந்த நான்கு மொழிவழிப் பகுதிகளும் ஒன்றாக இணைக்கப்பட்டு ஒரே மாகாணமாக அமையுமானால், அப்படி அமையும் தட்சிணப் பிரதேசத்தில், இந்த மொழிகளில் எது ஒன்றும், கல்லூரி மொழியாக ஒளி வீச இயலாது. அரசாங்க மொழியாக நல்லிடம் பெற முடியாது. நீதிமன்ற மொழியாக ஓங்கி வளர்தல் நடக்காது. சட்டசபை மொழியாகப் பவனி வருதலும் நிகழாது. ஆம்! தட்சிணப் பிரதேசம் உருவாகுமானால், தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம்—இந்த நான்கு மொழிகளுக்கும், அவற்றிற்கு நியாயமாகக் கிடைக்கவேண்டிய உயர்ந்த இடங்கள் கிடைக்காமற் போய்விடும். அந்த உயர் இடங்களெல்லாம் அந்த மொழிகளுக்குக் கிடைக்காமற் போய்விடுமானால், அந்த மொழிகளின் வளர்ச்சி கட்டாயம் தடைப்படும். எந்த ஒரு மொழியானாலும், அந்த மொழி விரைந்து வளரவேண்டுமானால், அந்த மொழியில் சிறந்த இலக்கியங்களும் உயர்ந்த சொற்கள்—சொற்றொடர்களும் இருந்துவிட்டால் மட்டும் போதாது. அந்த மொழிக்கு, அரசாங்க அலுவல் மொழி—சட்டமன்ற நிகழ்ச்சி மொழி—நீதிமன்ற நடவடிக்கை மொழி—கல்லூரிகளின் பயிற்சி மொழி ஆகிய இந்த உயர்ந்த இடங்களும் கிடைத்தேயாகவேண்டும்.

ஆங்கில மொழி, இன்றைய தினம், பிற மொழியினரெல்லாம் பார்த்துப் பொறாமைப்படும் அளவுக்கு வளர்ந்திருக்கிறதென்றால்

அதற்கு ஒரு முக்கியமான காரணம், மேற் குறிப்பிட்ட நால்வகை இடங்களும் அந்த மொழிக்குச் சென்ற பல நூற்றாண்டுகளாகத் தங்கு தடையின்றி வழங்கப்பட்டிருப்பதேயாகும்.

அதுபோலவே, தமிழ் முதலிய தென்னாட்டு மொழிகள் போதுமான அளவுக்குச் சிறப்பும் செல்வாக்கும் பெறவில்லையென்றால், அதற்குக் காரணமும், மேற்குறிப்பிட்ட நான்கு இடங்களும் இம் மொழிகளுக்குத் தரப்படாததேயாகும்.

ஆங்கிலேய ஏகாதிபத்யம் இந்த நாட்டில் பவனி வந்தவரையில், இந்த உயர் இடங்களிலெல்லாம் இந்த நம் மொழிகளுக்குத் தரப்படாமல் இருந்தது. அதிலே வியப்பும் இல்லை. பிறநாட்டைச் சேர்ந்த ஏகாதிபத்ய ஆட்சி ஒன்றிற்கு நம் நாட்டின் சிறந்த மொழிகளுக்கு உயர்ந்த இடங்களை அளித்து அவற்றை வளர்க்கவேண்டும் என்கிற அக்கறை எப்படி இருக்க முடியும்?

ஆனால் வெள்ளையர் ஆட்சி அழிந்து நம்மவர் அரசு நிலை நாட்டப்பட்டுள்ள இந்தக் காலத்தில்கூட, நம்முடைய மொழிகளுக்கு அவற்றிற்கு உரிய உயர் இடங்கள் தரப்படவில்லையென்றால், அதை விட நாம் நம் தாய்மொழிகளுக்கு இழைக்கக்கூடிய துரோகம் வேறொன்றிருக்க முடியாது.

என்றாலும் இப்படிப்பட்ட துரோகத்தைத்தான் நம்முடைய மொழிகளுக்கு மனம் துணிந்து இழைக்கிறது தட்சிணப் பிரதேசம் என்கிற திட்டம். இந்தத் திட்டம் மட்டும் அமுலுக்கு வந்துவிடுமானால், மேற்குறிப்பிட்ட நான்கு இடங்களும், ஒன்று, இப்போது இருப்பதைப் போல ஆங்கிலத்திற்கே தொடர்ந்து வழங்கப்படும். அல்லது, வடநாட்டு இந்திக்கு அந்தச் சிறப்பு அளிக்கப்படும். எப்படியும் தென்னாட்டு மொழிகளுக்கு அந்த இடங்கள் கிடைக்கமாட்டா. இது உறுதியினும் உறுதியாகும். ஏனெனில், தமிழ் தெலுங்கு கேரளம் கன்னடம் ஆகிய நான்கு மொழிகளில் எந்த ஒரு மொழியை ஆட்சி மொழியாக்கினாலும் ஏனைய மூன்று மொழியினர் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். அதுபோலவே இவற்றில் எந்த மொழியைக் கல்லூரிப் பயிற்சி மொழியாக்கினாலும் அல்லது நீதிமன்ற மொழியாக்கினாலும் அல்லது சட்டசபை மொழியாக்கினாலும், ஏனைய மொழிவழியினர் அந்த ஏற்பாட்டை ஏற்கமாட்டார்கள். எனவே இந்த இடங்களெல்லாம் இந்தி மொழிக்கு அளிக்கப்பட்டு, இந்தியின் இரும்புப் பிடி தென்னாட்டு மக்கள்மீது மேலும் வலுப்படவே வழி ஏற்படும்.

தட்சிணப் பிரதேச அமைப்பால், தென்னாட்டு மொழிகள் கீழே தள்ளப்பட்டு, அவற்றின் முதுகுமீதமர்ந்தபடி இந்தி மொழி



ஆதிக்கம் செலுத்தும் என்பது மட்டுமல்ல, கேரளர்—கன்னடர்—ஆந்திரர்—தமிழர் ஆகியோருக்கிடையே ஓயாத பகையும், பிணக்கும் நிச்சயம் உண்டாகும்.

உத்தியோகங்கள் பெறுவதில், கல்லூரிகளில் மாணவர்கள் அனுமதிக்கப்படுவதில், மந்திரிசபை அமைப்பதில், சட்டசபை அலுவல்களை நடத்துவதில், பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள் தீட்டுவதில், நீர்ப்பாசன வசதிகளைப் பங்கிட்டுக்கொள்வதில், ஒவ்வொன்றிலுமே, பூசல் உண்டாகி, பூசல் பகையாக மாறி, பகை போராட்டமாக உருவெடுத்து, நால்வகை மொழியினரும், ஒருவரை ஒருவர் தீராத விரோதிகளாக எண்ணி உறுமும் துர்ப்பாக்கிய நிலைமையே உருவாகும். சகோதர மொழியினராகிய நால்வரும் இங்ஙனம் ஒருவரை ஒருவர், முறைத்துப் பார்த்தும், மோதுதல் நிகழ்த்தியும், விரோதித்து வாழ வைக்கும் விபரீதம், தட்சிணப் பிரதேச ஏற்பாட்டின் தனிச் சிறப்பாகும். இந்தத் தனிச் சிறப்பை, தென்னாடு, எதற்காக ஏற்கவேண்டும்?

இன்றைய தினம், தமிழருக்கும் கேரளருக்கும் இருக்கும் பூசலெல்லாம், தேவிகுளம் பீர்மேடு போன்ற சில வட்டாரங்கள், அவர்களுக்கா நமக்கா என்பதில் மட்டும்.

ஆந்திரருக்கும் நமக்கும் இருக்கும் பகையெல்லாம் சித்தூர் மாவட்டத்தின் திருத்தணி முதலிய பகுதிகள் எவருக்கு உரியன என்கிற அந்த ஒரு பிரச்னையில் மட்டும்.

அதுபோலவே, இதுபோது கன்னடருக்கும் நமக்கும் இருக்கும் பிணக்கெல்லாம், பாலாற்றின் தண்ணீரை எந்த அளவு எவர் எடுத்துக்கொள்வது என்பதில் மட்டும்.

ஆனால், 'தட்சிணப் பிரதேசம்' ஒரே மாகாணமாக அமைந்துவிட்டாலோ, பகையும் பிணக்கும் இந்த இரண்டோர் பிரச்சினைகளில் மட்டும் தலை காட்டமாட்டா. அன்றன்றாட வாழ்க்கையின் ஒவ்வோர் பிரச்சினையிலேயும், அரசாங்க நிகழ்ச்சிகளின் ஒவ்வோர் பகுதியிலேயும், வெறும் பிணக்கலல்ல—பெரும் போராட்டம் நிகழும். தனித் தனி மாகாணங்கள் அமைந்து, எல்லைப் பிரச்சினைகளும் தீர்ந்துவிட்டால், இரண்டோர் ஆண்டுகளுக்குள், இப்போதிருக்கிற பகை உணர்ச்சி அழிந்து, பூசல் மனப்போக்கு ஒழிந்து, சிடு சிடுப்பும், கடு கடுப்பும் தொலைந்து, நேசமும் பாசமும் விரைந்து வளரும். ஆனால் தட்சிணப் பிரதேசம் என்கிற ஒரே அமைப்புக்குள் நான்கு சாராரும் அடைக்கப்பட்டுவிட்டாலோ, இப்போதிருக்கிற சிறு பூசல் பெரும் பகையாக மாறுமே தவிர நேசமும் பாசமும் உருவாகமாட்டா.

கேரளப் பகுதியில் உள்ளவர்கள் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் வீதம் படித்திருப்பவர்கள். அவர்கள் அத்தனைப் பேருக்கும் அவர்களுடைய மாகாணத்திலேயே வேலை கிடைப்பது கடினம். எனவே அவர்கள் பிற பகுதிகளுக்கு வேலை தேடி ஓடிவருவது உறுதி. தட்சிணப் பிரதேசம் ஒன்றாக அமையுமானால், ஏனைய மொழி வழியினரின் பகுதிகளில், கேரள மக்களுடைய 'உத்தியோக வேட்டை' வலுப்பட்டு, அவர்களுக்கும், ஏனைய மொழியினருக்குமிடையே பெரும்பகை மூளும். இப்படி ஒரு நிலை ஏற்படுவது மலையாளச் சகோதரர்களுக்கும் நல்லதல்ல. ஏனைய மொழி வழியினருக்கும் உகந்ததல்ல.

தட்சிணப் பிரதேசம் கூடாது என்பதற்கான மற்றொரு காரணம், மக்கள் மன்றத்தின் ஆதரவு அதற்குத் துளியும் இல்லை.

ஆந்திர மாகாணத்தில் அதனை ஆதரிப்பவர் எவரையும் காணோம்.

கன்னடப் பகுதியிலோ, மைசூர் முதலமைச்சர் திரு. ஹனுமந்தையா அதனை வன்மையாகக் கண்டித்திருக்கிறார்.

மலையாளப் பகுதியிலோ, காங்கிரஸ் கட்சியும் அதன் போக்கை ஆதரிக்கும் தோழர்களையும் தவிர, ஏனையோர் அந்தத் திட்டத்தை ஏற்க மறுக்கின்றனர்.

தமிழ் நாட்டிலோ, அன்பர் இராசகோபாலாச்சாரியார் போன்ற இரண்டோர் தனி மனிதர்களைத் தவிர மற்ற அத்தனைப் பேரும், அந்த ஏற்பாட்டை முழு மூச்சோடு எதிர்த்து நிற்கின்றனர்.

பிற மொழிப் பகுதிகளில்—குறிப்பாக, கேரளத்தில்—அந்தத் திட்டத்திற்குச் சிறிதளவு ஆதரவு இருந்தாலும் இருக்கலாம். ஆனால் தமிழகத்திலோ அதற்கு ஆதரவு துளியளவும் இல்லை.

ஏறத்தாழ ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட உறுப்பினர்களையும் ஆயிரத்துக்கு மேற்பட்ட கிளைகளையும் கொண்ட திராவிட முன்னேற்றக் கழகம் அந்தத் திட்டத்தைத் தவிடுபொடியாக்கத் துடிதுடித்துக் கொண்டிருக்கிறது.

திராவிடர் கழகமும் அதன் தலைவர் பெரியார் இராமசாமியும் தமிழ் நாட்டிற்கு ஏற்பட்டுள்ள மிகப் பெரிய ஆபத்து அந்த ஏற்பாடு என்று தெரிவித்துவிட்டார்கள்.

கம்யூனிஸ்ட் கட்சியோ, அந்தத் திட்டத்தை, அதன் வேரோடும், வேரடி மண்ணோடும் கல்லி யெறிந்து ஒழித்தாக வேண்டும் என்று முழக்கமிடுகிறது.



தமிழரசுக் கழகமும் அந்தத் திட்டம் கூடாது என்கிறது. ஷெட்யூல்ட் வகுப்புச் சம்மேளனமும் ஆகாது என்கிறது.

சோஷலிஸ்ட் கட்சியும், இது மக்களின் எழுச்சியைக் குலைக்கும் மாசு படிந்த திட்டமென்கிறது. பிரஜா சோஷலிஸ்ட் கட்சியும் இது தேவையற்ற துந்துபி—வேதனையை வளர்க்கும் விசித்திரமென்கிறது.

நடிகர்கள் சார்பில் திரு டி. கே. சண்முகம், எழுத்தாளர் சார்பில் திரு நாரண துரைக் கண்ணன், தமிழர் பேரவை சார்பில் திரு சுஜபதி நாயகர், திராவிடப் பார்லிமெண்டரி கட்சியின் சார்பில் திரு சுயம் பிரகாசம், புதுவை மக்கள் முன்னணி சார்பில் கவிஞர் பாரதிதாசன்—அத்தனைப் பேரும் எதிர்க்கிறார்கள்.

தமிழ் நாட்டுக் காங்கிரசின் உயிர்நாடி என்று அழைக்கப்படும் முதலமைச்சர் காமராஜரோ, மக்களின் ஆதரவு இந்தத் திட்டத்திற்குத் துளியும் இல்லை என்று அறிவித்துவிட்டார்.

இவ்வாறாகத் தமிழ் மக்கள் அத்தனைப் பேராலும் வெறுத்து ஒதுக்கப்படுகிற ஒரு திட்டத்தைத் தமிழ் மக்கள் மீது வலுக்கட்டாயமாகத் திணிக்க எவராவது முன் வந்தால், அவர்தம் செயலை, எதேச்சாதிகாரப் போக்கு, அல்லது கொடுங்கோல் ஆட்சி முறை என்கிற சொற்றொடரால் அழைக்காமல், வேறு எந்தப் பெயரால் அழைக்க முடியும்?

போகட்டும். தட்சிணப் பிரதேசத் திட்டம் தவறுகளின் தலைமை நிலையம் என்பதை விளக்க இத்தனைக் காரணங்கள் இருக்கின்றன. அப்படி ஒரு திட்டம் தேவைதான் என்பதை விளக்கக் காரணங்கள் எவையேனும் உண்டா?

நாமறிந்த வரையில், அந்த விபரீதத் திட்டத்திற்கு ஆதரவாக இரண்டே இரண்டு காரணங்கள்தான் இதுவரை தரப்பட்டிருக்கின்றன. ஒரு காரணம், இந்தியப் பேரரசால் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது. இன்னோர் காரணம், அன்பர் ஆச்சாரியாரால் அளிக்கப்பட்டிருப்பது.

இந்தியப் பேரரசு, "மொழியின் அடிப்படையில் மாகாணங்கள் தனித்தனியாக அமையுமானால், அவற்றிற்கு இடையே பகையும் பூசலும் வளர்ந்து, இந்தியாவின் ஒற்றுமை உணர்ச்சி குலைந்துவிடும்—ஆகவே பல்வேறு மொழியினரும் ஒரே மாகாணத்தில் அமையும் தட்சிணப் பிரதேசம் போன்ற அமைப்புகளே தேவை" என்று தெரிவிக்கிறது.

அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் கொஞ்சமும் பொருந்தாத போலி வாதம் இது.

பல்வேறு மொழியினர் ஒரே மாகாணத்தில் இருக்கும்போதுதான், நாம் முன்னரே தெரிவித்திருப்பதுபோல, பகையும் பூசலும் நித்திய நிகழ்ச்சிகளாகிவிடும். தனித்தனி மாகாணங்கள் உருவாகி, அவரவரும் தனிக் குடித்தனம் செய்தால்தான், முதலில் உள்ள சிறிதளவு பூசலும் நாளடைவில் குறைந்து, அன்புணர்ச்சியும், தோழமைக் கருத்தும் பூத்துக் காய்த்துக் கனியாகி வளம் தரும். எனவே இந்தியப் பேரரசின் வாதம், உண்மைக்கு மாறானது என்பது உள்ளங்கை நெல்லிக் கனியென விளங்கும்.

"தமிழ் நாடு தனி மாகாணமாக அமைந்துவிட்டால் அதன் பரப்பளவு மிகச் சிறியதாக இருக்கும். மத்திய அரசாங்கத்தில் அதன் பிரதிநிதிகளுக்குப் போதிய மதிப்போ நல்ல செல்வாக்கோ கிடைக்காது. தட்சிணப் பிரதேசம் ஏற்பட்டால்தான் பெரியதோர் பரப்பளவு உருவாகி, சிறந்ததோர் செல்வாக்கு டில்லிப் பட்டணத்தில் நமக்குக் கிடைக்கும்.'—இது, முன்னாள் முதல்வர் ஆச்சாரியார் அவர்களின் வாதம். இந்த வாதமும் நேர்மையானது அல்ல. டில்லிப் பட்டணத்தில் நமக்குப் போதுமான செல்வாக்கு கிடைக்காததற்குக் காரணம், நம்முடைய மாகாணம் சிறியதாக இருக்கிறது என்பதல்ல, டில்லியின் அரசு, வட்நாட்டவரின் பிடியில் சிக்கியிருக்கிறது என்பதுதான். மத்திய அரசாங்கத்தில் வட நாட்டவரின் ஆதிக்கம் இருக்கும்வரையில்—நம்முடைய மாகாணம் சிறியதாக இருந்தாலும் பெரியதாக இருந்தாலும்—நமக்குச் செல்வாக்கு கிடைக்கத்தான் கிடைக்காது. தென்னாட்டு மாகாணமொன்று பெரியதாக இருப்பதாலேயே டில்லியில் அதற்குப் போதுமான செல்வாக்குக் கிடைத்துவிடுவது உறுதி என்றால், ஆந்திர மாகாணம் தனியாகப் பிரிவதற்கு முன்னால், சென்னை மாகாணம் ஏறத்தாழ 6 கோடி மக்களைக் கொண்ட மிகப் பெரிய மாகாணமாகத்தானே இருந்தது—என்றாலும், டில்லியில், அந்தக் காலத்திலும் நமக்குச் செல்வாக்கு ஏற்படவில்லையே, ஏன்?

எனவே, எந்த வகைக் காரணங்களை முன்வைத்துப் பார்த்தாலும் சரி, தட்சிணப் பிரதேசம் என்கிற ஏற்பாட்டால் பொதுவாகத் தென்னாட்டவர்க்கும், சிறப்பாகத் தமிழ்மக்களுக்கும். தீமையே விளையும் என்பது முழு உறுதியாகும்.

தமிழ்நாட்டிற்கு ஏற்பட்டுள்ள மிகப் பெரிய ஆபத்து இது, இந்தப் பேராபத்தை ஒழித்துக் கட்டும் முயற்சியில், தமிழ் மக்கள் அத்தனைப் பேரும் உடனடியாக ஈடுபட்டாகவேண்டும். இந்தப்



பொல்லாத அமைப்பை முளையிலேயே கிள்ளியெறிந்தாகவேண்டும். தனிப்பட்ட முறையிலும், அமைப்பு வகையிலும், ஆயிரக் கணக்கில் கண்டனத் தீர்மானங்களை நிறைவேற்றி இந்தியப் பேரரசுக்கும் சென்னை அரசாங்கத்திற்கும் அனுப்பி வைக்கப்படவேண்டும். தலைக்கு மேல் ஆபத்து சூழ்ந்துவிட்ட நேரம் இது. எனவே தமிழ் மக்களே துளியும் தாமதிக்காதீர்கள். சிங்க ஏறுகளெனத் துள்ளி எழுங்கள். ஒழிக தட்சிணப் பிரதேச அமைப்பு என்று ஓங்கி முழங்குங்கள். தமிழ்நாட்டின் நியாயமான பகுதிகள் அத்தனையும் உள்ளடங்கிய தமிழ் மாகாணம் தனி மாகாணமாக அமைந்தாக வேண்டுமென்பதை அழுத்தந் திருத்தமாக ஆட்சியாளர்களுக்கு அறிவியுங்கள்.

தட்சிணப் பிரதேசம் ஒரே மாகாணமாக அமைந்துவிட்டால், தமிழ் மக்களின் தன்மானம் பறிபோகும். மக்களாட்சிக் கோட்பாடு சுக்கு நூறாகும். வெளி நாடுகளில் தமிழர்கள் திக்கற்றவர்களாய்க் கூலிகளாய் ஏழை மக்களாய்த் தேம்பித் தவிக்கும் நிலை, தமிழகத்திலேயே உண்டாகிவிடும், மாகாணத் தன்னாட்சி, வெறும் முனிசிபல் ஆட்சியளவுக்குக் குறைந்து, மத்திய ஆட்சியின் இரும்புப் பிடி மேலும் வலுத்துவிடும். மொழிவழி மாநிலம் என்கிற மக்கள் மன்றத்தின் நீண்ட காலக் கோரிக்கை குழி தோண்டிப் புதைக்கப்பட்டுவிடும்.

அத்தகையதோர் பரிதாப நிலைமை—பயங்கர நிலைமை என்றும் சொல்லலாம்—ஏற்பட்டுவிட துளியும் இடம் கொடுக்காதீர்கள்.

ஆரம்ப ஆசிரியர்களே, அருமை மானேஜர்களே, அன்புள்ள தமிழ் இனத்தவரே, தட்சிணப் பிரதேசம் என்கிற படுகுழி வேக வேகமாகத் தயாரிக்கப்பட்டு வருகிறது. அதிலே, தமிழகம், தப்பித் தவறி விழுந்துவிட்டால், மீண்டும் எழுந்து வீர நடை போடுவது சிறிதும் இயலாத செயலாகும்.

இந்த உண்மையை நெஞ்சில் நிறுத்துங்கள். நற்றமிழ் நாட்டை அந்தப் படுகுழியில் விழாவண்ணம் காப்பாற்றுங்கள்.

உங்கள் தமிழ் நாட்டுக்கு—நண்பர்களே—உங்களுடைய தமிழ் நாட்டுக்கு நீங்கள் செய்யவேண்டிய கடமை இது.

புறப்படுங்கள் நண்பர்களே புறப்படுங்கள். கடமையை ஆற்ற, நிலையை நிலை நாட்ட, தமிழ் மொழிக்கு உயர் இடம் பெற்றுத் தர, தமிழ் இனத்தின் தன்மானத்தைப் பாதுகாக்க உடனே புறப்படுங்கள்.

# அவளும் தாய்!

[சி. என். இரமேஷ்]

வீட்டுத் திண்ணைமீது நின்று காலையிலே நடைபெறும் அழகிய காட்சிகளைப் பார்த்துக்கொண்டிருந்தது ஒரு குழந்தை. பாலைத் தரும் பசுவும் அதனை நீங்காத கன்றும் மெல்ல அசைந்து சென்றன. சின்னஞ்சிறு நாய்க்குட்டிகள் குலைத்து ஆடித் திரிந்தன. பள்ளிச் சிறுவர் ஆடி ஓடி மகிழ்ந்தனர். இவற்றையெல்லாம் அங்கிருந்து கண்ட குழந்தைக்கு என்னவோ செய்தது. ஏதோ ஓர் உணர்ச்சியை ஊட்டியது. திண்ணைமீதிருந்த குழந்தைக்கு வெளியுலகைக் காணவேண்டுமென்ற அவா உந்தியது. துணிவு கொண்டது. கீழே தத்தித் தாவி இறங்கியது. மெல்ல மெல்ல நகர்ந்தது!

சின்னஞ்சிறு கால்கள்; குறுகுறு நடந்து, சிறுகை நீட்டி வீட்டைக் கடந்து மறுகினிடையிலே நகர்ந்துகொண்டிருந்தன... குதிரைகள் பிணைந்த தேர் ஒன்று சிறிது தொலைவில் வேகமாக வந்துகொண்டிருந்தது. குழவியோ யாதுமறியாமல் நடந்தவண்ணமேயிருந்தது. தேரோ கிட்டே நெருங்கிவிட்டது! அதைத் தற்செயலாகக் கண்ணுற்றாள் ஒரு மடந்தை! கலக்கம் அவளை உலுக்கியது! அதே நேரத்தில் தயக்கமும் அவளைத் தடுத்து நிறுத்தியது. பின்னர் தானாகவே துணிவும் பிறந்தது ஓடினாள்... வாரி எடுத்தாள் அள்ளி அணைத்தாள். அந்த உலகம் அறியாச் சிறுவன் ஒன்றும் புரியாது திகைத்தான்.

அந்தக் காட்சியை, மகனைத் தேடி வந்த தாய், வீட்டு வாயிலினின்று கண்டாள். அவள் கண்கள் மங்கின. மங்கின அதே கண்கள் சிறிது நொடியில் மலர்ந்து விரிந்தன. வியப்பின் உணர்வுகள் அவளின் உள்ளத்தை அசைத்து ஆட்டின. அந்த ஆட்டத்திலே தன்னை மறந்து நின்றாள். சிறுவனின் அணைப்பிலே தன்னை மறந்து சாலையிலே நின்றிருந்த அந்த நங்கையும் அப்போது தான் தலையைத் தூக்கிப் பார்த்தாள். அவள் உடலில் பெரிய ஆட்டங் கண்டது, அணைப்பிலே சிக்கிக்கிடந்த சிறு மதலையைக் கீழே இறக்கினாள். நாணமும் களவும் அவளை மிகவும் எளிமைப்படுத்தின. மானமுறத் தூண்டின. அவளின் மன நிலையை நன்கு உணர்ந்து கொண்டாள் அந்தக் குழந்தையின் அன்னை.

“குற்றமற்றவளே......! நீயும் இவனுக்குத் தாயேதான்... ஏன் தயங்குகிறாய்?” என்றாள் தலைவி. அதைக் கேட்ட அந்த இளவலைக் காத்த தாய்க்குத் தன் நிலை நன்கு தெரிந்தது. தலையைக் கீழே சாய்த்தாள். நிலத்தைத் தன் கால் விரலால் கீறினாள். மயங்கி நின்றாள்.

இங்கே நம் தலைவன் - தலைவி நாடகத்தை நோக்குவோம்.

தலைவி கருவுற்றிருந்தாள். அது தலைவனுக்குப் பெருந் தொல்லையைத் தந்தது. உடலால் பயனுற இயலாத, இன்பம் தர முடியாத தலைவியைவிட்டுத் தலைவன் நீங்கினான். காமக் கிழத்தியினிடம் தஞ்சம் புகுந்தான். தன்னை மறந்தான். மகிழ்ந்து மயங்கினான்.

நாட்கள் பல உருண்டு மாதங்களாகிக் கடந்துவிட்டன.

குழந்தை பிறந்தது. செய்தியும் தலைவனுக்கு எட்டியது! அவன் மகிழ்ந்தான். தான் ‘தந்தை’ யாகிவிட்ட இன்பம் அவனை விம்மிப் பெருக்கியது. குழந்தையைக் காணவேண்டும்; குலவி மகிழவேண்டும் என்றெல்லாம் அவன் உள்ளம் உந்தியது; அதே நேரத்தில் தலைவியை எண்ணியது!

இத்தனை காலம் அவளை விட்டு நீங்கி வேறு யாருடனோ — எங்கிருப்பவளுடனோ — இயந்திரம் போல் உணர்வின்றி இயங்கி வாழும் அன்பற்ற ஓர் உருவத்தினிடம்; உயிரினும் மேலான மானத்தை இழந்து, காமப் பிழம்பாகிக் குருதியைக் கவர்ந்து, பொன்னையும் ஈர்த்து வாழும் பொருட் பெண்டுடன், விலைமகளுடன் — இயந்திர இன்பம் துய்த்து நெடுநாள் நிலைத்துவிட்டதான் — அன்பே உருவாகி அறமே பண்பாகி வாழ்ந்து வரும் தலைவியை எப்படிக் காண்பது? இத்தனை நாள் எவ்வளவு நொந்து வருந்தினளோ? வருத்த மிகுதியிலே சீற்றங்கொண்டாளோ? அய்யோ... ...அவள் இப்போது என்மீது தீராத... ...ஊடல் கொண்டிருந்தால்..... என் செய்வேன்? என்றெல்லாம் அவன் உள்ளம் கலங்கியது. உறுதி பிறக்கவில்லை. தளர்ந்து தயங்கினான். பாணனை அனுப்பினான். தலைவியைத் தணிவுகொள்ளச் செய்தான். குழந்தை பிறந்த பின்னரும் தலைவன் வரவில்லையென்று தெரிந்து தலைவி உண்மையிலே சீற்றங் கொள்ளுகிறாள்... ஊடுகின்றாள்... இப்படிக் காலங் கடக்கிறது. ஒரு நாள் தலைவன் வந்தான். தலைவி பேசவில்லை. அவளின் மாறாத ஊடலைக் கண்டு அவன் அஞ்சினான். தணிக்க முயன்றான். ஏதேதோ மாற்றங்களைக் கொண்டான். அவள் வெகுண்டாள்: ‘சீறி விழாதே’ என்று அவள் சீறடி தொழுதான். மன்னிக்குமாறு மன்றாடினான். அவள் மறுத்தாள். சிறிய அமைதி நிலவியது.

“என் தங்கை நலந்தானே... ...?” என்று துடுக்காகத் தலைவி ஒரு வினாவைக் கேட்டாள். அவன் குழம்பினான். பின்னர் நுட்பம் மெல்ல மெல்லப் புரிந்தது. தான் இத்தனை காலம் தங்கிவிட்டு வந்த ‘பரத்தை’ யைத்தான் தலைவி, என் ‘தங்கை’ என்று, ‘இளைய தலைவி’ யென்ற

பொருளிலே குறும்பாகக் குறிப்பிட்டான் என்பதை உணர்ந்தான். அறியாதவன்போல் நடித்தான்.

“எனக்கு யாரையுமே தெரியாதே...... உன்னைத் தவிர...... இது ஏது புதிதா... த...ங்...கை...!” என்றான்.

“ஓகோ! அப்படியா......? இடையிலேகூடக் கண்டேனே அவளை.”

‘ஏது’— உண்மையாகவோ?”

“தேர் ஓடும் தெருவிலே தனியாக நடந்து சென்ற நம் குழந்தையைத் தற்செயலாக அவள் கண்டாள். உங்களுடைய ‘சாயல்’ அவனுக்கு இயைந்திருந்ததைப் பார்த்து நின்றாள். அவன் அருகே சென்றாள்! “வருக என் உயிரே!” என்று மகிழ்ந்து விளம்பி அள்ளி அணைத்தாள். தற்செயலாக அந்தப் பக்கமாக நான் சென்றேன். அவன் அணைப்பிலே மகிழ்ந்திருந்த அவள் என்னைக் கண்டாள்; பதட்டம் அவளை அலைத்தது. உடல் வியர்த்தது. நான் தயங்காமல் பேசினேன். “நீயும் அவனுக்குத் தாயே ஆவாய்” என்றேன்! அவள் நிலை வெளிப்பட்டது. உள்ளம் தளர்ந்தது. களவுப் பண்பு உள்ளத்திலிருந்து உந்த உடலைத் தாக்கியது. மனம் வெதும்பினாள். தலையைக் கீழே சாய்த்தாள். நிலத்தை அவள் தன் கால் விரலால் கீறினாள்; மயங்கி நின்றாள் — அவள்தான் என் தங்கை—தங்களது பரத்தை என்று துடிப்போடு பேசி முடித்தாள். தலைவனோ இஞ்சி தின்ற ‘.........’ போல விழித்துத் தவித்தான்.

இதோ அப்பாடலின் அடிகள்.

“........தேர்வழங்கு தெருவில் தமியோற் கண்டே
கூரெயிற் றரிவை குறுகினள் யாவரும்
காணுந ரின்மையிற் செத்தனள் பேணி...
..........................................................
வருக மாளவென் னுயிரெனப் பெரிதுவந்து
கொண்டனள் நின்றோள் நிலைகண்டு செல்லேன்
மாசில் குறுமக ளெவன்பே துற்றனை
நீயுந் தாயை யிவற்கென யான்றற்
கரைய வந்து விரைவனென் கவைஇக்
களவுடம் படுநரிற் கவிந்துநிலங் கிளையா
நாணி நின்றோள் நிலைகண்டு,.....”



பெண் தன்மை மென்மை நிரம்பியது. அமைதி தோய்ந்தது. எவ்வித இடையூற்றையும் தாங்கும் பொறுமையுணர்வு அவர்களுக்கு மிகுதி. ஆயின் ஆண்மக்களோ துடிப்பும், தவிப்பும் மிக்கவர்கள். அவர்களின் நரம்பு மண்டலமும் வெம்மை தோய்ந்தே இயங்கும். எண்ணியதை உடனே செயலாற்ற வேண்டுமென்ற ‘விரைவு’ மிகுதி ஆடவர்களிடமே அதிகமுண்டு. அதனாலேயன்றோ அத்தலைவன் பரத்தை இல்லம் நோக்கிப் பாய்ந்தான். அவளையே இன்னல் தீர்க்கும் தெள்ளிய மருந்தென்று நம்பி மகிழ்ந்தான். இல்லாளையும் மறந்தான்.

ஆயின் தலைவி அப்படியல்லளோ! அவள் பெண்...! பொறுமையின் குன்றம் — பண்பின் ஊற்று! இயற்கை அவளுக்கு மட்டும் உணர்வுகளை வழங்கவில்லையா? தலைவனைப் போன்ற உணர்ச்சிப் பெருக்கு அவளுக்கு மட்டும் இருக்காதா? அன்றி இருக்கக்கூடாதா? இருந்தாலும் அவள் என் செய்வாள்? தலைவனை என்ன! நினைத்தவுடனேயே அய்ந்து மகிழ்ந்து தீர்த்துவிட வேண்டுமென்ற துடிப்பு மிகுதி அவளிடம் காண? இல்லை! அந்தத் துடிப்புத் தன்மை பெண்ணினத்தின் பெரும் பகுதிக்கே இல்லை!—ஏன்? உணர்வுகள் மெல்ல மெல்லவே நங்கையரின் உள்ளங்களில் உருவாகின்றன. அமைதியாகவே அவை உடலில் பதியத் தொடங்குகின்றன. நிலைத்து அமைகின்றன. வாழ்கின்றன! அதைத்தான் ஆண்களில் பெரும்பாலானவரிடத்தில் காண இயலாதே! ஏன் ஒரு சில பெண்களிடத்திலே—மிகச் சில பெண்களிடத்திலே அந்தப் ‘பெண் – தன்மை’ பொதுத் தன்மை இருப்பது அரிதேயாம். அவர்களைத்தான் “பெண்ணென வந்ததோர் மாயப் பிசாசு” என்று பாடினார்போலும் பட்டினத்தடிகள்! அவர்களைப் பற்றி கவலையில்லை. ஆயின் அவர்கள்தான் அத்தகைய தன்மை மிகுந்த ஆண்களை ஏங்கித் தாங்கும் பாத்தையராகின்றனர்.

தியாகத்தின் பெருமையை உலகில் அனைவரும் போற்றுகின்றனர். வரலாறும் குறைவின்றிப் புகழ்கின்றது! இலக்கியமும் இறவாது பாடுகின்றது! பலர் பலப்பல தியாகங்களைச் செய்துள்ளார்கள்! களத்திலே மார்பு காட்டிப் போர் புரிந்து வீரத் தியாகம் புரிந்தவர்களும், அளவிலாத செல்வத்தை அரிய செயல்களுக்கு ஈந்து செல்வத் தியாகம் கொண்டவர்களும், தூய காதலின் தோல்வியிலே உயிரைத் துறந்து தியாகத்தின் உயர்வை உலகிற்குக் காட்டியவர்களும், இடைக் காலத்திலே – ஆங்கிலப் பேராசை எதிர்த்துச் சிறை சென்ற தியாகிகளுமாகப் பலப் பலர் இந்த நாட்டிலே நிரம்ப உண்டு. நித்த நித்தம் அவர்களின் புகழைப் பாடுவோரின் எண்ணிக்கையும் மிகுதியுண்டு.

ஆயின் கட்புலனாகாத அரும் பெருந்தியாகங்களை அன்றாட வாழ்விலே முடித்துச் செல்லும் மங்கையர்களை இந்த உலகம் உணர்வதில்லை. உணர்ந்து போற்றுவதில்லை! ஏன் அவ்வளவு தொலைவு? அவர்களின் கணவர் பெருமக்களே அந்தப் பெருந்தியாகங்களைத் தெரிந்து உணர்வதில்லையே! என் செய்ய? நெடுங்காலமாகவே இம் மாநிலம் அவ்வாறு இயங்கி வந்துள்ளதே!

சிறிது ஆழ நினைப்போம்!

தலைவனின் இன்ப துன்ப உணர்வுகளில் பெரும் பங்கு கொண்டு மகிழ்விப்பதையே வாழ்க்கையாகக் கொண்ட தலைவியை மறந்து. பொங்கி யெழும் உணர்வுகட்கு உடனடியாக அடிமைப் படுகின்றான். பரத்தையின் வீடே 'பரலோகம்' என்று தவங்கிடக்கின்றான். அவனுக்கிருந்த உணர்வுகளனைத்தும் தலைவிக்கு மிருந்திருக்கலாம். அவள் என்ன செய்வாள்; திரும்பத் திரும்ப அந்தத் தோழியிடமே கூறிப் புலம்பியிருப்பாள். அழுது அலைந்திருப்பாள். தன்னைத் தாக்கின உணர்வுகளைத் தடுத்து நிறுத்த முயன்றாள். சிறுகச் சிறுக அவ்வாறே பயின்றுள்ளாள். மெல்ல மெல்லப் பெருந்துன்பத்தைத் தாங்கும் பேராற்றலையும் அவள் பெற்று விடுகிறாள்! அஞ்சா நெஞ்சம் கொள்ளுகிறாள்! இயற்கையை வெல்லுகிறாள்! இதைவிடப் பெருந்தியாகம் உலகில் உண்டோ?

அது போகட்டும்.

அன்று சாலையிலே தன் மகனை வேறொருத்தி; தன் உள்ளத்திலே வேதனைப்புயலைக் கிளப்பித் தன் கணவனையும் தன்பால் ஈர்த்த அந்த வேசி மகள்—விலைமாது—காமக்கிழத்தி அணைத்திருந்த நேரத்தில் சினம் பொங்கக் கூவிக் கண்டவாறு ஏசியிருக்கலாம்; அப்போது அவளைக்கண்ட தலைவி! அதுதானில்லை! என்ன இருப்பினும் தலைவி பெண்ணல்லளோ? ஆதலினாலன்றோ "நீயும் அவனுக்குத் தாயே ஆகுவை" என்று பகர்ந்தாள்! உளமகிழ்ந்து தன் உயிர்ப் பண்பை, உயிராற்றலை வளர்க்கும் நல்ல பண்பை, பெருந்தன்மையை வெளிப்படுத்தினாள். என்னே பெண்மை! அதனாலேயன்றோ "பெண்ணின் பெருந்தக்க யாவுள" என்றார் வள்ளுவப் பெருந்தகை!

இன்றைய அவலம் நிரம்பிய உலகம் ஓரளவில் ஒழுங்காக இயங்கிச் செல்லுவதற்கு அந்தத் தலைவியைப் போன்ற பெண்மக்களின் பெருந்தன்மையும் ஒரு விழுமிய துணையேயாகும்!

**— சென்னை பச்சையப்பன் கல்லூரி ஆண்டு இதழ்.**

# சென்னை மாநில எய்டட் பள்ளி மானேஜர்கள் சங்கம்

## பொதுச் செயலாளர் அறிக்கை

### புதிய சம்பள நஷ்டஈடு

**R. C. No. 1463 Dated 23–11–55** உத்தரவுப்படி, ஜூன் 55 முதல் செப்டம்பர் (13–9–55) வரை முழு சம்பள நஷ்ட ஈடும், 14–9–55 முதல் அரசாங்கத்தார் ஏற்படுத்தியுள்ள குறைந்த நஷ்டஈடும், தற்காலிகமாக பெற்றுக்கொள்ளும்படியும் பிறகு பரிசீலனை செய்து முழு நஷ்ட ஈடு கொடுப்பதாக கனம் காமராஜர், கனம் கல்வி மந்திரி இவர்களைப் பேட்டி கண்டதில் உறுதி அளித்தனர்.

ஆனால் இதுவரை உறுதி அளித்த மூன்று மாதத்திற்கு முழு நஷ்ட ஈடும், மற்ற மாதங்களுக்குக் குறைந்த நஷ்டஈடும் இன்னும் எயிடட் பாடசாலைகளுக்கு அளிக்காமல் இருக்கிறது. இதன் விளைவாக 29–1–56 விழுப்புரத்திலும், 1–2–56 மதுரையிலும், 5–2–56 தஞ்சாவூரிலும் பல M. L. A. க்களின் தலைமையில் பல மாநாடுகள் நடத்தப்பட்டிருக்கின்றன.

25–2–56-ல் சென்னையில் சட்டசபை கூடும்பொழுது டாக்டர் வரதராசலு நாயுடு M. L. A., சர். பி. டி. ராஜன் M. L. A. போன்ற பல M. L. A. க்களைக் கொண்டு கனம் காமராஜரையும், கல்வி மந்திரியையும் பேட்டி கண்டு, இந்த நஷ்ட ஈட்டை சாதகமான முறையில் தீர்க்கப்பட வேண்டுமென்று திட்டமிட்டிருக்கின்றோம்.

இந்த அறிக்கையைக் கண்டதும் அந்தந்த மாவட்டத்திலுள்ள மானேஜர்கள், அந்தந்த மாவட்டத்திலுள்ள M, L. A. க்கள், M. L. C. க்களைக் கண்டு கூடுமானால் அந்தந்த வட்டாரத்திலுள்ள சங்க நிர்வாகிகளும் பாதிக்கப்பட்ட மானேஜர்களும் M. L. A.க்களுடன் சென்னைக்கு வந்திருந்து, தனிப்பட்ட முறையிலேயோ அல்லது கூடுமானால் முன்னறிக்கையாக மாகாண சங்கத்திற்கு தெரியப்படுத்தி மாகாண சங்கத்தின் நிர்வாகிகளுடன் கலந்து பேட்டி காணவோ ஏற்பாடு செய்ய, ஜில்லா மானேஜர்கள் சங்கங்களைக் கேட்டுக்கொள்கின்றேன். ஏனெனில் சென்னையில் உள்ள மானேஜர்கள் மட்டும்தான் நஷ்ட ஈட்டுக்காகக் கிளர்ச்சி செய்கிறார்கள் என்றும், ஜில்லாக்களிலுள்ள மானேஜர்கள் அரசாங்கம் வீதித்த குறைந்த

நஷ்ட ஈட்டை ஒப்புக்கொள்கிறார்கள் என்றும், ஜில்லாக்களில் கிளர்ச்சி ஏதுமில்லை யென்றும் கல்வி அதிகாரிகள் தப்பாக அரசாங்கத்திற்கு அபிப்பிராயம் கூறிவருவதாகத் தெரிகின்றது. இந்தத் தப்பு அபிப்பிராயத்தைப் போக்குவதற்காகவே குறைந்த காலத்தில் மூன்று ஜில்லாக்களில் மூன்று மாநாடுகளைக் கூட்டியிருக்கின்றோம். இன்னும் பல ஜில்லாக்களில் பல மாநாடுகளைக் கூட்ட ஏற்பாடு செய்து கொண்டிருக்கின்றோம்.

இந்த மாதக் கடைசியில் நடக்கப்போகும் சட்டசபைக் கூட்டத்தில் சம்பள நஷ்ட ஈட்டைப் பற்றிய பிரச்சினையைக் கிளப்பி விவாதிக்க ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறோம்.

ஆதலின் ஜில்லாக்களிலுள்ள மானேஜர் சங்கத்தார், குறிப்பாக செல்வாக்குள்ள மானேஜர்கள் பொறுப்பை மாகாண சங்கத்தின்மீது மட்டும் போட்டுவிட்டு, உறங்கிக் கிடந்தால் காரியம் வெற்றி பெறாது. ஆதலின் இன்றே தங்கள் ஊர்களிலுள்ள **M. L. A.** க்களைக் கண்டு நஷ்ட ஈட்டைப்பற்றி அவர்களுக்கு விளக்கி, மந்திரிமார்களைக் காணும்படி செய்யவேண்டும். ஜனநாயக ஆட்சியில் குறைகளை அகிம்சா முறையில் கிளர்ச்சிகள் செய்தால்தான் நம்முடைய குரல் ஆட்சியாளர்கள் செவியில் ஏறும். காரியமும் கைக்கூடும்.

**P. வீரராகவன்**
தலைவர்.

**A. R. சேஷாசலம்**
பொதுச் செயலாளர்.

**94-95, புதுத் தெரு, மண்ணடி, சென்னை—1.**

## அறிவுக் கதிர்

செருக்கு முன்னால் போகிறதா? அப்படியானால், அவமானம் பின்னாலேயே வரும்! ஐயம் வேண்டாம்!

— ஜார்ஜ் சாப்மன்.

என் வாலிப நண்பர்களே! நீங்கள் பலசாலிகள் ஆகுங்கள்! உங்களுக்குக் கீதையைவிட, மதஏடுகளைவிட உடற்பயிற்சிதான் உடனடித் தேவை.

— விவேகானந்தர்.

ஒரு மனிதனால் சிறிதளவும் பொறுக்க முடியாத மிகப் பெரிய துன்பம் எது என்கிறீர்களா? ஒரு முட்டாளின் முட்டாள்தனமான பேச்சுதான்! வேறு எது?

— ஸ்பென்சர்.

# தேயிலையும் திராவிடமும்

ஆலையிலே வேலை செய்து அலுப்போடு திரும்பும் தொழிலாளியும், காலை முதல் மாலை வரை கழனியிலே உழைத்து, ஓய்ந்து களைப்போடு திரும்பும் விவசாயியும் காணாமல் கள் குடித்தாலும், காப்பி, டீக் குடிப்பதில் இப்போது தங்கள் கவனத்தைத் திருப்பி இருக்கின்றனர். திராவிடத்திலே மது விலக்கு அமுலான பின்பு, காப்பி, தேநீர் குடியர்களின் தொகை அதிகரித்து வருகிறது.

நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவில் தேயிலை பயிராகவில்லை! டீ என்றால் என்னவென்றே பெரும்பாலான மக்களுக்குத் தெரியாது. ஆங்கிலேயர் இந்திய உபகண்டத்தை ஆளத் தொடங்கிய பின்பு, அவர்களால் கொண்டுவந்து பயிராக்கப்பட்டவற்றுள் தேயிலையும் ஒன்று. இன்று இங்கே தேயிலை பெருவாரியாக விளைந்து, பிரிட்டனுக்கும் பிறநாடுகளுக்கும் பெருவாரியான அளவில் ஏற்றுமதியாகிறது.

திராவிடத்தின் மலைகளிலும் மலைசார்ந்த சரிவுகளிலும் சுமார் 4000 அடிக்குக் குறைவான இடங்களில் தேயிலை விளைகிறது. கோவை, கொச்சி, குடகு, மைசூர், மதுரை, மலபார், வயநாடு, நீலகிரி, நெல்லை, திருவாங்கூர் முதலிய இடங்கள்



தேயிலை உற்பத்திக்குத் தலை சிறந்த இடங்களாகத் திகழ்கின்றன திராவிடத்தில்! இதில் ஏறக்குறைய 80%க்கு மேல் தமிழர் வாழும் பகுதிகளாக இருக்கின்றன. (இலங்கையிலும் தமிழர் வாழும் மலைப் பகுதிகளில்தான் தேயிலை அதிகம் விளைகிறது).

தேயிலை இந்தியாவில் முதன் முதலில் பயிரானது திராவிடத்திலேதான்! 1833-ல் பிரிட்டனுக்கு சீனத் தேயிலை வருவது நின்றது. பிரிட்டனோ தேயிலை உற்பத்திக்குத் தகுதியானநாடாக இல்லை. எனவே 1834-ல் லார்டு வில்லியம் பெண்டிங் காலத்தில் முதன் முதலாக திராவிடத்தில், **நீலகிரி**யில் தேயிலை பயிர் செய்து பார்க்கப்பட்டது. இந்த சோதனையில் பெரும் வெற்றி கிட்டியது. உடனே அங்கு பயிர் செய்வதும் ஆரம்பிக்கப்பட்டது. வடநாட்டில் 1838-க்குப் பின் முதன் முதலாக தேயிலை பயிராக்கப்பட்டது.

1834—1856 இந்த இடைக் காலத்தில் தென் நாட்டிலே தேயிலையை வேறு இடங்களில் பயிராக்க முயற்சி எதுவுமே செய்யப்படவில்லை. காரணம் என்ன தெரியுமா? சில சூழ்ச்சிக்காரர்கள் தென்னாட்டிலே தேயிலை விளையாது என்ற ஒரு **கட்டுக் கதையைக்** கட்டி விட்டார்களாம். இதை நம்பிய தேயிலை

வணிகர்கள் சிலகாலம் தென்னாட்டைக் கவனிக்கவில்லையாம்.

ஆனால் 1856-ல் வணிகர்கள் விழித்துக்கொண்டனர். திரும்பவும் திராவிடத்திலே ஆராய்ச்சிகள் நடத்தினர். உண்மை புலனானது. தென்னாடு வட நாட்டை விடத் தேயிலை விளையத் தகுதியானதுதான் என்று தெரிந்துகொண்டனர். உடனே 50 கம்பெனிகள் உதயமாயின. திராவிடப் பகுதிகளில் தேயிலை மீண்டும் மிக மிக வேகமாகப் பரவிப் பயிராகத் தொடங்கியது.

இன்று உலகில் தேயிலை உற்பத்தியில் இரண்டாவது இடத்தை வகிப்பது இலங்கை. அங்கு 1875-ல் **நீலகிரி**யிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட **தேயிலை**தான் முதன் முதலில் பயிரானது! நீலகிரித் தேயிலையே மிக நேர்த்தியானது என்றும் கருதப்பட்டது.

1930-ல் உலகத்தின் தேவைக்கு 20 சத வீதம் அதிகமாகத் தேயிலை விளைந்துவிட்டது. உலகச் சந்தையில் இதனால் தேயிலை சீரழிந்தது. விலையும் வெகுவாகக் குறைந்துவிட்டது. வணிகர்களுக்கும் பெரும் நட்டம் ஏற்பட்டது. உடனே உலக தேயிலை உற்பத்தி நாடுகள் கூடின. ஒப்பந்தம் ஒன்று செய்தன. உலகில் புதிதாகத் தேயிலை பயிர் செய்யக் கூடாது. 20 சத வீதத் தேயிலையை செடியில் கிள்ளாது விட்டுவிட வேண்டும் என்று தீர்மானித்தன. இது தான் பிரசித்தி பெற்ற **உலகத் தேயிலை ஒப்பந்தம் என்று** அழைக்கப்படுகிறது!

1941—இரண்டாம் **உலகப்** பெரும் போர் மிகக் கடுமையாக நடந்துகொண்டிருந்தது. **சீனா**, ஜாவா சுமத்ரா நாடுகளின் தேயிலை நிறுத்தப்பட்டது. எனவே இந்தியத் தேயிலைக்கு, குறிப்பாக திராவிடத் தேயிலைக்கு மீண்டும் நல்ல கிராக்கி ஏற்பட்டது.

இன்று திராவிடத்தில் தேயிலை விளையும் நிலத்தின் பரப்பு சுமார் **1,70,000 ஏக்கர்!** இங்கே விளையும் தேயிலையின் அளவு **சுமார் 12 கோடி** ராத்தலுக்கு மேல்! இதில் சிறிதளவுதான் நமக்குத் தேவைப்படுகிறது. மிகுதித் தேயிலை முழுதும் மேல் நாடுகளுக்கு அனுப்பப்படுகிறது. கோடிக் கணக்கான ரூபாய்களை, இதனால் திராவிட மண், வணிகர்களுக்குத் தேடிக் கொடுக்கிறது. பிரிட்டனுக்கு மட்டும் ஆண்டுதோறும் **15 கோடி ரூபாய்** மதிப்புள்ள **திராவிடத் தேயிலை** செல்கிறது.

ஆங்கிலேயர்க்கு திராவிடத் தேயிலையில்தான் அதிக விருப்பமாம்! காரணம் இந்தத் தேயிலையில்தான் நல்ல ருசி இருக்கிறதாம்!

வடநாட்டில் தேயிலை $7\frac{3}{4}$ லட்சம் ஏக்கரில் விளைகிறது; ஏறக்குறைய அதற்கு மேல் ஒரு பங்கு பரப்பில் திராவிடத்தில் விளைகிறது. வடக்கே அஸ்ஸாம்



இல்லையென்றால், அல்லது அஸ்ஸாமை ஒதுக்கிப் பார்த்தால் வட நாட்டை விடத் தென்னாட்டில்தான் தேயிலை அதிகம்.

திராவிடத்தையும், அஸ்ஸாமையும் ஒப்பிட்டுப் பார்த்தால், தேயிலையைப் பொருத்தவரையில் அஸ்ஸாமோடு போட்டி போட்டு வெற்றி பெறத் தக்க சூழ் நிலைகள் திராவிடத்திற்கு உண்டு என்ற உண்மை சிலருக்கு அதிர்ச்சியூட்டும்; பலருக்கு ஆச்சர்யத்தைக் கொடுக்கும்!

1940-ல் திராவிடத்தில் 1,65000 ஏக்கரில் பயிரான தேயிலை 1952-லும் 1,70,000 ஏக்கரில்தான் விளைந்துகொண்டிருக்கிறது. பன்னிரண்டு வருடத்தில் 5,000 ஏக்கரில்தான் அதிகம் பயிராகியுள்ளது. காங்கிரஸ் ஆட்சியில் 500 ஏக்கரில்தான் அதிகம் பயிரானது.

ஏன்? தேயிலை பயிர் செய்ய தென்னாட்டிலே நிலம் இல்லையா? வழி இல்லையா? வசதி இல்லையா? எல்லாம் இருக்கிறது. ஆனால் முயற்சி இல்லை. ஆட்சி செய்யும் டில்லி பீடத்திற்கு மனம் இல்லை.

திராவிடத்தின் செல்வங்கள் எல்லாம் வளரவில்லை. அல்ல அல்ல **வளர்க்கப்படவில்லை.** இருந்தாலும் வடநாட்டை விட தென்னாட்டில் தேயிலை சிறப்பாக விளைய முடியும் என்று செப்பாத வெளி நாட்டு நிபுணர்களும் இல்லை.

கோளத்தில் இன்னும் 6 லட்சம் ஏக்கரில் தேயிலையை விளைவிக்க முடியும். சேலத்தில் கிடக்கும் 15 லட்சம் தரிசு நிலத்தில், 5 லட்சம் ஏக்கருக்கு மேல் தேயிலை பயிராகக் தக்க பூமி இருக்கிறது. நீலகிரி மாவட்டத்தில் தேயிலை விளையத் தகுதியான நிலங்கள் 4 லட்சம் ஏக்கர்கள் உள்ளன. ஆனால் என் இங்கெல்லாம் தேயிலை விளைவிக்கப்படவில்லை. விளைவிப்பதற்காக என்ன முயற்சி எடுத்துக்கொண்டது இந்த சர்க்கார்?

ஒன்றுமேயில்லை. ஒரு முயற்சியும் செய்யவேயில்லை. இதற்குக் காரணம் ஆட்சியாளர்களின் அசட்டைமட்டுமல்ல, அலட்சிய மனப்பான்மையும், திறமையின்மையும் மட்டுமல்ல **அச்சம்**தான் முதல் காரணம்!

தேயிலை திராவிடத்திலே இன்னும் சில லட்சம் எக்கரிலே பயிராகிவிட்டால், இன்றில்லாவிட்டாலும் நாளை, வடநாட்டுத் தேயிலையின் வாணிகம் விழுந்துவிடும் என்ற பயம் அவர்களுக்கு இருக்கிறது. அப்போது அந்த வட பகுதியின் பொருளாதாரத்தில் ஒரு **திடீர்ச் சரிவு** ஏற்படும். இந்த அச்சம்தான் திராவிடத்திலே மேலும் மேலும் தேயிலையைப் பயிராக்க ஆட்சியாளர் அக்கறை காட்டாததற்கு அடிப்படைக் காரணங்களுள் முதன்மையான ஒன்றாகும்.

காப்பித் தோட்டங்களைப் போலவே, தேயிலைத் தோட்டங்

களும், நூற்றுக்கு எண்பத்தாறு வீதம் வெள்ளை முதலாளிகள் கையில் இருக்கிறது. ஐநூறு ரூபாய் முதல் போடும் ஒரு முதலாளிக்கு ஒவ்வொரு ஆண்டும் 130 ரூபாய் லாபம் கிடைக்கிறது. 10 கோடி ரூபாய் முதல் போட்டவர்களுக்கு 3 கோடி ரூபாய் கிடைக்கும். இந்த லாபம் எல்லாம் ஆங்கிலேயர்களைச் சேர்கிறது. ஏற்றுமதி வரி, லைசென்ஸ் கட்டணம், உற்பத்தி வரி போன்ற இனங்கள் மூலம் டில்லிக்கு நல்ல பணம் குவிகிறது. நமக்கோ உழைப்புதான் மிச்சம்.

இப்போது தேயிலை விலை வெகு விரைவாகக் குறைந்து வருகிறது. **உலக தேயிலை போர்டில்** இருந்து சமீபத்தில் இந்தியா விலகிக்கொண்டும் விட்டது. பிரிட்டனில் இந்தியத் தேயிலைக்கு இருந்த மதிப்பும் வெகுவாகக் குறைந்துவிட்டது. வேறு இடங்களை தேயிலை வாங்குவதற்கு தேடுகிறது பிரிட்டன்.

வெள்ளை முதலாளிகள் இதுதான் சமயமென்று "எங்களுக்குச் சலுகைகள் கொடு; இல்லாவிட்டால் தேயிலைத் தோட்டங்களை மூடிவிடுவோம். தொழிலாளர்களை நீக்கிவிடுவோம்," என்று டில்லி சர்க்காரை மிரட்டுகின்றனர், சில தேயிலைத் தோட்டங்களில் இப்போது வேலை நிறுத்தமும் நடக்கிறது. டில்லி சர்க்காரும், வணிக மந்திரி கிருஷ்ணமாச்சாரியும் ஒன்றும் புரியாது "திரு திரு"வென்று விழிக்கின்றனர். பம்பாய் ஆங்கிலப் பத்திரிகையொன்று இதை வேடிக்கையாக வர்ணித்திருக்கிறது!

இதே வேளையில் திராவிடத்தின் பொருளாதாரத்திலும் ஒரு மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. மதுவிலக்கு திராவிடத்திலேமட்டும் அமுலான பின்பு பட்டி தொட்டியெல்லாம் டீக்கடைகள் தோன்றிவிட்டன. பாட்டாளித் தோழர்கள் முன்பு கள் குடிப்பதற்குச் செலவிட்ட பணத்தையெல்லாம் டீக்குடிக்க செலவிடுகின்றனர். முன்பு கள் வியாபாரிகளின் கஜானாவில் விழுந்து கொண்டிருந்த பணம், இப்போது காப்பி, தேயிலை வணிகர்களின் கஜானாவில் விழுகிறது. ஏற்பட்ட மாறுதல் இவ்வளவுதானே ஒழிய பாட்டாளிகளின் பணம் மிச்சமடையவில்லை.

இதற்காக காப்பிக்கும், டீக்கும் தடை போடவேண்டுமென்றோ, அல்லது மது மீண்டும் வேண்டுமென்றோ கூறவில்லை.

மக்கள் முன்பு கள் குடிப்பதற்கு செலவிட்ட பணம் **திராவிட முதலாளிகளைச் சேர்ந்தது.** மதுவுக்கு வரி விதிக்கப்பட்டு வசூலான **18 கோடி ரூபாய் சென்னை சர்க்காருக்குக்** கிடைத்தது. இப்போதோ மக்கள் காப்பிக்கும், டீக்கும் செலவிடும் பணத்தில் பெரும்பகுதி **வெள்ளை முதலாளிக்கும், வடநாட்டு டில்லி சர்க்காருக்கும்**



சேர்கிறது. இதனால் திராவிடத்தின் பொருளாதாரம் பாதிக்கப்படுகிறது.

எனவேதான் கூறுகிறோம், "காப்பி தேயிலைத் தோட்டங்கள் திராவிடர் கையிலே ஒப்படைக்கப்படவேண்டும், என்று!

நமது நோக்கமெல்லாம், நமது தாயகத்தின் பணம், நமது திராவிடத்தின் செல்வம் **எந்த வகையிலும்** வெளி நாடுகளுக்குப் போகக்கூடாது என்பதே!

இந்த நமது நோக்கத்தை யாராவது எதிர்த்தால் அல்லது ஆதரிக்காவிட்டால் அவர்கள் எப்பேர்ப்பட்ட "தேசிய" அல்லது "சர்வ தேசீய" வாதிகளாக இருந்தாலும், அவர்கள் வெள்ளையர் சுரண்டலையும், வடநாட்டார் சுரண்டலையும் ஆதரிக்கிறார்கள் என்றுதானே பொருள்! "சர்வ தேசீயம்" என்றால் என்ன என்று அரைகுறையாக அவர்கள் புரிந்து கொண்டிருப்பதற்கும் இது ஒரு அத்தாட்சிதானே!

எனவே சுரண்டலை ஆதரிக்கும் கட்சிகள் திராவிடத்திற்குத் தேவையில்லை. நமது தாயகத்தின், திராவிடத்தின் முன்னேற்றத்திற்காக நமது செல்வங்களை வளர்க்க முயற்சிப்பதோடு, அவற்றை உண்மையாக **நமது உடைமை** ஆக்கவேண்டும். அப்படி ஆக்கப்படவேண்டிய செல்வப் பொருள்களில் ஒன்றுதான் தேயிலையும். —"**தீப்பொறி**"


**"ஆரம்பக் கல்வி ஆபீஸ்"**

❋

**94-95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை—1.**

❋

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2–8

ரிகார்ட் ஷீட்டுகள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2–0

பிராவிடண்ட் பண்டு கட்டும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2–0

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 1–0

வருடாந்திர பிராவிடண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2–0

Form of Certificate of Income.
வருமான நற் சாட்சிப் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2–0
(தபால் செலவு உட்பட)

❋

ஒவ்வொன்றிலும் 25 பாரங்களுக்குக் குறையாமல் முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

தென்னாற்காடு மாவட்ட எய்டெட் பாடசாலை

**ஆசிரிய மானேஜர்கள்-மானேஜர்கள்,**

# மா நா டு

## 29—1—56 விழுப்புரம்.

மாநாட்டுத் தலைவர் :—P. **வீரராகவன் (ஆரம்பக்கல்வி ஆசிரியர்)**

வரவேற்புக் கமிட்டித் தலைவர் :—P. S. **லக்ஷ்மணசாமி**

---

# நிறைவேற்றிய தீர்மானங்கள்

---

## I

சென்னை அரசாங்கத்தார், 1954௵ ஆகஸ்டு ௴ 2௳ வெளியிட்ட அறிக்கையிற் கூறுவது :

வன்னியகுல க்ஷத்திரியர்களுக்கு எந்தப்பாடசாலையிலும் சம்பள வசூல் செய்யக்கூடாது. அதனால் ஏற்படும் நஷ்டத்தை சர்க்கார் ஈடுசெய்யும்.

இவ்வாறு அறிக்கை வெளியிட்ட பிறகு மீண்டும் வன்னிய குல க்ஷத்திரியர்களிலும் குற்ற வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு, மாத்திரமே சர்க்கார் சம்பளச் சலுகை உண்டென்றும், அவர்களுக்கு மாத்திரமே நஷ்ட ஈடு என்றும் வெளியிட்டது. (G.O. No. 429, D. 21-3-55) ஆனால் பிறகு வந்த மற்றொரு அறிக்கை அந்தப் பள்ளி வருடம் (1954—55) (1954—55 G. O. 1081 தேதி 2-8-54) நஷ்டஈடு அளித்து விடுவதாயும் அதற்குமேல் ஷை சம்பளச் சலுகை ரத்தாவதாயும் வெளியிட்டது.

ஆயினும் இன்றுவரை நஷ்ட ஈட்டுத்தொகை கொடுபடவில்லை. உதவி பெறும் பாடசாலைகள் இதனால் அடையும் கஷ்ட நஷ்டங்கள் மிகவும் அதிகம். ஆகவே உடனடியாக 21-3-55 தேதியிட்ட G. O. No. 429 Ednன் படி நஷ்டஈடு பட்டுவாடா செய்யுமாறு கேட்டுக்கொள்கிறது.

## 2

குறைந்த வருமானமுள்ளவர்களுக்கு அரசாங்கம் இலவசக் கல்வி வசதி யளித்து உத்திரவிட்டபோது பள்ளிகளுக்கு முழுச் சம்பளமும் நஷ்டஈடு அளிக்கப்படுமென அறிவித்தது ; அதை நம்பி பள்ளிகள் அதிக பிள்ளைகளைச் சேர்த்து அதற்கு வேண்டிய மா



சாமான், உபகரணங்கள் முதலியவைகளைச் சேகரித்துக்கொடுத்து அதிகச் செலவுசெய்துள்ளது.

ஆனால், தற்போது செப்டம்பர் 13ந் தேதி வரை முழு நஷ்ட ஈடும் பிறகு குறைந்த விகிதத்தில் நஷ்ட ஈடும் கொடுப்பதாக இருக்கிறது. இதனால் R. C. 1463 (23-11-55) உத்திரவை மாற்றி 1951, 1952 வருடங்களுக்கு முன் பின் என்ற பாகுபாடின்றி எல்லா உதவிபெறும் சம்பளவசூல் ஆரம்பப்பள்ளிகளுக்கும் 1955 ஜூன் மாதத்திலிருந்து முழுச்சம்பள நஷ்ட ஈட்டைக் கொடுக்கும்படி இந்த மாநாடு கேட்டுக்கொள்கிறது.

எனவே அரசியலார் 1955-56ம் ஆண்டு முழுமைக்கும் முழு நஷ்ட ஈட்டையும் உயர்நிலைப்பள்ளிகளுக்குக் கொடுப்பதுபோலவே கொடுத்து உதவும்படி இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

## 3

தற்போது அரசாங்கம் சம்பள வசூலில்லாத பள்ளிநிர்வாகத்திற்கு அளிக்கும் உதவித்தொகை பொதுவாய் 15% என்றாலும் அநேகப்பள்ளிகள் அத்தொகை அடைவதில்லை. அது அப்பகுதி பள்ளிக் கண்காணிப்பாளரின் இஷ்டத்தின்பேரில்தான் பெரும்பாலும் கிடைப்பது வழக்கம். அவர் அனுமதிக்கும் அளவும் சில சமயங்களில் ஜில்லா கல்வி அதிகாரிகளின் உத்திரவால் குறைந்துவிடுவதும் உண்டு. 15% முழுவதும் வந்தாலே பள்ளி நிர்வாகம் மிகவும் கஷ்டமாய் இருக்கும். அதிலும் குறைந்தால் என்ன செய்ய முடியும்? இதைக் கீழ்வரும் புள்ளி நன்கு விளக்கும்.

15% என்பது ஏறக்குறைய ஒரு ஆசிரியருக்கு 30 ரூ. ஐந்து ஆசிரியர்களின் தொகை ரூ. 150 ஆகும். ஆகையால் மாதம் 22-8-0 ஆகும். ஆனால் அந்த நிர்வாகியின் செலவைப் பார்த்தால் இதைப்போல் இரண்டு மடங்குக்கு மேல் ஆகிவிடுகிறது. சம்பளங்களுக்கு மானேஜர் விகிதம் ரூ. 15 ஆசிரியர்களின் T. P. F. ரூ. 5 இதர செலவுகள் 25.

இங்கு கொடுக்கப்பட்ட செலவில் பள்ளிவாடகை சேர்க்கப்படவில்லை. கிராமத்திலும் ரூ. 25-க்குள் செலவை அடக்கமுடியாது. ஆகவே ஷை உதவித் தொகை 15%லிருந்து குறைந்தபட்சம் 25% அளவுக்காவது உயர்த்தப்படவேண்டும்.

ஷை விவரங்களைப் பரிசீலித்து உதவித்தொகையை 15%லிருந்து 25% அளவுக்கு உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுவதுடன் ஷை தொகையை எக்காரணத்திற்காகவும் குறைக்கக்கூடாது என்று கேட்டுக் கொள்ளுகின்றது.

## 4

நிர்வாகியும் ஆசிரியர்களும் ஒருவருக்கொருவர் கூடியவரை மனமொத்து இருந்தால்தான் கல்விவளர்ச்சியில் நல்ல பலன் உண்டாகும். ஆகவே பள்ளிக்குத் தகுந்த ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்கவும், ஆசிரியரது ஊதியமும் நடத்தையும் திருப்தியின்றி இருந்தால் நீக்கவும் நிர்வாகிகளுக்குப் பூரணஉரிமை இருக்கவேண்டும். முன்பெல்லாம் அவ்வாறுதான் இருந்தது. இதனால் நிர்வாக ஆசிரியர் ஒருமைப்பாடும் இருந்தது.

ஆனால் இப்போது D.P.I. உத்தரவு R.O.C.No. 2225. B. 7—51—52 D. 17-6-53 ஷை உரிமையைப்பறிப்பதாக இருக்கிறது. அதாவது பரீக்ஷாதிகாரிகளின் அனுமதிபெற்றுத்தான் ஆசிரியரை நீக்குவதற்கு நோட்டீஸ் கொடுக்கவேண்டுமென்றிருக்கிறது. இதனால் ஆசிரியர்களுக்கும் நிர்வாகிகளுக்கும் இடையில் உள்ள ஒருமைப்பாடு சிதைகிறது.

ஆகவே ஷை உத்தரவை உடனடியாக ரத்துசெய்துவிட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறது.

## 5

தற்போது ஆசிரியரின் சம்பளம் மிகவும் குறைவு என்பதை யாவரும் ஒப்புக்கொள்கின்றனர். அவர்களது சம்பள உயர்வு பற்றி பலர் பேசியும் எழுதியும் வருகின்றனர். அரசாங்கமும் உயர்த்துவது பற்றி ஆலோசித்து வருவதாகக் கூறுகின்றதேயன்றி திட்டமாக ஏதும் செய்யவில்லை ; உரைக்கவுமில்லை.

கீழ்வரும் யோசனையை அரசாங்கம் கவனித்தால் நியாயமானது என்றும் இதுவரை ஆரம்ப ஆசிரியர்க்கு அநீதியாகவே நடந்து வந்திருக்கிறது என்றும் தெரியவரும்.

உதாரணமாக ஒரு செகண்டரி கிரேடு ஆசிரியர் S. S. L. C. வகுப்பு முடித்துவிட்டு மேலும் இரண்டு வருடம் ஆசிரியப் பயிற்சியும் பெற்று ஆசிரியப்பணியில் ஈடுபடுகிறார். ஆனால் ஆசிரியப்பயிற்சி பெறாத S. S. L. C. வகுப்பு முடித்த மற்றொருவர் வேறு எவ்வித பிரத்தியேகத்தகுதிகள் பெறாவிட்டாலும், வேறு இலாகாக்களில் ஆசிரியரைக் காட்டிலும் அதிக சம்பளம் பெறுகிறார். ஆசிரியர்கள் குறைவாகப் பெறுவது இரண்டு வருடம் பயிற்சி பெற்றதற்கு உரிய தண்டனைபோலும் அமைந்துள்ளது.

ஆகவே ஆரம்ப ஆசிரியர்களின் சம்பளத்திட்டம் மற்ற இலாகாக்களில் வெறும் S. S. L. C. முடித்த ஒருவர் பெறும் சம்பளத் திட்டத்தைக் காட்டிலும் குறைந்தபட்சம் ரூ. 5-ஆவது



அதிகமாய் இருக்கவேண்டும். அதற்கேற்ப எலிமென்டரி கிரேடு, லோயர் கிரேடு ஆசிரியர்களின் சம்பளத் திட்டமும் அமைந்திருக்க வேண்டும்.

இவைகளை எண்ணி ஆசிரியர்களின் நிலையை உடனடியாகக் கீழ்க்காணும் விகிதப்படி விதிக்கவேணுமாய் கேட்டுக்கொள்கிறது.

| | ஆசிரியப் பயிற்சி பெற்றவர் | ஆசிரியப் பயிற்சி பெறாதவர் |
|---|---|---|
| செகண்டரி கிரேடு | ரூ. 70 | ரூ. 50 |
| ஹையர் கிரேடு | ரூ. 50 | ரூ. 35 |
| லோயர் கிரேடு | ரூ. 30 | |
| கைத்தொழிலாசிரியர் | ரூ. 50 | ரூ. 35 |

## 6

வருடந்தோறும் டிசம்பர் ஜனவரி மாதங்களில் ஆசிரியர்கள் படும் அவதி சொல்லும் தரமன்று. நவம்பர் டிசம்பர் மாத உதவித் தொகைகள் நிறுத்தி வைக்கப்படுவதே இதற்குக் காரணம் ஆகும். அதிலும் நவம்பர் உதவித்தொகை முக்கால்பங்கு கொடுக்கப்படுகிறது. டிசம்பர் தொகையோ முழுதுமே கொடுக்கப்படுவதில்லை. இத்தொகைகள் மறுவருடம் இரண்டொரு மாதங்கள் கழிந்த பிறகே கிடைப்பது வழக்கமாய் உள்ளது.

எற்கெனவே ஆசிரியர்களின் ஊதியம் குறைவு. அன்றாட வாழ்க்கையில் அவதிப்படுகிறார்கள். இரண்டொரு மாதங்கள் அத் தொகையும் வாராமல் நின்றுவிட்டால் அவர்கள் எவ்வாறு குடும்பம் நடத்த இயலும் ?

ஆதலால் நவம்பர், டிசம்பர் மாத உதவித்தொகையை நிறுத்தாமலும், மாதாமாதம் கிராண்டுத்தொகையை 5ந் தேதிக்குள் கிடைக்கும்படியும், தக்க ஏற்பாடு செய்யவேண்டுமாய் இம் மாநாடு கேட்டுக் கொள்கிறது.

## 7

பயிற்சிபெற்ற ஓர் ஆசிரியரை ஓர் பள்ளியிலிருந்து ஆதாரக்கல்விப் பயிற்சிக்குத் தேர்ந்தெடுத்து அனுப்பினால் அவருக்குப்பதிலாக வேறு ஆசிரியரை நியமிப்பதற்கு அனுமதியும் அவ்வாசிரியருக்குச் சம்பளமான்யமும் கணக்கிடப்படல் வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறது.

## 8

ஒன்று எட்டாம் வகுப்பு அரசாங்கப் பொதுத்தேர்வு (E. S. L. C.) நீக்கப்பட வேண்டுமென்றும் அல்லது அது உயர்நிலைப்பள்ளி, ஆரம்பப்பள்ளி என்ற பேதமின்றி பொதுவாக்கப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறது.

## 9

தனிப்பட்டவர்கள் நடத்தும் எய்டெட்பள்ளிகள் இதரபள்ளிகளைவிட எத்துறையிலும் திறமைகுன்றாத அளவுக்கு நடத்தப்படுவது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மை.

ஆகவே திரு அழகப்ப செட்டியாரின் கமிட்டி அறிக்கைப்படி ஒவ்வொரு பள்ளிக்கும் ஒரு குழு அமைத்து குழப்பத்தையும் பூசல்களையும் உண்டுபண்ணி, அமைதியாக நடந்துவரும் பள்ளிகளில் குழப்பத்தை உண்டுபண்ண வேண்டாமென இம்மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

## 10

எல்லா ஆசிரியர்களுக்கும் நிர்வாகப் பாகுபாடின்றி ஒரேவித சம்பளவிகிதமும், லீவு (மெடிக்கல், அரைச்சம்பள லீவு), வைத்திய உதவி முதலியவைகளையும் கொடுத்துதவ வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறது.

## 11

தற்போது போதிய அளவு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் கிடைக்காத காரணத்தால் எய்டெட்பள்ளிகளில் ஆசிரியர்கள் 60 வயது வரை வேலை செய்யலாமென்பதை 62 வயது வரை ஹையர், லோயர் கிரேடு ஆசிரியர்களுக்கும் நீடிக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறது.

## 12

தீர்மானங்களை அமுலுக்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள கீழ்க்கண்ட குழுவினரை நியமிப்பதுடன் ஷை குழுவினரின் இஷ்டப்படி அங்கத்தினர்களைச் சேர்த்துக் கொள்வதற்கும் அதிகார மளிக்கிறது.

தலைவர் :— P. S. லக்ஷ்மணசுவாமி, விழுப்புரம்.
துணைத் தலைவர் :—சுவாமி பாலசிவானந்தஜி, கோனூர்.
செயலாளர் :—T. K. அரங்கநாதன், நெல்லிக்குப்பம்.
துணைச் செயலாளர் :—A. அப்பாசாமி, திண்டிவனம்.
நிதி காப்பாளர் :— V. நடேச ஐயர், பண்ணுருட்டி.



# ராஜபுத்திரனின் வாக்கு

(D. E. மாசிலாமணி, ஆசிரியர்,
போதனாமுறைப் பள்ளி, விருதம்பட்டு)

அக்பர் மகா சக்ரவர்த்திக்கும், வீரங்குன்றா ராஜபுத்திரர்களுக்கும், போர் நடந்த காலம் அது. ராஜபுத்திரர் படைத்தொகையில் சிறு பான்மையோராய் இருந்த போதிலும் தேசாபிமானத்தாலும், ராணா ரகுபதிசிங் என்ற அவர்களின் அரசர் காட்டிய ஊக்கத்தினாலும், வீராவேசத்துடன் பகைவர்களை எதிர்த்துப் போர் புரிந்தனர்.

ஒரு சமயம் ராஜபுத்திர மன்னரின் புதல்வனான இளவரசன் மரணப் படுக்கையில் அவஸ்தைப் பட்டுக் கொண்டிருந்தான். மன்னர் போருக்குச் சென்றிருந்ததால் இளவரசனுடன் அரண்மனையில் ராணி மாத்திரம் தனிமையாக இருந்தாள். தமது தந்திரத்தினால் அத்தருணத்தை அறிந்த அக்பர் ஒரு பெரும் படையை அனுப்பி அரண்மனையை சூழ்ந்து கொள்ளச் செய்தார். மேலும் ராஜபுத்திர அரண்மனை வாசலுக்குள் எந்த ராஜபுத்திரனையும் விடக்கூடாதென்றும் அப்படிச் செய்கின்ற மூகலாய வீரன் கொல்லப்படுவான் என்றும் அக்பர் உறுதியான கட்டளை கொடுத்திருந்தார்.

தமது புதல்வனின் உடல்நிலையைப் பற்றியும், பகைவர்கள் தமது அரண்மனையைச் சூழ்ந்த சூழ்ச்சியையும், கேட்டறிந்த ராணா, குட்டியைப் பறிகொடுத்த சிங்கம் போல் ஓடி வந்தார். அக்பரின் உறுதியான கட்டளையையும் அவரது சேனைப் பலத்தையும் கண்ட அவரது உள்ளம் மிகவும் ஏங்கியது. ஆயினும் மரணத்தின் மடியிலிருந்த தமது பிரிய குமாரனைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை அவரை மேற்கொண்டது.

தமது அரண்மனையில் தமது குமாரனைப் பார்க்கக்கூடாதபடி தமக்கு ஏற்பட்ட சங்கடத்தை எண்ணித் தமது உயிரையும் இழக்கத் துணிந்து வீரத்துடன் நேராக அரண்மனை வாசலுக்குச் சென்றார்.

"அங்குச் செல்வது யார்!" என்று முகலாய வீரன் கேட்டான். "நான்தான்; ராணா ரகுபதிசிங் மன்னன்" என்று வீரங்குன்றாத் தொனியில் பதிலளித்தார். "அப்படியானால்; உமக்கு உள்ளே அனுமதி கிடையாது; எமது சக்ரவர்த்தியின் பேரால் நான் உம்மைக் கைது செய்கிறேன்" என்று வீரன் உருவிய வாளுடன் ராணாவை நெருங்கினான்.

"இது என்ன மிக விந்தையாயிருக்கிறதே! அன்பா! எனது பிரிய குமாரன் மரணத்துடன் போராடிக் கொண்டு தனிமையிலிருப்பது உனக்குத் தெரியும். நான் அவனது முகத்தையாவது கடைசி முறையாகப் பார்க்க வேண்டுமென்றே துடிக்கிறேன். அதற்காக உன்னைக்கெஞ்சுகிறேன்; நீ என்னைத் தைரியமாக உள்ளே விடலாம்; ஏனெனில் யான் சில நிமிடங்களுக்குள்ளே திரும்பி வந்து விடுவேன். வீரனே! ராஜபுத்திரன் ஒரு நாளும் வாக்குத் தவறுவதில்லை. இந்த உதவியையாவது நீ எனக்குச் செய்ய மாட்டாயா?" என்று உருக்கமாகக் கேட்டார்.

முகலாயப் போர் வீரனின் மனம் இளகியது. மன்னரின் பேச்சில் தொனித்த உறுதியையும், கௌரவத்தையும் உணர்ந்த அவன், தனக்கு ஆபத்து நேரிட்டாலும், மகனைப் பிரிந்த அத்தந்தைக்கு இரக்கங் காட்ட விரும்பி அவரை உள்ளே அனுமதித்தான்.

ராணா அரண்மனைக்குள் சென்று கடைசி முறையாகத் தமது புதல்வனை வந்தி அவனை முத்தமிட்டார். தமது மனைவியிடம் சில அனுதாபமான வார்த்தைகள் பேசி அவளுக்கு ஆறுதல் சொல்லியபின்பு திரும்பவும் செல்ல ஆயத்தமானார். அதனைக் கவனித்த ராணி, ராணாவின் கரத்தைப் பிடித்து "அன்பே! மரணம் காத்திருக்கும் அந்த முன்பக்க வாசலில் நீர் செல்ல வேண்டாம்; நான் காட்டும் அந்த ரகசிய வாசல் வழியாகச் சென்று உயிர் தப்பித்துக் கொள்ளுங்கள்" என்று ஆலோசனை கூறினாள்.

அதற்கு மன்னர் "என் அன்பே! அது வேண்டாம்; என் உயிரைக் காக்கவும் நான் பொய் கூறேன். ராஜபுத்திரனான நான் வாக்குக் கொடுக்கவில்லையா? அதன்படி முன் வழியிலேயே நான் செல்ல வேண்டும்" என்றார். ராணா முன் வாசலை அடைந்தவுடன் தமது முகலாய காவல் வீரனை நோக்கி "தோழா! இதோ நான் உன் வசமானேன்; நீ விரும்பினால் என்னை உனது தலைவரிடம் அழைத்துச் செல்." என்றார்.

மரண வாயிலிலும் ராணா காட்டிய வீரமும், கௌரவமான நடத்தையும், சொல் தவறாத செய்கையும் முகலாய வீரனின் உள்ளத்தை மிகவும் கவர்ந்தன. அவன் ராணாவை நோக்கி "நீர் போகலாம்; நான் உமக்காகப் பதில் சொல்லிக் கொள்ள ஆயத்தமாயிருக்கிறேன்" என்றான். "அன்பா! உனது கருணையை நான் மறவேன்" என்று கூறி ராணா காட்டிற்கு மறைந்து சென்றார்.

ராணா தப்பிச் சென்ற சிறிது நேரத்திற்குள் முகலாய சேனாதிபதி அங்கு வந்து, நடந்ததை ஊகித்தறிந்து, காவல் வீரனிடம் ராணாவைத் தப்புவித்த



காரணமென்ன வென்று கேட்டான். வீரன் நடந்த நிகழ்ச்சியை ஒளிக்காது சொன்னான். அதனைக் கேட்டு வெகுண்ட படைத் தலைவன், "நீ அக்பருக்கு விரோதமாக துணிச்சலான குற்றம் செய்தாய்; உன்னைத் தண்டியாது விடேன்." என்று சொல்லி அவனுக்கு மரண தண்டனை விதித்தான். முகலாய வீரனுக்கு விதிக்கப்பட்ட தண்டனையைக் கேள்விப்பட்டுஅவனை எப்படியும் விடுவிக்க விரும்பிய ராணா முகலாய கூடாரத்திற்கு வந்து சேனாதிபதியிடம் தம்மை ஒப்புவித்து, "அந்த முகலாய போர் வீரனின் உயிரைக் காப்பாற்றுவதற்காகவே நான் இங்கு வந்துள்ளேன்; ஆகவே நீங்கள் அந்த மரண தண்டனையை எனக்களித்து அவனை விடுதலை பண்ணுங்கள்" என்று கூறினார்.

கடினமான உள்ளம் படைத்த சேனாதிபதி இருவரையும் சிறையில் அடைத்து அவர்களிருவருக்கும் சில நாட்களில் மரண தண்டனை யளிப்பதாகக் கூறினான். வீரம் நிறைந்த அக் கைதிகளைப் பற்றிக் கேள்விபட்ட அக்பர் நேரிலேயே அவர்களைப் பார்த்தறிய வந்தார். நடந்த நிகழ்ச்சியை நேரிடையில் கேட்டறிந்த அக்பர், அவ்விருவர் தம் குணமேன்மைகளைப் பாராட்டினார். கடமையிலும் கருணை காட்டிய தமது வீரனையும், சொல் தவறாத பெரும் வீரனான ராணாவையும் புகந்து பேழ்சி அவர்களிருவரையும் மன்னித்து விடுதலை செய்தார்.

அக்பரின் பரந்த நோக்கத்தையும், எவரிடத்தும் உயர்ந்த பண்பைக் காணும் அவர் நுண்ணறிவையும் கண்ட ராணா அக்பரை வணங்கி, "சக்ரவர்த்தி! உமது பெருந்தன்மையினால், அன்பினால், பலவந்தத்திற்கு ஒருபோதும் பணியாத என் உள்ளத்தை ஆட்கொண்டு விட்டீர்; உண்மையையும் கௌரவத்தையும், நன்கு மதிக்கத் தெரிந்த உம்முடன் ராஜபுத்திரர்களான நாங்கள் இனிப் போரிடாது சமாதானமாயிருப்போம்" என்று வாக்குக் கொடுத்தார்.

# இளைஞர்களுக்கான அறிவுரைகள்

(தென்னாப்பிரிகா—டர்பன்—திரு. ச. மு. பிள்ளை அவர்கள்)

நீ எதற்காக இவ்வுலகில் பிறந்தாய் என்று எண்ணுவாய். உண்பதற்கும், உறங்குவதற்கும், உடுப்பதற்கும், பணத்திற்கும், தற்புகழுக்கும், தன்னையும் பிறரையும் பிறருக்கு அடிமைப்படுத்துவதற்கும் நீ இவ்வுலகில் பிறக்கவில்லையென்பதைத் திட்டமாய் அறி! அவைகளுக்காக நீ வாழ வரவில்லை.

*   *   *

தியாகம் இன்றேல் எண்ணிய கருமம் வெற்றியுறாது. தியாகத்திற்குச் சோர்வும் அச்சமும் கூடாது.

*   *   *

உன் பணியை ஜாக்கிரதையாகச் செய். அறவழியைக் கைவிடாதே; சுத்தமுறுவதை மறக்காதே; சந்தேகங் கொள்ளாதே; என்ன இடர் வரினும் மதிக்காமல் அகற்றி, உன் கடமையைச் செய்வதிலேயே கண்ணாகயிரு. இது வெற்றியைக் கொடுக்கும்.

*   *   *

பெண்மைக்கு உன்னை விட தைரியம், புத்திக் கூர்மை, ஆளுந்திறமை, சகிப்புத்தன்மை, வசியம், உணர்ச்சி, உயர்வு உண்டென்பதை அறி.

*   *   *

உனது முன்னோர் தேடி வைத்த தமிழ்ச் செல்வம் அழிக்கப்பட்டுவிட்டதே; தமிழின் மணம் மறைந்துவிட்டதே! ஆகையால் தமிழிளைஞனே! பயத்தைக் கொன்று, பொய்மையை நசுக்கி, ஆண்மையோடு முயற்சியைக் கைக்கொண்டு, விடுதலையடைய முயல்.

*   *   *

தியாகம் வேண்டும்! பரிசுத்தமான இருதயத்துடன் செய்த தியாகம் வீண் போகாது. வேண்டும்பொழுது ஆத்மாவைக்கூடத் தியாகம் செய்தல் வேண்டும்.

*   *   *

இளைஞ! இன்னும் தயக்கமேன்? இனி ஏறு போல் தமிழ் உலகில் உன் பணியாற்ற முயலவேண்டாமா? உன்னைப் பெற்ற தமிழ்த்தாய் இன்னும் மாற்றாந்தாயால் இன்னல்களுக்குள் அகப்பட்டுத்



தவித்துக்கொண்டிருக்கிறாளே, அவளை நிர்வாணமாக்கி நீ உறங்குவதென்னே!

*   *   *

இளந்தமிழா! நிமிர்ந்து நில்! நீ விழிப்படைந்து உனது நாட்டிற்கும், சமூகத்திற்கும், உலகிற்கும் தொண்டு செய்யுங்காலம் நெருங்கிவிட்டதென்பதை உணர்!

*   *   *

தன்னுடைய உயர்ந்த நோக்கங்களை நிறைவேற்றப் பெண்மைக்கு வேண்டிய சுதந்திரம் கொடு.

*   *   *

பணத்தினாலும், செல்வாக்கினாலும் உலகத்தை மயக்கி உன் வயப்படுத்த முயற்சிக்காதே. இம்முயற்சியில் நீ முதலில் வெற்றி பெற்றாலும், முடிவில் நீ தோற்று மீளாப் படுகுழியில் திண்ணமாய் வீழ்வாய்.

*   *   *

தமிழன்பனே! உனது தாய்மொழியாகிய தமிழுக்கு உயிர் கொடு. சீர்கேடாய்ப் போன உன் மொழி புத்துயிர் பெற்றுத் திகழும்படி செய்.

*   *   *

தன்னம்பிக்கை உன் ஆவியில் ஊறவேண்டும். தன்னம்பிக்கையே கர்மயோகிக்கு வெற்றியைத் தருகின்றது. தியாகமும் தன்னம்பிக்கையும் வெற்றிக்கு அஸ்திவாரமாயிருக்கின்றது.

*   *   *

"பழையன கழிதலும் புதியன புகுதலும் காலவியல்பே" அல்லவா? ஆதலால் பழையவற்றை வைத்துக்கொண்டு மாத்திரம் நீ தமிழை உயர்த்தலாம் என்று எண்ணாதே.

*   *   *

அறவழியில் தவறி விழுந்தாலும், சலிப்பில்லாமல் எழுந்து மறுபடியும், மறுபடியும் நட.

*   *   *

தமிழ்நாட்டுக் கவிச் சக்கரவர்த்தி பாரதியாரின் கீதங்களைப் போன்ற எளிய—இனிய—தேனொழுகும் இசைகளை, நீங்கள் வாழும் நாடெங்கணும் வாரி வாரி இறையுங்கள்.

நீ ஏறுபோல் நட. குழி விழுந்த கண்களும், கன்னம் ஒட்டிய வாயும், எலும்பு தெரியும் மார்பும், கூனல் முதுகும், நரைத்த மயிருங்கூடிய தேகமாகும்படி பிஞ்சில் பழுக்க உன் தேகத்தை விட்டுவிட்டு, பின்பு திண்டாடாதே.

*    *    *

அறிவும், அன்பும், சாந்தியும், ஆத்ம சக்தியும், உடல் வலியும், பேராற்றலும் கொடுக்கக்கூடிய ஸ்தாபனங்களை நிறுவுங்கள்.

*    *    *

நீதான் தேசத்திற்குத் தூண் போன்றவன். உன்னில் பொருந்தியிருக்கும் அநேக சக்திகளை மறைக்காது, குறைக்காது வெளிப்படுத்தி நமது நாட்டிற்கும் உலகத்திற்கும் பயன்படுத்துக.

*    *    *

தேகத்தைப் பேணி அதை உன் சக்திக்குள் அடக்கு. உள்ளும் புறமும் உன்னுள் உண்மை எப்பொழுதும் பிரகாசிக்கட்டும்.

*    *    *

அன்பனே! எப்பொழுதும் இன்பத்தையே நினை; இன்பத்தையே பேசு, பாடு, நாடு. இன்பத்தையே வேண்டி நில்; எங்கும் இன்பம் நிலவச் செய்.

*    *    *

மேனாட்டு நாகரிகத்திலும், டாம்பீகத்திலும் விட்டிற் பூச்சி போல் விழாதேயுங்கள்.

*    *    *

எண்ணும்—செய்யும் காரியங்களில் ஊக்கமும், ஆர்வமும், திண்ணமும் பொருந்தியிருக்கவேண்டும்.

*    *    *

பணத்தை விரயம் செய்து, ஆரோக்கியம்—ஒழுக்கம்—தன்னம்பிக்கை—தன் முயற்சி கெட்டு ஆங்கிலம் படித்த மாணவர்களின் வேலையில்லா பரிதாபகரமான திண்டாட்டத்தைக் கவனியுங்கள்! தற்காலக் கல்வியின் யோக்கியதையை ஆராய்ந்தறியுங்கள்.

(தொடரும்)

# நாகரிகம் - அன்றும் இன்றும்

(T. A. சந்தக்குருஸ், கூத்தென்கழி.)

பிறர் நலம் பேண வகையறியாது தன் நலமே பிரதானமாகக் கொண்டு அலைந்து திரிந்த மனித இனம் நாளடைவில் ஒன்றுகூடி வாழ்ந்து பல நன்மைகளைக் கண்டடையவே நகரங்கள் ஏற்பட்டன. நகரங்கள் பெருக நாகரிகம் வளரலாயிற்று. பொதுவாக அரசியல், பொருளாதாரம், கலை, தொழில், ஒழுக்கம் ஆகியவற்றின் மேம்பாடே நாகரிகம் எனக் கருதப்படுகின்றன. இவை காலத்திற்கேற்ப கருத்துக்கள் வேறுபட்டு அந்தந்த இடத்திற்கேற்ப பல நிலைகளைப் பெற்று வருகின்றன. ஒரே காலத்திலேயே ஓரிடத்தில் சிறப்பெனக் கொள்ளுதல் மற்றுமோரிடத்தில் தாழ்வு எனக் கருதப்படுவதுமுண்டு. ஓர் காலத்தில் பெருமை எனக் கொண்டவை மற்றுமோர் காலத்தில் சிறுமை என நகைக்கப்படுதலுமுண்டு. முன்பு தோன்றியவை பின்னர் அதன் குறைவு பற்றித் தோன்றாமலும், தோன்றாதவை தோன்றி நலமென நாடுவதுமுண்டு. இவ்வாறாக ஆதிகாலம் தொட்டே பல் வேறு மாறுதல்களை யடைந்து வந்துள்ள நாகரிகத்தின் இன்றைய நிலையை ஆராய்வோம்.

**அரசியல்:** விலங்கு நிலையில் அலைந்து திரிந்த மனிதர் நிலையாக ஒன்றுகூடி வாழ்ந்து குடும்பம், குடி, படை, நாடு ஆகிய பகுதிகளை வகுத்து அவற்றிற்கென ஒவ்வோர் தலைவனை ஏற்படுத்திக் கொண்டனர். பின்னர் அரசன் மகன் அரசனே என்ற உரிமை பாராட்டப்பட்டு அன்னவர் தம் அதிகாரத்தை நிலை நிறுத்துவான் வேண்டி தங்கள் படை பலத்தாலும், சூழ்ச்சியாலும் நாடு பிடிக்கும் வேட்டையில் சிறந்து விளங்கிசக்கரவர்த்திகள், சர்வாதிகாரிகள், ஏகாதிபதிகளாயினர். வம்புக்கிழுப்பதே வல்லவர்க்கழகாக இருந்த அக்கால நிலை நாளாக ஆக மக்களின் ஏகோபித்த பலத்தால் குறைக்கப்பட்டது. அதனால் அரச பாரம்பரியம் புதைக்கப்பட்டு குடியரசுகள் விடியலாயின. அன்று நகர் கடந்து, நாடு கடந்து, பிறநாடுகளைத் தனதாக்கிய தன்மை இன்று இழிவென நகைக்கப்பட்டு 'உலகம் ஒரு குடும்பம் — நாம் அதன் அங்கத்தினர்' என்ற பரந்த எண்ணம் பெருகி வருகிறது. ஆயினும் அக்காலத்து நேர்மையான ஆட்சி, கொடை, படை, சாலை ஏற்பாடுகள் இக்காலத்தவரால் போற்றிப் பின்பற்றப்படுகின்றன. சுய நலமொழித்துப் பொதுநலம் புரிவோரே இன்றைய நாகரிக மக்களின் பாராட்டுதலைப் பெறுகின்றனர். பொது மக்களின் அபிமானத்தைப் பெற அன்னோரது பொருளாதார நெருக்கடியை

விடுவித்தல் இன்றியமையாத தொன்றாகும்.

**பொருளாதாரம்:** வாழ்க்கைக்கு அவசியமான பொருட்கள் பல. அவற்றுள் உணவு, உடை, உறைவிடம், கருவி, திரவியம் ஆகியன பிரதானமானதாம். முற்காலமாந்தர் விவசாயத்தைப் பிரதானமாகக்கொண்டு அதைத் தழுவியே பல தொழில்களும் நடாத்தி வந்தனர். பொருளுக்குப் பொருள், பெற்றுப் பண்டமாற்றுச் செய்வதும், பாடுபட்டுத் தேடிய பணத்தைப் புதைத்து வைத்தும்—பறிகொடுத்தும் வந்த தன்மை மாறி இன்று கூட்டுறவுப் பண்டகசாலைகளும், பாங்குகளும், இன்ஸ்யூரன்ஸ்களும் ஏற்பட்டிருக்கின்றன. 'நான்', 'என்' என்ற குறுகிய மனப்பான்மை ஒழிய உலக மன்றங்கள் நிறுவப்பட்டு ஒவ்வொரு தேசத்தின் தேவைகளும் கவனிக்கப்படுகின்றன. இன்று தேசங்களுக்குத் தேசம் பண்டங்களும், பரிசுகளும் அனுப்பி மகிழ்வதை 1800 ஆண்டுகட்கு முன்னரே கண்டு "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று பாடினார். கணியன் பூங்குன்றனார். ஒவ்வொரு நாட்டிலும் பொருளாதாரம் ஓங்க பாசனவசதிகள் நிறைந்து பயிர்த்தொழில் நவீன முறையில் செய்யப்படவேண்டும். ஆக்கத் தொழில்கள் அதிகரித்து வாணிபம் வளரவேண்டும். நில, நீர், வான்வழிகள் பெருகி பல தேசங்களுடனும் நெருங்கிய தொடர்பு கொளல் வேண்டும். அதுவே உழவோடு தொழில் செழித்து கலைசிறக்க வழியாகும்.

**கலை:** ஒரு நாட்டின் சிறப்புக்கு அறிகுறி அங்குள்ள கலைகளே. அமைதியுள்ள நாட்டில் விளைவும் வியாபாரமும் பெருக நாடு பொருளாதார மேன்மை பெறும், இதனால் வறுமையற்ற மக்கள் வேறு தொல்லைகட்கிடங்கொடாது தங்கள் உளத்தோற்றங்களை வெளித் தோற்றங்களாக்கி மகிழ்வர். இவ்விதமே கலைகள் பிறக்கின்றன. மக்கள் கல்லைக் கலையாக்கி கலையில் கடவுளைக் கண்டு களிக்கும் காட்சி பண்டுதொட்டு இன்றுமுளதே. யுத்தம், பஞ்சம், வறுமை, பெருநோய் ஆகியன நிறைந்துள்ள நாட்டில் கலை வளர்ச்சியைக் காண்பதரிது. நம் நாட்டில் முன்னாட்களில் கலை அறுபத்து நான்கு பிரிவுகளாக இருந்ததென்பதைக் கவிகளாலறிவோம். அவற்றில் சித்திரம், சிற்பம், காவியம், ஓவியம், சங்கீதம், நடனம், இலக்கியம் ஆகியன மிகவும் மேம்பட்ட நிலையிலிருந்திருக்கின்றன என்பதற்கு இன்றும் சான்றுகள் போதியனவாயுள்ளன. அவற்றைப் பின்பற்றியே இன்று நாம் அக்கலைகளில் மேலும் பல துறைகளைக் கண்டுள்ளோம். கல், மண், கட்டைச் சிற்பங்கள் வளர்ந்து இன்று பீங்கான், பிளாஸ்டிக் போன்ற நூதனப் பொருட்களில் உருவாக்கப்படுகின்றன. இலை, தோல், மரப்பட்டை ஆடைகள் பருத்தி, பட்டு ஆடைகளாக வளர்ந்து



இன்று நீரிலும் நெருப்பிலும் சேதமுறா நைலன், ரேயன் போன்ற ஆடைகள் தோன்றி வருகின்றன. பேபைரஸ், தோல், ஓலை ஏடுகள் மறைந்து பல்வேறு விதமான 'ஆர்ட்' காகிதங்கள் வெளிவருகின்றன. இலை, பூ, சங்கு, எலும்புகளை அணிந்து அழகுபடுத்திக் கொண்ட தன்மை வளர்ந்தே இன்று தங்க, வைர நகைகள் அணியும் பழக்கம் ஏற்பட்டுள்ளது. மன்னரையும் மந்திரிகளையும், செல்வர்களையுமே கதாநாயகர்களாகக் கொண்டு கதைகளும், காதைகளும் பாடிய காலம் மாறி இன்று பாட்டாளி மக்களையும், பரம்பரை ஏழைகளையும் கதாபாத்திரங்களாகக் கொண்டு இக்கால இலக்கியங்கள் எடுத்துரைக்கப்படுகின்றன. அரசர்கள் தங்கள் வெற்றிக்களிப்பால் நடாத்திய கூத்துகள் இன்று நாடகங்களாகவும், சினிமாக்களாகவும் மாறி மக்களுக்கு நல்லறிவூட்டப் பணி புரிகின்றன. இவ்வாறாகக் கலைகள் பலமுறைகளில் முற்காலத்திலிருந்தே பெருகி இந்நிலையடைந்துள்ளது. கலைகளின் மேன்மையால் தொழில்கள் பெருக்கமடைகின்றன.

**தொழில்:** மனிதர் உயிர் வாழத் தேவையான பொருளைப் பெற யாவரும் ஒவ்வொரு தொழிலை மேற்கொள்ள வேண்டியதிருக்கிறது. தொழில்களுக்கெல்லாம் மூலமாய் விளங்குவது உழவுத் தொழிலாகும். ஆயினும் மற்றும் தொழில்களும் வாழ்க்கைக்கு இன்றியமையாதனவே. அதனாலன்றோ 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்றார் பாரதியார். பண்டை நாளில் பருவகாலங்களை நம்பிச் செய்து வந்த பயிர்த்தொழில் பற்பல மாறுதல்களையடைந்து இரசாயன உரம், இயந்திரக் கருவிகள், மின்சார சக்தி ஆகிய பல சாதனங்களாலும், பிறநாட்டு நல் முறைகளைப் பின்பற்றியும் இன்று ஒட்டுக்கனி, விதையின்றிப் பெருக்கம், முன்னிலும் பன்மடங்கான விளைவு ஆகிய முன்னேற்றங்களையடைந்துள்ளது. 'பருவத்தாலன்றிப் பழா' என்ற தொய்உரை பொய்ப்பிக்கப்பட்டு என்றும் கனிதரும் மரங்கள் இன்று பயிரிடப்படுகின்றன. மற்றும், சிறிய கட்டுமரங்கள் நீராவி, அணுசக்தியால் ஓடும் கப்பல்களாயும், குடிசைத் தொழில்கள் ஆலைத்தொழில்களாயும் மாறியுள்ளன. தேருக்கு அச்சாணி போன்று ஓர் நாட்டின் செல்வ நிலைக்கு அந்நாட்டின் ஆக்கத் தொழில்கள் அவசியமாகும். வேலை இல்லாதோர் பெருக்கம் அந்நாட்டின் தரித்திர நிலைக்குச் சாட்சியமாகும். மதிக்கப்படாதோரையும்மதிக்கச் செய்யும் செல்வத்தைப் பெறும் வழிகள் பல இருப்பினும் அவை நல்வழியில் சேகரிக்கப்பட வேண்டும்.

**ஒழுக்கம்:** அவரவர்க்குரிய கடமைகளினின்றும் தவறாதிருத்தலே ஒழுக்கமாகும். மனிதர்

கூடிவாழும் இடங்களில் ஒழுக்கத்தின் அவசியத்தைப் பெரிதும் உணர்கின்றனர். இவ்வுணர்ச்சி அவரவர் வாழும் சூழ்நிலைக்குத் தக்கவாறு வேறுபடுகிறது. ஒவ்வொரு கூட்டத்தார் தங்களின் நலனுக்காக ஏற்படுத்திக் கொண்ட ஒழுக்க முறைகளே குடும்ப, குல, மத ஆசாரங்களாகும். மாந்தர் தம் மனத்திற்கு இன்பம் தந்த இயற்கையை விரும்பிய தன்மையால் இறைவனைக் காண விழைந்தனர். நாளாக ஆக என்றும், எங்குமுள்ள உள்ளங்கடந்த உருவில்லானை உள்ளத்திருத்தி வாழ பல கடவுட் பக்தர்களும், மதத்தலைவர்களும் வழி காண்பாராயினர். இன்று 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்ற சிறந்த கொள்கை எடுத்துரைக்கப்படுகிறது. ஜாதி, மத, நிற, பொருள் ஆகியவற்றின் பெயரால் மலிந்து கிடந்த வேற்றுமைகள் மறைந்து உலக சகோதாத்துவ இணைப்புகள் பலவகையில் பெருகி வருகின்றன.

பல்வேறு துறைகளிலும் பலபல நவீனங்களைக் கையாண்டு மேம்பாடுற்று விளங்கும் இக்கால மாந்தர் ஒழுக்கத்தில் விஞ்சினர் என்பதற்கில்லை. உலகம் அமைதியுடன் வாழ மனிதர் ஒவ்வொருவரும் ஒழுக்க விதிகளை அநுசரித்து நடத்தல் அவசியமாகும். இன்றும் என்றும் பெருமையைத் தரவல்ல ஒழுக்கத்தை உயிரினும் மேலாகக் கருதி காப்பாற்றி வருகின்ற மனித சமுதாயமே நிலைபெற்று விளங்குகின்றது. இக்கால மாந்தரின் நல் ஒழுக்கமே வருங்கால சமுதாயச் சிறப்பிற்கு வித்தாகும்.

கற்பூரம் போலக் கடலுப்பிருந்தாலும் கற்பூரமாமோ? வெளுத்ததெல்லாம் பாலாகா. வெளிப்பகட்டினாலும், வெற்றாரவாரத்தாலும், ஒரு மனிதனோ, நாடோ, நாகரிகம் அடைந்துவிட்டதாகாது. எங்கே முறையோடு கூடிய ஆட்சியும், தேவைக்குப் போதுமான பொருளும், அமைதியுற்ற சிந்தனைச் செயல்களும், எல்லோருக்கும் தகுதியான தொழிலும், மக்கள் தம் நடத்தையில் நேர்மையும் நிரம்பியிருக்கின்றனவோ, அங்கேயே உண்மையான நாகரிகத்தைக் காணலாம்.

---



# அங்க வீனர்கள்

[தெ. பா. சம்பந்தன்]

**[ஆங்கில நாட்டுக் கடலோடி ஹாக்கின்ஸ், தம்முடைய கடற்பிரயாண அனுபவங்களையெல்லாம் ஒரு புத்தகமாகச் சமைத்துள்ளார். அந்த ஏட்டில் தென் அமெரிக்காவில் நடந்த சிவப்பிந்தியர் சுதந்தரப் போர் பற்றி ஒரு சிறு குறிப்புள்ளது. அச்சம்பவத்தின் கற்பனையுருவே இக்கதை.]**

## I

கூண்டில் அடைபட்ட புலிபோல மேலும், கீழுமாக நடந்தான் ஸ்பெயின் நாட்டு மன்னன். அவன் கண்களிலே ஒரு புதிய ஒளியும் முகத்திலே ஒரு புதிய 'களை'யும் குடியேறி இருந்தன. அங்கு சூழ்ந்துகொண்டிருந்த எல்லையற்ற அமைதியைக் கிழித்தெறிந்தது அவன் நெஞ்சின் அடித்தளத்தினின்று பீறிட்டெழுந்த சிரிப்பொலி! அவனுக்கு முன்னால் கைகளுக்கு விலங்கு பூட்டப்பெற்று கைதிகளாக நின்றுகொண்டிருந்த சிவப்பிந்தியர் தலைவனும் அவனுடைய தோழனும் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டிருந்தனர். மன்னன் சிரிப்பு அவர்களுடைய 'எண் சாண்' உடம்பையும் ஒரு சாணாகக் குறுக்கிற்று.

"அன்று நாங்கள் உங்கள் நாட்டில் குடியேறியபோது அன்னியனை வெளியே போவென்று அகம்பாவத்தோடு தொண்டைத் தண்ணீர் வற்றக் கூக்குரலிட்டீர்களே, இப்போது எங்கே போனது அந்த வீரம்?

"எப்படியோ என்னிடம் வகையாகச் சிக்கிக்கொண்டுவிட்டீர்கள். இதோ என் கண் முன் நிற்கின்றீர்கள், கைதிகளாக. அப்போது நீங்கள் துள்ளின துள்ளலையும் இப்போது பெட்டிப் பாம்புபோல அடங்கி நிற்கும் பான்மையையும் மனக்கண் முன் நிறுத்திக்கொள்ளுங்கள். உங்களை நம்பிக்கொண்டு போராட்டத்திற்குத் தயார், தயார் என்று மார் தட்டிய உங்கள் தோழர்களின் துர்ப்பாக்கிய நிலையையும் சற்று நினைத்துப் பாருங்கள்.

"ஸ்பெயின் நாட்டு வீரர்களை அற்ப சொற்பமானவர்கள் என்று எண்ணிவிடாதீர்கள். நீங்கள் விடும் அம்புகள் அவர்களுடைய மார்பைப் பிளக்கலாம், இருதயத்தைக் கிழிக்கலாம். ஆனால் அவர்கள் வீர உணர்ச்சியை உங்களால் ஒருபோதும் அசைக்க முடியாது" என்றெல்லாம் அச்சிரிப்புக்குப் பொருள்களை வரவழைத்துக்கொண்டு சஞ்சலப்பட்டது அவர்கள் உள்ளம்.

‘அமைச்சரே!’—மன்னன் குரல் அமைதியைக் குலைத்தது. ‘இந்தத் துன்மார்க்கர்களுக்கு என்ன தண்டனை விதிக்கலாம்’?

‘இவர்களை ஆயுள் பரியந்தம் சிறையில் வைப்பதே சரியென்று நினைக்கிறேன், அரசே’-அமைச்சர் மறுமொழி புகன்றார்.

‘இல்லை இவர்களைச் சிறையில் வைப்பது சரியில்லை. இத்தீயர்கள் நம் தீரர்களுக்கு இழைத்த தீங்குகளை எண்ணிப் பாருங்கள். இவர்களுடைய விஷ அம்புகளால் கொட்டப்பட்ட ஸ்பானிய இரத்தத்தை மறந்துவிடாதீர்கள். சிறைத் தண்டனை ஒரு சாதாரணத் தண்டனை இவர்களைப் பொருத்தமட்டில். இதோ இருக்கிறது வாள். ஆணையிடுங்கள். அவைக் கணத்தில் கண்ட துண்டமாக வெட்டி வல்லூறுகளுக்கு விருந்தூட்டுகின்றேன். அப்போதுதான் அணையும் என் ஆத்திரம்’—சேனபதி குறுக்கிட்டார், அவர் பேச்சில் கோபம் கொந்தளித்தது.

‘சேனபதி, பதறாதீர்கள். உங்களுக்கு இருக்கும் ஆத்திரம் எனக்கும் இல்லாமலில்லை. ஆத்திரம் அடங்கும் வழியைப் பின்பற்றுவதல்ல நம்முன் உள்ள பிரச்சினை...நம்முடைய வீரர்கள் சிந்திய இரத்தம் பயனற்றதாக ஆகிவிடக்கூடாது. நாம் எண்ணி எண்ணி ஏங்குவது, அடிக்கொருதரம் பெருமூச்சுவிடுவது, துடிதுடித்து நிற்பது எல்லாம் அந்தப் புதிய உலகத்திற்காக. அந்தப் புதிய உலகம் நம்முடைய இலட்சியக் கனவு. நம் எதிர்கால நல்வாழ்வு அப்பூமி நம் கையில் சிக்குவதில் இருக்கிறது..........சரி, இவ்விருவர் கையையும், காலையும் துண்டித்து இவர்களை விரட்டுங்கள். செல்லட்டும் இதுகள். பார்க்கட்டும் இவர்களுடைய கூட்டத்தார். அப்போதுதான் அவர்களுக்கும் புத்தி வரும். மலையிலே கொண்டுபோய்த் தலையைத் தாக்கிக் கொண்டால், மலையல்ல, தலை தான் உடையும் என்பது விளங்கும். யார் அங்கே அழைத்துச் செல்லுங்கள்”—மன்னன் ஆணையிட்டான். கைதிகளைச் சேவகர் இழுத்துச் சென்றனர். சபை கலைந்தது.

## 2

“ஆம் தோழர்களே, எங்களை யாரோ எவரோ என்று எண்ணிவிடாதீர்கள். நான் உங்கள் தலைவன். இவன் என் தம்பி, எனக்கு மட்டுமேயல்ல. உங்களுக்கும் கூடத்தான், இந்த அவமானம். இதோ நான் கையிழந்து நிற்கின்றேன் உங்கள் முன். உங்கள் தம்பி இதோ தன் இரு பாதங்களையும் இழந்துவிட்டு உட்கார்ந்திருக்கின்றான். எங்களை இந்தக் கதிக்கு ஆளாக்கிவிட்டார் ஸ்பானிய நாட்டார்.

எங்களுக்கு இந்தக் கதி ஏற்பட்டது உங்களுக்கு நாங்கள் வழிகாட்டிகளாக இருந்தோம் என்ற ஒரே காரணத்தால்.



நாங்கள் அங்கவீனர்களாக ஆகிவிட்டோம்—ஆக்கப்பட்டுவிட்டோம். அதைப்பற்றியல்ல நாங்கள் உங்களிடம் முறையிடுவது. எங்கள் தாய் நாட்டின் விடுதலைக்காக நாங்கள் எங்கள் காணிக்கையைச் செலுத்திவிட்டோம். எங்கே உங்கள் பங்கு?

கையிழந்து முடவர்களாக, காலிழந்து நொண்டிகளாகக், கண்ணிழந்து குருடர்களாக வேண்டுமானால் நாம் வாழலாம். ஆனால் மானமிழந்து மாமிசக் கும்பல்களாக வாழ ஒருநாளும் முடியாது. உங்கள் தலைவர்கள் நாங்கள், உங்கள் தொண்டர்களும் நாங்கள். ஏன்? உங்களில் நாங்கள் ஒரு பகுதி. எங்களை அங்கவீனர்களாக ஆக்கிவிட்டது அவர்கள் அரசாங்கம். இதே நிலைக்கு உங்களையும் கொண்டுவரமாட்டார்கள் என்று எண்ணுகின்றீர்களா? பித்தர்கள் அவர்கள். எங்களை ஊனமுடையவர்களாக ஆக்கிவிட்டால் நீங்கள் பயந்துவிடுவீர்கள் என்று கனவு காண்கிறார்கள். மாலை வரை முயன்று கிணற்று நீரையெல்லாம் இறைத்து விட்டால் கிணறு வரண்டு போவதில்லை. மீண்டும் மறுநாள் சுரக்கத்தான் செய்கிறது. மனித உள்ளமும் உணர்ச்சியும் அப்படித்தான்.

நம்முடைய நாட்களிலே நம்முடைய நாட்டில் அன்னிய ஆதிபத்யம் உதயமாயிற்று என்ற அவக்கேடு நமக்கு வேண்டாம். அந்நியன் கால்கள் என் தாயின் மார்பை மிதிக்க நான் ஒருநாளும் ஒப்பமாட்டேன்.

பல்லிலே விஷம் கொண்ட பாம்பும், கூர்மையான பற்களையும் நகங்களையும் கொண்ட புலியும், நாயையும் பூனையையும் போல நாட்டில் நடமாட முடிவதில்லையே, அது ஏன்? அவைகளின் பற்களால், அவைகளின் நகங்களால், அவைகளின் மனப்பான்மையால் நாட்டு மக்களின் உயிர்களுக்கு நாசம் ஏற்படுகிறது. அதுபோலவே ஸ்பானிய சிங்கம் இந்த நாட்டில் உலாவி வர ஆசைப்படுகிறது. அதை எதிர்த்துப் போராடப் போகின்றீர்களா? அல்லது அதற்கு இரையாகப் போகின்றீர்களா? பதில் கூறுங்கள்.

உங்கள் இருதயம் ‘பட் பட்’ என்று அடிப்பதைப் பாருங்கள். அதைப் பொருளற்ற ஒலியாக ஆக்கிவிடாதீர்கள். அந்த ஒவ்வொரு ஒலியும் உங்கள் ஒவ்வொருவரின் விடுதலைப் போர் முரசாக அமையவேண்டும்!

நமக்கு உயிரையும், உடம்பையும், உணவையும், உடையையும், தந்த இந்நாடு இதோ தேங்கி நிற்கிறது—தேம்பி அழுகிறது. நாமும் ஓர் சோதனைக் கட்டத்திலே சிக்கிக் கொண்டிருக்கிறோம். இன்னும் சிறிது காலத்தில் நாம் நன்றியுள்ளவர்களா, நன்றி கெட்டவர்களா என்பது உலகத்திற்கு விளங்கிவிடும்.

அவர்களிடம் பெரிய பெரிய பயங்கர ஆயுதங்கள் இருக்கலாம். ஆனால் அதைக் கண்டு நாம் அஞ்சவேண்டியதில்லை. அவர்களுடைய ஆயுதங்கள் நம்மைக் கும்பல் கும்பலாகக் கொன்று குவிக்கட்டும். நம்முடைய பிணக்காட்டிலே அவர்கள் உலாவிவரட்டும். நாம் உயிரோடு உள்ளவரை ஒருநாளும் அவர்கள் இங்கே காலூன்ற முடியாது.” சிவப்பிந்தியர் தலைவன் கர்ஜனை புரிந்தான். எரிமலையினின்று நெருப்புக் குழம்புகள் கொப்பளிப்பது போல அவன் வாயினின்று ஆத்திரமும், ஆவேசமும் தோய்ந்த சொற்கள் துள்ளிக் குதித்தன. கயிற்றை அதிகமாக விட விட காற்றாடி வானத்தில் உயர்ந்துகொண்டே செல்வது போல அவன் உதட்டினின்று வார்த்தைகள் கிளம்பக் கிளம்ப, அவனைச் சூழ்ந்துகொண்டிருந்த மக்களின் உணர்ச்சி, உச்சியை அடைந்தது.

அவன் பேசி முடிந்ததும் அவனுடைய துண்டிக்கப்பட்ட கரத்தினின்று சொட்டிக்கொண்டிருந்த இரத்தத்தை எடுத்து நெற்றியில் தேய்த்துக்கொண்டனர், மக்கள்.

## 3

அலைபாயும் கடலில் ஸ்பானியக் கப்பல் துள்ளிக் குதித்து ஓடிக்கொண்டிருந்தது. ‘புதிய உலகத்’தில் அன்று முதல் ஸ்பானிய ஆணை நிலவப்போகிறதென்ற எண்ணத்தில் அவர்கள் மூழ்கிக் கிடந்தனர். மது மயக்கத்தால் சிலர் கண்டபடியெல்லாம் பிதற்றிக்கொண்டிருந்தார்கள். ஒரு வீரன் மற்றோர் வீரனைக் கட்டிப் பிடித்துக்கொண்டு ‘நான் ராஜா. நீ ராணி’ என்று கூவி அவனுடைய இதழ்களில் முத்தத்தைப் பதிக்க அவன் கோபத்தால் ஓங்கி அடித்தான். மற்றோர் வீரன் வானத்து நிலவை அன்னியன் கப்பல் என்று கூறி அதைக் குறி வைத்துச் சுடலானான். இதுபோன்ற விதவிதமான விசித்திர நிகழ்ச்சிகள் பலவற்றோடு கப்பல் கரையை அடைந்தது.

ஐந்தாறு நிமிஷங்களில் கப்பல் காலியாயிற்று! புதிய புதிய கூடாரங்கள் தோன்றின!

அந்த அமைதியான இரவில் இனிமையான குரலில் அவர்கள் பாடிய பாட்டுக்கள் காற்றில் மிதந்து சென்றன!

சீட்டாட்டத்திலும், சதுரங்கத்திலும் கும்பல் கும்பலாக ஈடுபட்டிருந்த வீரர்கள் அப்போதைக்கப்போது உரத்த குரலில் சிரித்தனர்.

ஆனால் அதே நேரத்தில் இடிரென்று கிளம்பிய பறை அதிரும் ஒலியும், சங்கொலியும் அவர்கள் அனைவரையும் திடுக்கிடச் செய்தன. உடனே அனைவரும் விழுந்தடித்துக்கொண்டு வெளியே வந்து பார்த்தனர். தொலை தூரத்தில் சாரை சாரையாக வரும் சிவப்பிந்தியர் கூட்டத்தைக் கண்டதும் அவர்கள் நெஞ்சு ஏனோ பட் பட்டென்று அடித்துக்கொண்டது.



சற்று நேரத்திற்கெல்லாம் அந்தக் கூட்டம் சமீபத்தில் வந்துவிட்டது. சேனாபதி ஆவலோடு பலகணி வழியாக வெளியே உற்று நோக்கினார். அவரால் அவர் கண்களையே நம்ப முடியவில்லை. கண்களைக் கசக்கிக்கொண்டு மற்றோர் முறை பார்த்தார். எதிரே கையையும் காலையும் இழந்த இரு வாலிப வீரர்கள் ஓர் குதிரைமீது அமர்ந்திருப்பது அவர் கண்ணில் பட்டது. அவருக்கு உலகமே சுழல்வது போன்றிருந்தது—நெற்றியைக் கையால் தாங்கிக்கொண்டு அவர் அப்படியே நாற்காலியில் உட்கார்ந்தார். அவருடைய சவம் போல வெளுத்த முகத்தில் முத்து முத்தாக வியர்வை துளித்துக்கொண்டிருந்தது. “இவ்விருவர் கையையும் காலையும் துண்டித்து இவர்களை விரட்டுங்கள். செல்லட்டும் இதுகள். பார்க்கட்டும் இவர்களுடைய கூட்டத்தார். அப்போதுதான் அவர்களுக்கும் புத்தி வரும். மலையிலே கொண்டு போய்த் தலையைத் தாக்கிக்கொண்டால் மலையல்ல தலைதான் உடையும் என்பது விளங்கும்” என்ற, மன்னனின் பேச்சு அவர் நினைவிற்கு வந்தது. அதே நேரத்தில் வெளியில் பயங்கரமாக அலறிய போர்ச்சங்கு அவர் சிந்தனையை மீண்டும் கலைத்தது!

—“ போர்வாள் ”

---

## அறிவுக் கதிர்

உண்மையான தெய்வம். உண்மையான தர்மம், உண்மையான நீதி ஆகியவை, ஒரே ஒரு விஷயத்தில்தான் இருக்கின்றன. எல்லா மக்களுடைய துன்பத்தையும் குறைப்பதுதான் அது.

— காண்டேகர்.

சிந்தனை செய்க! சிந்தனை செய்க! எந்தப் பொருளையும் சிந்தனை செய்க! சிந்தனை, ஆய்வை உந்துதல் உறுதி! ஆய்க! ஆய்க! எதையும் ஆய்க! எதையும் ஆய்க பதைபதைப்பின்றி!

— திரு. வி. க.

கல்வி! அது நமக்கு இன்ப வாழ்வின் போது ஓர் அணிகலமாக விளங்கி ஆநந்த மூட்டுகிறது! ஆனால் துன்பவாழ்வின்போதோ, நமக்கே அடைக்கலம் தந்து, ஆதரவும் கொடுக்கிறது.

— அரிஸ்டாடல்.

# ஆசிரியர் வைத்தியலிங்கம் !

எஸ். எஸ். மொஹிதீன், ஆசிரியர், மகாத்மா காந்தி பாடசாலை,
அரகண்டநல்லூர்

வாத்தியார் வைத்தியலிங்கம் என்றால் அந்தக் கிராமத்து ஆப்பக்கார அங்கம்மாவிலிருந்து ஜவுளிக்கடை ஐம்புலிங்க செட்டியார் வரைக்கும் அத்துப்படிதான். வாத்தியார் வீட்டு ஆப்பக்கடைச் சுவரில் சுண்ணாம்புப் புள்ளி இட்டு அவரை அழியாச் சித்திரமாக ஆக்கியிருந்தாள் அங்கம்மாள். ஜவுளிக்கடைப் பேரேடு, 92,93 பக்கங்களில் "வாத்தியார் வைத்தியலிங்கம் பாக்கி" என்ற தலைப்பைத் தீட்டியிருந்தார் செட்டியார்.

காலை நேரம். துரிஞ்சப்பட்டு கிராமம். அதோ கழனி வரப்பில் ஈரத்துண்டுடன் குளித்துவிட்டு வருகிறாரே அவரேதான் வைத்தியலிங்கம். சுமார் முப்பத்தைந்து வருடங்களாக அந்தத் துரிஞ்சலாற்றில் அதே நேரத்தில் குளித்து வந்திருக்கிறார் வைத்தியலிங்கம். காலநிலைக் கோளாறு ஏற்பட்டாலும் அவர் துரிஞ்சலாற்று முழுக்குக்குக் கோளாறு ஏற்படவில்லை.

அன்னம்மாள் திரவிய சகாய பாடசாலையில் அவர் தலைமை ஆசிரியர். கிராமத்தார் பாஷைப்படி 'பெரிய வாத்தியார்.' நிர்வாகி நீலமேகம், கொஞ்சம் பசையுள்ளவர். ஏதோ நெருக்கடியான நேரங்களில் அவர் இரண்டு, மூன்று ரூபாய்கள் கூடுதலாகக் கொடுத்து 'சமய சஞ்சீவி'யாக விளங்கினார் வைத்தியலிங்கத்திற்கு. இச்செயல் ஒன்றே வைத்தியலிங்கத்தை அப் பாடசாலையில் தொடர்ந்து இருக்க வைத்தது.

நிர்வாகியின் மனைவி அன்னம்மாள், அவ்வப்போது உப்பு, புளி என்று அநாமதேயக் கடனைக் கொடுத்தது வேறு வைத்தியலிங்கத்தை வேறு பாடசாலைகள் உலகில் உண்டு என்ற எண்ணத்தையே மறைத்தது. துரிஞ்சலாறு, நிர்வாகி, இந்த இரண்டும் அவரை துரிஞ்சப்பட்டுவிலேயே நீடிக்கச் செய்தன. பள்ளிக்கூடப் பக்கமாக வரும் அந்த ஒற்றையடிப் பாதையில் வந்து, பள்ளிக்கூடத் தோட்டத்தில் மேயும் எருமையை விரட்டிவிட்டு, தன் வீட்டை நோக்கி வருகிறார் வைத்தியலிங்கம். ஈரத்துண்டை மூங்கில் முள் வேலியில் போட்டுவிட்டு உள்ளே நுழைகிறார்.

காலடிச் சத்தத்தைக் கேட்டதும், உள்ளே நடையில் படுத்திருந்த வாத்தியாரின் அருமைத் தாயாரின் இருமல், வேகத்துடன் வந்து, அதைத் தொடர்ந்து கோழையைத் துப்பும் சத்தமும் கேட்டது. பிறகு முனகலுடன் மூலையில் படுத்துக் கொண்டது இருமல். தோட்டத்தைப் பெருக்கிக் கொண்டிருக்கிறாளே அவள்தான் வைத்தியலிங்கத்தின் மூத்த பெண் விசாலம். வயது 1½ மாமங்கம் ஆகிறது. இது வரை கலியாணம் என்கிற பேச்சே இல்லை. மாயனூர் நாட்டு வைத்தியர் மகாலிங்கத்திற்கு இரண்டாந்தாரமாகக் கொடுக்கப் போவதாக ஆப்பக்கார அங்கம்மாளின் விமர்சனம். அதோ அந்தப் பாறை மீது போர்த்திக் கொண்டு காலை வெயிலில் உட்கார்ந்திருக்கிறாரே அவர்தான் வைத்தியலிங்கத்தின் தந்தை தாமோதரம் பிள்ளை. அவர் திருவண்ணாமலைத் தாலூக்காபீசில் 'சேவகர்' (பியூன்) வேலையிலிருந்து ஓய்வு பெற்றவர். அவர் இப்போதும், விக்டோரியா மகாராணியார் திருவண்ணாமலைக்கு வந்தபோது தாலூக்காபீசில்தான் வாழை மரம் நட்டதைப் பற்றிப் பெருமையாகச் சொல்வதுண்டு. அவருக்குப் பதினைந்து நாட்களாக முறைச் சுரம். ஊர் வைத்தியன் சடையனிடம்தான் ஆமையோடு பஸ்பம் வாங்கிச் சாப்பிடுகிறார். வெயிலில் உட்கார்ந்து சுரத்தைப் போக்குகிறார் போல் தெரிகிறது.

அதோ அந்த இடிந்த திண்ணையில் உட்கார்ந்து கிழிந்த புடவையைத் தைத்துக் கொண்டிருக்கிறாளே, காடு வெட்டி துரைசாமி பிள்ளை புத்திரி, அந்த அம்மையார்தான் வைத்தியலிங்கத்தின் வாழ்க்கைத் துணைவி மீனாட்சியம்மாள்.



அந்தம்மாள் இந்தியாவிற்கு அளித்த பாரதப் புதல்வர்கள் நான்கு. இருவர், 'அப்பா' பள்ளிக்கூடத்தில் படிக்கிறார்கள். மூத்தவன், கைலாசம் செட்டியார் கடையில் 'குமஸ்தா'வாக இருக்கிறான் மாதம் 96 அணாவுக்கு. அந்த மூத்த பையன் மனது வைத்தால் ஒரு அணா இரண்டணா எப்போதாவது கிடைக்கும் வைத்தியலிங்கத்திற்கு. அதைத் தன் வயதேறிய தாயாரிடம் கொடுத்து, பத்திரமாக வைக்கச் சொல்வான். கிழவி அதைச் சுருக்குப் பையில் வைத்து, அந்தப் பையைத் தலையணையிலிருக்கும் அந்தக் கிழிசல் உள்ளே வைத்து, அதன்மேல் தலையை வைத்துப் படுத்துக் கொள்வாள். இன்னொரு பையன், காடு வெட்டியில் தன் தாத்தா வீட்டில் ஆடு மேய்த்து வருகிறான். தான் பிறந்த ஊருக்கு எப்போதாவது வந்து போவான். வரும்போது சோளம், துவரை, இரண்டு மூன்று படி கொண்டு வருவான். வைத்தியலிங்கம் நிர்வாகி கொடுக்கும் சம்பளத்தைக் கொண்டு, ஆண்டிப் பிள்ளையின் அரிசி கடன், ஜவுளிக் கடை, செட்டியார், மளிகை, பால்காரி முதலிய பெருங் கடன்களை கொஞ்சம் கொஞ்சமாக அடைப்பார். மூத்த பையன் சம்பளம், இட்லிக்காரிக்கும், நாட்டு வைத்தியருக்கும் இரையாயிற்று.

வைத்தியலிங்கத்தின் ஆகாரத் திட்டமே அலாதியானது. காலை, பகல் இரு வேளையும் சோளத்தாலோ, கம்பாலோ செய்த கூழ் தான். இரவு மட்டும் அரிசிச் சோறு. அதிகம் மிஞ்சினால் இரவும் கூழ்தான். அப்படியிருந்தும் கதிர்வேலுவிடம் கம்பு வாங்கியதற்கு ரூ. 3-8-0 கடன் கொடுக்க வேண்டும் அவர்.

வைத்தியலிங்கத்தின் தாயாரின் வெற்றிலைப் பாக்கு, புகையிலை வேட்கையையும், தந்தை தாமோதரம் பிள்ளையின் பொடி வேகத்தையும் மூத்த பையன் தான் தணித்து வந்தான். ஏதோ செட்டியார் கடை இருக்கும் புண்ணியத்தால். மூத்த பையன் கடையிலிருந்து வந்தால் இரண்டு கிழங்களும் எழுந்து உட்கார்ந்து விடும்.

துரிஞ்சப்பட்டு அப்படியொன்றும் பெரிய கிராமம் இல்லை. பெரும்பாலும் ஏழை மக்கள். விரல் விட்டு எண்ணி விடலாம் பணக்காரர்களை. அந்தப் பணக்காரர்கள் இரு வேளை 'அரிசிச்' சோறு சாப்பிடுகிறவர்கள். மீதிப் பேர் வீடும் காடும் என்று கொல்லை மேட்டில் கிடந்து வருவார்கள்.

ஏது எப்படியாயினும் வைத்தியலிங்கம் குடும்பம் அந்த ஊருக்குப் பழமையானது. வைத்தியலிங்கத்தின் பால்ய நண்பர்கள் ரங்கனும், குப்பனும் ரயில்வேயில் பாயிண்ட்ஸ்மேனாக இருந்து எண்பது, தொண்ணூறு வாங்குகிறார்கள். அவர்கள் வேலைக்குப் போய்த்தான் கையெழுத்துப் போடக் கற்றுக் கொண்டார்கள். துரைசாமிக்கு கையெழுத்தே இன்னும் தெரியாது. அவன் பட்டாளத்திற்குப் போய் வந்து மெத்தை வீடு ஒன்று கட்டி, ஊற்று சுரக்கும் கொல்லைக்காடு ஒன்றும் வாங்கி பட்டாளத்தான் துரைசாமி ஆகி விட்டான். ஆனால் ஆசிரியர் வைத்தியலிங்கம்! எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் என்று புகழ்ந்து, புகழ்ந்து பேசுகிறார்களே! அத்தகைய எண்ணையும் எழுத்தையும் பிழையறக் கற்று பிறருக்குக் கற்பித்துவரும் வைத்தியலிங்கம்! அவருடைய வாழ்க்கை—அதிலே — வேதனை வறுமை-வாட்டம்-கண்ணீர்—துக்கம்—இவைகளைத் தவிர வேறு பகுதிகளே இன்னமும் ஏற்படவில்லை. முப்பது வருடங்களுக்கு முன் துரிஞ்சலாற்றில் வைத்தியலிங்கம் குளிக்கப்போனால் ரயில்வே பாலத்திலிருந்து ஓடும் தண்ணீரில் குளித்து ஆற்றையே அதம் செய்வார். ஆனால் இப்போதெல்லாம் படித்துறையோடு சரி, துரிஞ்சப்பட்டுக்கும் தண்டரை ரயில்வே ஸ்டேஷனுக்கும் மூன்று மைல். ஏரிக்கரை வழியாகத்தான் செயில் ரோடு. கிழக்கே மூன்றுமைல் போய் பிறகு ஸ்டேஷனுக்குப் போய், ரயில் ஏறி திருவண்ணாமலைக்குப் போக வேண்டும். ரயில் துரிஞ்சப்பட்டு வழியாகத்தான் போகும். இருந்தும் ஸ்டேஷன்



மூன்று மைல் தூரம். முன்பெல்லாம் வீட்டிலிருந்து ஓர் ஓட்டம்—ஆறு, ஆற்றிலிருந்து ஒரு நடை, ஸ்டேஷன். இப்படியாக ரயில் ஏறி திருவண்ணாமலை போய் விடுவார். இப்போதெல்லாம் அடிக்கடி திருவண்ணாமலை போவதில்லை. மாதம் ஒரு முறை ஆசிரியர் கூட்டத்திற்காக மட்டும் திருவண்ணாமலை போவார். அவ்வளவுதான். இப்போதெல்லாம் ஸ்டேஷனுக்கு வருவது அவருக்கு வெரெஸ்டு பிடிப்பது போலாகும். மிஞ்சிப் போனால் ஸ்டேஷனுக்கு வந்து அந்த ஒதிய மரத்தடியில் உட்கார்ந்து விடுவார்.

மீதி ஆசிரியர்கள் மூவரில் இருவர், காளை வயதினர். ஓர் துமரி, ஸ்திரீ ஜாபிதா! இவர் சர்வீஸ் அவர்கள் வயதைவிட 10, 12 வருடங்கள் வித்தியாசம் காட்டியது. எனவே அவர்களுடைய இளம் பருவம், இவருடைய முதுமையையும் அனுபவத்தையும் கண்டு மரியாதையுடன் ஒதுங்கின. பள்ளிக்கூட சம்பந்தமான ஓரிரு பேச்சுகள் அவர்களிடம்—அவ்வளவுதான். மீதி அவகாசமெல்லாம் தன் குடும்பத்தைப் பற்றித்தான் நினைப்பு அவருக்கு. மனதில் குடும்பக்கவலை என்ற பாசி நிறையப் படிந்திருந்தது.

ஐப்பசி மாதம், மழையே அந்த வருடம் இல்லை. துரிஞ்சலாற்றில் தண்ணீர் ஓடவில்லை. பள்ளங்களில் பாசி பிடித்து குட்டை குட்டையாக நின்று கொண்டிருந்தது. அந்தக் குட்டைகளையும் சிறுசிறு பையன்கள் கலக்கி மீன் பிடித்துக் கொண்டிருந்தார்கள். அடுத்த மாதம் திருவண்ணாமலைத் தீபம்,—திருவிழா எல்லாம். அந்த மாதம் ஆறுந்தேதியிலிருந்து விடாத மழை. மூன்று நாள் பூமியை மறைப்பது போல் மழை. எங்கும் தண்ணீர் மயம். துரிஞ்சலாறு நுப்பு நுரையுடன் 'ஹோ' என்ற இரைச்சலுடன் படுவேகமாக ஓடிக் கொண்டிருந்தது. தண்ணீர் வண்ணாத்தி மேட்டைக் கரைத்துக்கொண்டு சென்றது. வைத்தியலிங்கத்தின் தாயாருக்கு இருமல் அதிகமாகி விட்டது. சனியன் இந்த ஈரமே கிழவிக்கு ஒத்துக்கொள்ளாது. மழைக்காலத்தில் இப்படித்தான் எப்போதும்!

வைத்தியலிங்கத்தின் கொல்லைப்புற சுவர் வேறு விழுந்து விட்டது. தோட்டத்தில் இருந்த இரு மல்லிகை மரங்கள்கூட கொத்துக் கொத்தான பூக்களுடன் வேருடன் வீழ்ந்துவிட்டன.

ஒரு நாள் இரவு மழை விட்டு விட்டுத் தூறிக்கொண்டிருந்தது. வைத்தியலிங்கம் கூடத்தில் உட்கார்ந்து மாதாந்திரக் கணக்கை முடித்துக்கொண்டு இருந்தார். மணி ஏழுதான் ஆகியிருந்தது என்றாலும் மழையின் இருள் காரணமாக அப்போது பத்து மணியாகத் தெரிந்தது. குழந்தைகள் எல்லாரும் உள்ளே சாப்பிட்டுக்கொண்டிருந்தனர்.

“அப்பா, வைத்தி” — கிழவி முனகலுடன் கூப்பிட்டாள்.

"ஊம்" என்ற பதிலைக் கொடுத்தார் வைத்தியலிங்கம்.

"இம், இந்த வருடம் அண்ணாமலையார் தீபத்தைப் பார்க்க வேண்டும் என்று ஆசைடா" லொக், லொக் — அதற்குள் இருமல் வந்து தொலைத்துவிட்டது! கொஞ்ச நேரம் அமைதி. மீண்டும் கிழவி ஆரம்பித்தாள். "மேலைக்கு நான் இருப்பனோ, என்னவோடா, இந்த வருடம் தீபத்தையும் பார்த்துவிட்டு, கோயில் பக்கத்திலே இருக்கும் கங்காணி கடையிலே சூடாக பொரிவாங்கி தின்னுட்டு......" அதற்குமேல் பேச அவளால் முடியவில்லை. ஒரே இருமல். வைத்தியலிங்கத்தின் சிந்தனை சுழன்றது... எவ்வளவோ முறை அம்மாவுடன் தீபம் பார்க்கச் சென்றிருக்கிறோம். சுற்றி, சுற்றி ஊரையெல்லாம் காட்டுவாளே... சிந்தனையுடன் கணக்கையும் பார்த்துக்கொண்டிருந்தார். கணக்கு பிசகாக வீழ்ந்துவிட்டது. இந்த சமயத்தில், 'என்னடா, வைத்தி' என்று மறுபடியும் இருமியபடி அவனுடைய அம்மா கூப்பிட்டாள். இந்த இருமல் அவருக்கு எரிச்சலைத்தான் கொடுத்தது இந்தச் சமயம்.

"அட, சரிதாம்மா, சும்மா இரு. நீ வேறு உயிரை வாங்கிக்கிட்டு, எங்கும் போகாமல் வீட்டில் இருந்தால் போதும். தீபமும் தீவட்டியும்" — இவை எரிச்சலுடன் வைத்தியலிங்கம் கூறிய வார்த்தைகள்.

பாவம் அந்த சமயத்தில் சட்டென்று சொல்லிவிட்டார். பிறகு ஏதோ சமாதானம் சொல்லியிருக்கலாம் அதுவும் இல்லை. கிழவி, "ஊம்" என்று முற்றுப்புள்ளி வைத்து முடங்கிவிட்டது. பையனின் குடும்பக் கவலை கிழவிக்குத் தெரியாதா என்ன? இதுவரை பையனிடம் ஒன்றும் கேட்டதில்லை. இப்போது ஏதோ வாயைத் திறந்து கேட்டாள். வைத்தியலிங்கம் படுக்கப் போய்விட்டார். அவருக்கும் சிந்தனை தான்.

இரவு கிழவிக்கு இருமல் அதிகமாகிவிட்டது, சரியாகப் பேசக்கூட முடியாமல் போய்விட்டது. இது இப்படித்தான் என்று அவரவர்கள் நினைத்துத் தூங்கினர். வெளியில் மழை 'சோ' என்று பெய்துகொண்டிருந்தது.

'லொக்கு, லொக்கு'... ஊ-ம் ...ம்... ம். மேல் மூச்சு. அ...ப்... பா... வை...த்...தி, வை...த் கிழவியின் சுவாசம் அடங்கிவிட்டது. மழையின் சப்தத்திலும், சுவர்க்கோழியின் சப்தத்திலும் ஒன்றும் கேட்கவில்லை. எல்லோரும் போர்த்திக்கொண்டு தூங்கிக்கொண்டிருந்தனர். காதுகள் திறந்திருந்தால்தானே கேட்பதற்கு!

கிழவி தீபம் பார்க்காமலே, அணையும் தீபத்திற்கு அருகில் யாரும் இல்லாமலே, போய்விட்டாள். இந்த உலகத்தை விட்டே போய்விட்டாள்.



அந்த சாயம் போன சிவப்பு நிறப்புடவைக்கு அவள் உயிரைப் பிடித்து வைக்கத் திறன் இல்லை. உடலை மட்டும் தான் பிடித்து வைத்துக்கொண்டிருந்தது.

மழைதான் அந்த 'பெரிய வாத்தியாரின்' அம்மாவுக்காக அழுது வடிந்துகொண்டிருந்தது. எப்படியோ இரவு கழிந்தது. காலை மழைத் தூறலில்லை. கிராமத்தாரின் கூட்டம், வைத்தியலிங்கம் திண்ணையில் உட்கார்ந்து கதை பேசிக்கொண்டிருந்தது. வாசலில் புகை. மேள சப்தம். நிர்வாகி உதவியுடன் எப்படியோ கிழவியின் சடலம் துரிஞ்சலாற்றுப் புது வெள்ளத்தைப் பார்த்தபடியே புகைந்து அடங்கியது.

வைத்தியலிங்கத்திற்குக் 'கண்ணங்களில் கண்ணீர் வெள்ளம். கிழவியின் ஆசையை அணை போட்டுத் தடுத்து விட்டோமே என்ற வருத்தம். கடைசி காலத்தில் அவள் ஆசையை வாய் வார்த்தையிலாவது நிறைவேற்றவில்லையே என்று வேதனை.

கிழவி இறந்த மறுநாளுக்கு மறுநாள் தீபம். கிராமத்தார் தீபத்திற்கு சுறுசுறுப்பாகத்தான் இருந்தார்கள். கிராமத்துப் பையன்கள் பனம்பூவுக்காகப் பனைமரங்களை முற்றுகை இட்டார்கள். மறுநாள் மாலை தீபம் பார்க்க இன்றே நிர்வாகி ஆசிரியர்களுடன் மாலை டிரெயினுக்குத் தயாரானார். ஆசிரியர்களும் நிர்வாகியும் வைத்தியலிங்கத்தையும் வற்புறுத்தி அழைத்துக் கொண்டனர்.

வைத்தியலிங்கத்திற்குக் கொஞ்சமும் திருவண்ணாமலை போக இஷ்டமில்லை. ஏதோ நிர்வாகியின் வற்புறுத்தலுக்காகக் கிளம்பினார். ரெயிலில் ஏகப்பட்ட கூட்டம். நிர்வாகி கோஷ்டியினர் ஒரு பெட்டியில் ஏறி இடம் பிடித்தனர் நிற்பதற்கு. உட்கார இடமேது. வைத்தியலிங்கம் கதவோரத்தில் கம்பியைப் பிடித்துகொண்டு நின்றுவிட்டார். தூரத்திலே திருவண்ணாமலை கம்பீரமாகத் தெரிந்தது.

ரயில் மெல்ல நகர்ந்தது. அந்த மாலை நேரத்தில் துரிஞ்சலாறு அமைதியுடன் ஓடிக்கொண்டிருந்தது தெரிந்தது. துரிஞ்சலாற்று ரயில் பாலம் நெருங்கிவிட்டது. கிழவி சாம்பலான மேடு நன்றாகத் தெரிந்தது வைத்திக்கு.

வைத்தியின் சிந்தனை சுழன்றது. அந்த மேட்டிலிருந்து அந்த மாலை நேரத்தில் வெளிச்சம் தெரிந்தது. வைத்தியின் கண்கள் பூத்தன. அந்த ஜோதியின் நடுவே கிழவியின் முகம் தெரிவது போலவும், அந்த ஜோதி மெல்ல நகர்ந்து கம்பீரமாக நிற்கும் மலையில் ஐக்கியமானது போலவும் வைத்திக்கு ஒரே பிரமை. உடனே, தன்னை மறந்து, தான் ரயிலில் பயணம் செய்வதையும் மறந்து, அம்மா என்று கூவியபடி ஓடும் ரயிலிலிருந்து கீழே குதித்தார். அடுத்த வினாடி வைத்திய

லிங்கத்தின் சிதைந்த உடல், அவர் உடைந்தபேனா, கண்ணாடிப் பித்தான். இம்மூன்றும் ஒரே இடத்தில் இருந்து, தீபம் பார்க்கச் செல்வோருக்கு 'வழி அனுப்புதல்' கூறின. வைத்தியலிங்கத்தின் ஆயுள் தீபம் அணைந்துவிட்டது. இந்த அணைந்த தீபத்திற்குத் துரிஞ்சலாறு 'ஹோ' என்று ஒப்பாரி வைத்துக்கொண்டிருந்தது.

பாவம்! நிர்வாகியும், ஆசிரியர்களும் வைத்தியலிங்கம் தவறி வீழ்ந்து விட்டதாக நினைத்துக் கண்ணீர் விட்டனர். கண்ணீர் விடாமல் வேறென்ன செய்ய முடியும்! அவருடைய வாழ்க்கை வரலாறே கண்ணீரால்தானே நிரப்பப்பட்டிருந்தது. கண்ணீரிலே பிறந்து, கண்ணீரிலே வளர்ந்து, கண்ணீரிலே மறைந்து, பிறரிடமிருந்தும் கண்ணீரையே வரவழைத்தது அவருடைய வாழ்க்கை!

---

## அறிவுக் கதிர்

தேவையான சூழ்நிலை இல்லையென்று வருந்துவதில் பயனில்லை. சூழ்நிலை சரியாக இருந்தால் அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும். சரியாக இல்லையென்றால் அதனை மாற்றி அமைக்கவேண்டும். மாற்றி அமைப்பவர்கள்தான் வாழ்க்கையில் வெற்றி பெறமுடியும்.

— பெர்னாட்ஷா.

ஏராளமான அதிகாரம் ஒருவனிடம் குவிந்திருந்தும் அதனைத் தவறான முறையில் பயன்படுத்தாமல் இருப்பது — இதுதான், மிக உயர்ந்த பண்பாட்டின் தலைசிறந்த அடையாளம்.

— மெக்காலே.

தூய உள்ளமே கோயில்! நலிந்தோரைத் தேற்றுவதே தோத்திரம்! மக்கட் பணியே மகேசனுக்கு உகந்த பூசை! ஏழைகள் இதயத்தில் களிப்பூட்டும் பணி புரிதலே பகவானுக்குத் தேர்—திருவிழா—யாவும்!

— அண்ணாதுரை.

மேட்டிலிருந்து பள்ளத்தை நோக்கிப் பாய்ந்த தண்ணீர், மறுபடியும் மேட்டிற்கு வருவதில்லை. அப்படித்தான், காலமும், ஒருமுறை சென்றுவிட்டால் மறுமுறை திரும்புவதில்லை. ஆகவே, காலத்தை வீணாக்காதே. ஒவ்வொரு விநாடியையும் பயன் படுத்து.

— சாசர்.

---

# சோவியத் தந்த சிந்தனைச் சிற்பி

[இரா. இளஞ்சேரன்]

---

மல்லிகை அரும்பு மலர்ந்தால் மணம் வீசும்—வானம் கறுத்தால் மழை பொழியும்—மேகங்கள் ஒன்றோடொன்று மோதினால் இடி பிறக்கும். மின்னல்கள் நெளியும். இவைகள் இயற்கையின் பண்புகள்.

இவைபோல்தான் ஆதிக்க வம்சத்தவரின் அட்டகாசம் அளவு கடந்தால் விடுதலை விரும்பிகள் தோன்றுவதும் இயற்கை! ஆதிக்க கும்பலின் பலத்தை—சக்தியை தங்களது வீரத்தால் வெல்வோர் போர் வீரர்கள்! ஆதிக்க புரியினரின் அதிகாரத்திற்கு அடிமைப்பட்டு நெளியும் மக்களின் மனதில் கவிந்திருக்கும் அறியாமையைத் தங்களது எழுத்துகளால் விரட்டுவோர் பேனா வீரர்கள்! இவர்களுள் ஒருவர்தான், புன்னகை சிந்தும் பொதுவுடமை ரஷ்யா அளித்த எழுத்து மன்னர்—சோவியத் தந்த சிந்தனைச் செல்வம் **மாக்சிம் கார்க்கி.**

1869-ம் வருடம் ரஷ்யாவில் நிஜினி எனும் நகரில் பிறந்தார் கார்க்கி. தங்கத் தொட்டிலிலே அவர் தாதியரால் தாலாட்டப் படவில்லை. உழைப்போர் வதியும் உருக்குலைந்த பகுதியில்—சமூகத்தின் 'அடிமைச் சின்னங்கள்' வாழும் அழுக்கேறிய குடிசையில் பிறந்தார். மாகதத் தொட்டில் — மலர் மஞ்சம் — மகிழ்ச்சியிலே மிதக்கும் வாழ்வு, இவைகளல்ல, அவர் கண்டது. மண் குடிசை—மரணத்தோடு போராடும் பாட்டாளிகள், மகிழ்ச்சியின் நிழல்கூடப் படாத வாழ்வு இவைகளே, அவரது சுற்றுச் சார்புகளாக அமைந்தன. தவழும் பிராயத்திலேயே தாய் தந்தையரை இழந்த கார்க்கிக்கு அவரது பாட்டியாரின் பாசமே பாதுகாப்பாக இருந்தது. குடும்பத்தின் மற்ற உறவினர்கள் கார்க்கியின்மேல் கொடுமைக் கனலைத்தான் கொட்டினர். பாடுபட்டுப் பசியைப் போக்கும் பரம்பரையில் பிறந்த கார்க்கிக்குப் பள்ளிவாசல் வழிவிடவில்லை. கல்வி கார்க்கியைப் பொறுத்தவரையில் கனவாகவே முடிந்தது.

தமது பத்தாவது வயதிலே—வாழ்வின் பயங்கரங்களைக் காணும் பக்குவமடையாத பருவத்திலே—கார்க்கி வீட்டை விட்டு வெளியேறினார். அவரது பிரிவால் வருந்தியவர் பாட்டியார் ஒருவர்தான்!

கூட்டை விட்டு வெளியே வந்த கிளி கும்மாளமடித்தது. வீட்டை விட்டு வெளியேறிய கார்க்கியை வாழ்வின் வேதனைகள் இரு கரங்களை நீட்டி வரவேற்றன. கார்க்கியின் இளம் பருவ வாழ்விலே ஏழ்மை இடி—

வறுமையின் மின்னல்கள்—சோக மழை—இல்லாமைத் தொல்லை, இவைகளே 'பஞ்சப் பாட்டு' பாடின. சூதும், சூழ்ச்சியும் நிறைந்த உலகம், சிறுவன் கார்க்கியைப் பல வழிகளிலும் சித்ரவதை செய்தது. வாழ்வின் வேதனைகளைப் போராடிப் போராடி வேரோடு வீழ்த்த முயன்றார் கார்க்கி. **டோப்ரி** என்ற ஓரிடத்தில் எச்சில் தட்டுகளைக் கழுவும் அலுவலில் அமர்ந்தார். அங்கு வேலை பார்த்தவனிடமிருந்து பழைய இலக்கியங்களை வாங்கிச் சிறிது சிறிதாகப் பயின்றார். கூலி வேலை செய்த பொழுதெல்லாம், சிறுகதைகள், நாவல்கள், தத்துவ நூல்கள் இவைகளைப் படித்து மனதைப் பக்குவப்படுத்தினார். சில காலம் ரொட்டிக் கிடங்கில் வேலை பார்த்தார். இரவும், பகலும் ஓயாத அலுவல் அவருக்கு இருந்துகொண்டேயிருந்தது. படிப்பதற்கு நேரமேயில்லை. ஆனால் அவரால் படிக்காமலிருக்கவும் முடியாது. ரொட்டி சுடும் பொழுது இரு விறகுகளினிடையே, ஏட்டைப் பிரித்து வைத்து, படித்துக்கொண்டே அலுவல்களை கவனிப்பார். 'நாமும் எழுதவேண்டும்' என்ற ஆசை அவரது இதயத்திலே முளை விட்டது. இலக்கிய 'பசி' கொண்டு திரிந்தார். அறிவுக்குத் 'தீனி' போட அவர் அயரவேயில்லை. சாகும் வரையில் புத்தகக் கடலில் மூழ்கி முத்தெடுக்க அவர் சலிக்கவுமில்லை.

ஒரு சமயம் கார்க்கியின் 'அடுக்களைப் படிப்பு' முதலாளியின் கண்களிலே அகப்பட்டுக்கொண்டது. கோபத்தால் குதித்தார் முதலாளி. புத்தகத்தை எடுத்து எரிதீயில் போட முனைந்தார். அவ்வளவுதான்! கார்க்கி புயலானார்! கண்களிலே கனல் புகைய 'புத்தகத்தை நெருப்பில் போட்டால், விளைவது வேறு' என கர்ஜித்தாராம்.

கார்க்கி எங்குமே நிலையாகக் காலம் கடத்தியதில்லை. ஊர் ஊராக அலைந்தார். செருப்புக் கடையில் சில நாட்கள் வேலை செய்தார். காட்டிலே கண்ணி வைத்துப் பறவைகளைப் பிடித்து, விற்றுக் காலம் கழித்தார். பதினைந்தாவது வயதிலே 'கலாசாலையில் சேர்ந்து படிக்கவேண்டும்' என்ற ஆசை அவரை அரித்தது. படிப்பதற்காகப் படாத பாடெல்லாம் பட்டார். குபேர புத்திரர்களுக்குத்தான் பள்ளிக்கூடம் இடம் கொடுத்தது. பஞ்சைகள் படிப்பதற்கு தகுதியற்றவர்கள் என்ற எண்ணம் பரவியிருந்த காலம்! வெட்கங்கெட்ட இந்நிலை ரஷ்யாவிலிருந்தது அன்று.

லெனின் தோன்றாத நேரம்! பொதுவுடைமைக் கீதம் பிறக்காத வேளை. உழைப்பு உதாசீனப் படுத்தப்பட்டது, அப்போது. பணக்கழுகுகள் பாட்டாளிகளின் உழைப்பைத் தங்களது வசந்த வாழ்விற்காகப் பயன்படுத்தின. 'மாளிகையிலே மதுர



கீதம்—மண் குடிசையிலே மரணத் துடிப்பு' என்ற நிலை! கார்க்கி பாடுபட்டு வாழும் பரம்பரையினர்தானே! அவர் கற்க ஆசைப்பட்டார். ஆனால் அதற்காக அவர் செல்லவேண்டிய பாதை பயங்கரமாயிருந்தது. கார்க்கியின் நெஞ்சம் வேதனையால் விம்மியது. வாழ்வு அவருக்கு வேம்பாகக் கசந்தது. அவர் கேட்டது, பளிங்கு மாளிகையும், பஞ்சணையுமல்ல; படிப்பு! 'அது' கிடைக்கவில்லை, அவருக்கு!

சில நாட்கள் நதிக்கரையில் வரும் ஓடங்களிலுள்ள மூட்டைகளை இறக்குமதி செய்யும் வேலை பார்த்தார். முதலில் சிறுகதைகள், நவீனங்கள் படித்த கார்க்கி, நாளடைவில் பேரிலக்கியங்களைப் படித்தறியும் அளவிற்கு முன்னேறினார். படித்தவைகளையெல்லாம் தம் 'டைரி'யில் குறிப்பெழுதி வைத்துக்கொள்வார். பல பாடல்களும் கார்க்கியால் உருப்பெற்றன. வேதனை—வறுமை—வாட்டம், இவைகளினிடையே கார்க்கி வாலிபப் பருவம் எய்தினார். வாழ்க்கை வசந்தமாக விளங்கவேண்டிய வயது—பல சுகக் கனவுகள் சிந்தையில் சிருஷ்டிக்கப்படவேண்டிய பருவம்—மாருதம்—மதுர இசை—மனோகரமான எண்ணங்கள், இவைகளிலே ஈடுபடவேண்டிய கார்க்கி இறப்போடு விளையாட முனைந்துவிட்டார்.

ஒரு நாள் வாழ்க்கையை வெறுத்த கார்க்கி துப்பாக்கியை நெஞ்சில் குறிவைத்து சுட்டுக்கொண்டார். துப்பாக்கிக் குண்டுகள் அவரது நெஞ்சைத் துளைத்துவிட்டன. 'பிழைப்பது அரிது' என மருத்துவர்கள் உதட்டைப் பிதுக்கினர். 'மரணமா! எனக்கா? நான் சாகமாட்டேன்—சாகமாட்டேன்' எனக் கூறினார் கார்க்கி. கடைசியில் அவர் பிழைத்தேவிட்டார்! அவர் இறந்திருந்தால்... உலகம் ஓர் உன்னதமான இலக்கிய மன்னனை இழந்திருக்கும். சோவியத்தின் சிந்தனைச் சிற்பி என்ற புகழ் பரவாமலேயே சமாதிக் குழியில் புதையுண்டிருப்பார். கார்க்கி ஒரு கருத்து அரும்பு, மணம் பரப்பாமலே கல்லறைக்குச் சென்றிருக்கும். ஓர் அறிவு விளக்கு தன் ஒளிக் கதிர்களை உலகிற்கு அளிக்காமலேயே அவிந்திருக்கும்.

சிலகாலம் இரவில் புகை வண்டி நிலையப் பாதுகாப்பாளராகப் பணியாற்றினார்., கார்க்கி. புகை வண்டித் தொழிற்சாலையிலும் பணி செய்தார். கார்க்கி பாடுபட்ட துறைகள் பல. **டிப்னில்** வாழ்ந்த **கஜிலுனி** எனும் நண்பரால் **காங்கரஸ்** எனும் பத்திரிகையில் கார்க்கியின் முதல் கதை வெளிவந்தது. பல பத்திரிகைகளில் கார்க்கியின் கதைகள் வெளிவந்தன. பீங்கான் தட்டுகளை ஏந்திய கரம் பேனா பிடித்தது! இரும்புச் சாமான் க[illegible]ங்கள் [illegible]ன! புகைக் குழாய்கள், பிரமாண்டமாக

186905

அடுப்புகள்—பொங்கி வழியும் நெருப்பு இவைகளைக் கண்டு சலித்த கண்கள் புதுப்புது சம்பவங்களைத் தேடித் திரிந்தன! கார்க்கியின் வாழ்க்கை ஏட்டிலே கண்ணீரால் எழுதப்பட்ட பகுதி முடிந்தது. புதிய பாதையிலே நடை போட்டார் கார்க்கி. வேதனையும் வறுமையும் அவரைக் கண்டு மிரண்டோடின. கார்க்கியும் காதலித்தார்; கல்யாணம் செய்துகொண்டார். ஓல்கா எனும் இளவஞ்சி கார்க்கியின் இதய வீணையை மீட்டினாள். கணவனும், மனைவியுமாயினர், இருவரும் தனது சொந்தமான நிஜினிக்குச் சென்று சிறிது காலம் இல்லறம் நடத்தினார்கள்.

கணக்கற்ற காதலர்களைத் தமது கதைகளிலே இணைத்த பேனா மன்னர் தனது துணைவியைத் தேர்ந்தெடுத்ததில் தோல்வியே கண்டார். ஓல்கா பித்தளை......கார்க்கியோ தங்கக் கட்டி! அவர் சலசலவெனப் பாய்ந்தோடும் சிற்றருவி. இவள், நாற்றப் புழுக்கள் நெளியும் சாக்கடை! இருவரும் இரு துருவங்களாயினர். கார்க்கி தமது காதல் வாழ்வில் கசப்பைத்தான் கண்டார். இல்லறம் அவருக்குத் தொல்லையைத்தான் கொடுத்தது. ஓல்கா ஆணவக்காரி! அகம்பாவி! கார்க்கியினிடமிருந்து பிரிந்து சென்றாள். கார்க்கிக்கு மற்று மொ[illegible]ருந்தில்! [illegible]மதி [illegible]—கை [illegible] எழு[illegible] ஞர்—எழுதிக்கொண்டே இருந்தார். கார்க்கி கருத்து அருவியானார்! கற்பனைச் சுரங்கமானார்! கணக்கற்ற ஆசிகள் கார்க்கியைத் தழுவின! அவரது சிறுகதைகள் இரண்டு தொகுதிகளாக வெளிவந்தன. அதற்கு மக்கள் அமோக ஆதரவளித்தனர். இலக்கியவானில் தனித் தாரகையாக எழில் வீசினார் கார்க்கி. அவரது புகழ் பரவப் பரவ, ஜார்மன்னன் கோபத்தால் புகைந்தான். அரச ஒற்றர்கள் கார்க்கியின் மேல் கண்ணாயிருந்தனர். சட்ட புத்தகத்தின் இடுக்குகள் கார்க்கியை நசுக்க சமயம் பார்த்திருந்தன. கார்க்கியின் வரவிற்காக சிறைக் கதவுகள் திறந்து வைக்கப்பட்டன. ஜாரின் கொடுங்கோல் ஆவேசக் கூத்தாடியது! கார்க்கி கைது செய்யப்பட்டு காராக்கிரகத்திலே தள்ளப்பட்டார் பல முறைகள். அவருக்குச் சிறை வாழ்வைப் பரிசாக அளித்தன, அவரது எழுத்துக்கள். சிறைவாசம் அவரது புரட்சி எண்ணங்களுக்குப் புது மெருகை அளித்தது. விடுதலையடைந்து வெளியே வருவார்—எழுதுவார்—சிறையிலடைக்கப்படுவார். மீண்டும் விடுதலை—எழுத்து — சிறைவாசம்! ஜார் பித்துப் பிள்ளை ஆட்டம் ஆடினான்! மக்களது ஆதரவு யார் பக்கம் குவிந்தாலும் ஜார் மனம் பதைப்பான். கார்க்கியின் வீட்டினுள்ளும், வெளியேயும் சிப்பாய்கள் காவல் வைக்கப்பட்டனர். கார்க்கி தணலிலிட்ட தங்கமானார். அவரது இலட்சிய



வாழ்வில் மேலும் ஒரு புது அத்தியாயம் இணைக்கப்பட்டது.

1902-ல் ரஷ்யாவிலுள்ள அறிஞர் கழகம் கார்க்கியை கௌரவ அங்கத்தினராகத் தேர்ந்தெடுத்தது. ஜார் சீறினான்! 'அரச துரோகியை' அறிஞர் கழகத்தார் தேர்ந்தெடுத்ததாக பலமாக ஆட்சேபித்தான்! விளைவு...? அறிவு, அதிகாரத்திற்கு அடி பணிந்தது! கார்க்கி அப்பதவியிலிருந்து விலக்கப்பட்டார். கழகத்தின் மற்ற உறுப்பினர்களான **செஹோவும், கோரேலெங்கோவும்** இச்செயலைக் கண்டித்துத் தங்களது அங்கத்தினர் பதவிகளை உதறித் தள்ளினர்.

1905-ம் ஆண்டு கர்ம வீரர் கார்க்கியும், புரட்சி பூகம்பம் லெனினும் சந்தித்தனர்! இரு பெரிய சக்திகள் இணைந்து கொண்டன! பேனாவும், புரட்சி ஆர்வமும் கை குலுக்கிக்கொண்டன! தங்க மாளிகைக்கு வைரக் கோட்டை அரணாயிற்று! ஆதிக்கவாசிகளின் ஆனந்த வாழ்வு சரிய ஆரம்பித்தது. **ஸ்டாலின்** போன்ற புரட்சித் தலைவர்கள் கார்க்கியைப் போற்றினர்.

ரஷ்யாவில் நிகழ்ந்த புரட்சிக்கு வித்திட்ட வீரர்களுள் கார்க்கியும் ஒருவர். கார்க்கி கண்ட கனவு அவரது காலத்திலேயே நனவாயிற்று. ஜாரின் அரசு சரிந்தது! மதப் பித்தர்கள் மண்ணைக் கவ்வினர். பொதுவுடமை பூத்தது! மக்கள் இவருக்களித்த மதிப்பிற்கு அளவேயில்லை. 1936-ம் வருடம் தமது அறுபத்து நான்காம் வயதில்—சோவியத் மக்கள் கண்ணீர் சிந்த கார்க்கி காலமானார். உலக வரலாற்றிலிருந்து ஒரு எழிலேடு கிழிக்கப்பட்டது! ஒரு இலட்சியத் தொடர் கதை முடிந்தது!

கார்க்கி பலரோடு இணைந்து பழகியவர். பாட்டாளிகள்—குடிகாரர்கள்—நடிகர்கள்—படைவீரர்கள், கப்பலோட்டிகள்-வணிகர்கள் இவர்கள் கார்க்கியின் வாழ்க்கைப் பாதையில் வந்து போயினர். இந்த அனுபவங்களே அவரது கதைகளுக்குத் தாய்ச் சரக்காயின. ரஷ்ய மக்களின் வாழ்க்கை முறைகளை 'உள்ளது உள்ளபடியே' எடுத்துக் காட்டின, இவரது எழுத்துக்கள். சமூகத்தின் நெஞ்சைப் பிளந்து அங்கே ரத்த வாடை வீசும் நாற்றப் பகுதிகளை நாட்டு மக்களுக்குக் காட்டினார் கார்க்கி. அவர் காதலைப் பற்றி வரைந்தார்; காமத்தைப்பற்றி எழுதினார். கட்டழகிகளான கதாபாத்திரங்களை சிருஷ்டித்தார்.

'சமூகத்தின் நடப்புகள் கதைகளில் பிரதிபலிக்கக்கூடாது. அப்படிப்பட்ட கதைகளால், படுக்கையறை இலக்கியங்களால், வாலிபர்கள் வழுக்கி விழுந்து விடுவார்கள்,' என்ற வகை கெட்ட முறையில் இங்கு பாடிப் பறக்கின்றனவே சில பட்டாம் பூச்சிகள், இவர்கள் கூற்றுப்படியுள்ள இலக்கியங்களைத்தான் கார்க்கி எழுதினார். சோவியத்

பூமி இன்று காமக் களிறுகள் கொம்மாளமிடும் நாடாகவில்லை. கண்ணியமும், புகழும் மிக்க பொதுவுடைமை நாடாயிருக்கிறது. சோவியத் மக்கள் சமூகத்தை செப்பனிட்டன, கார்க்கியின் எழுத்துச் சித்திரங்கள்.

அவர் எண்ணியிருந்தால்...... சீமானின் பெட்டியிலிருக்கும் வைரக் கற்கள்—அதை வம்பிற்கிழுக்கும் வனிதையரின் புன்னகை! மாளிகையில் தாவப்பட்டிருக்கும் பளிங்குத் துண்டுகள்—அதைப் பார்த்துப் பரிகசிக்கும் பசுங் கிள்ளைகளின் கண்ணாடிக் கன்னங்கள்! வசந்த மண்டபத்திலிருக்கும் நீர் ததும்பும் அல்லித் தடாகம்—அதன் பெருமையை நிலைகுலையச் செய்யும் வசந்த வல்லிகளின் நீள் விழிகள்!—இவைகளை மட்டுமே ஏடுகளில் தீட்டியிருக்கலாம். அது அவரால் முடிந்திருக்கும். மாணிக்கக் குவியலும் மரகத வாழ்வும் அவரது காலடியில் மண்டியிட்டிருக்கும். பணக்காரர்களின் பனிப் பார்வை அவரைக் குளிர வைத்திருக்கும். ஆனால் கார்க்கி அந்தப் 'பிண வாழ்வை' வெறுத்தார். வீழ்ந்த சமூகத்தை நிமிர்த்தும் வேல்களாயின அவரது எழுத்துக்கள். அவ்ரது எழுத்துக்களில் வறுமையின் வாடை வீசும். பாட்டாளிகளின் பரிதாப விருத்தம் ஒலிக்கும். உழைப்போரின் வேதனையைக் காட்டுவதற்காகவே அவர் உல்லாச] சீமான்களைக் காட்டுவார். கார்க்கியின் கதை உறுப்பினர்கள், பரிமள வாழ்விலிருந்து கொண்டு பலப் பல எண்ணி பஞ்சணையில் பதைக்கும் ரசவல்லிகளல்லர்; கிடைத்ததை உண்டு உறங்கும் பிச்சைக்காரர்கள். அன்றாடம் காய்ச்சிகள், அரை வயிற்றுத் கஞ்சிக்கும் வகையற்ற அனாதைகள், நிலையற்ற வாழ்க்கையினர், வலைஞர் ஆகியவர்களை வைத்துக் கொண்டே கதைகள் பின்னினார் கார்க்கி. கதியற்றவர்களும் காதல் செய்வதை அவர் கண்டார். உழைப்பாளிகளுக்கும் உள்ளம் இருக்கிறது என்பதை அவர் எடுத்துக் காட்டினார். கார்க்கியின் கதைகள், உயிர்ச்சித்திரங்களாக உருப்பெற்றமைக்கு இத்தகு பாத்திரங்களே, காரணமெனக் கூறலாம். அகிலம் போற்றும் 'அன்னை' அவரது உன்னதமான இலக்கிய சிருஷ்டிகளுள் ஒன்று. கதைகள் மட்டுமல்ல, கட்டுரைகள் நாடகங்கள் முதலியவைகளையும் கார்க்கி தமது எழுத்துக்களில் வடித்தார்.

“வாழ்க்கை ஒரு சிறைச்சாலை, அங்கு நம்மைப் பரவசப்படுத்தப் பாடிவரும் பறவைகளே ஏடுகள்’ — என கார்க்கி அடிக்கடி சொல்வார்.

இளமையிலேயே பல இன்னல்களுக்குப் பலியான கார்க்கியை—, வளமை மிக்க நாட்களை வாட்டத்திலேயே கழித்த கார்க்கியை — அவரது எழுத்துக்களே உன்னத

(55–ம் பக்கம் பார்க்க)

# இந்தியாவின் மொழிப் பிரச்சினை

[ஐராவதி கார்வே (Irawathi Karve) என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய 'மொழிப் பிரச்சினை' (The Language Problem) என்ற அருமையான கட்டுரையே, சிறிது சுருக்கமாக, மொழிபெயர்ப்பாகக் கீழே தரப்படுகிறது. இந்தியாவின் மொழிப் பிரச்னையைத் தீர்க்க அவர் கூறும் விளக்கங்களும், முடிவுகளும் கருத்து நிறைந்தவைகளாகும். புதிய எதிர் காலத்தை உருவாக்க அவரது கருத்துக்கள் பெரிதும் பயன் படுவனவாகும். (ஆ-ர்.)]

**அவசர–அவசியத் தன்மைகள்:**

பல்வேறுபட்ட மொழிகளைப் பேசும் பல மாநில அரசுகள், ஒன்று சேர்ந்த ஒரு இணைப்புப் பேரரசுதான் **இந்தியா** என்பது.

இந்தியாவின் மொழிப் பிரச்சினை பல்வேறு தன்மைகளை உள்ளடக்கிய ஒன்றாகும். அவற்றில் மிக அவசர—அவசியமானவைகளாகக் கருதப்படும் தன்மைகள் கீழ் வருமாறு:

(1) மாநிலத்திற்குள்ளே நடைமுறை வழக்காற்றிற்கும், கல்விப் பயிற்சிக்கும் உரிய மொழியாக எந்த மொழியைக் கொள்ளுவது?

(2) மாநிலங்களுக்கிடையே கொள்ளவேண்டிய நடைமுறை வழக்காறு, மத்தியப் பாராளுமன்றம், மத்திய அரச அலுவலகம், அகில இந்திய அரச அலுவல்கள் ஆகியவற்றிற்கான மொழியாக எந்த மொழியைக் கொள்ளுவது? வேறு சொற்களால் குறிப்பிடவேண்டுமானால், இந்தியப் பேரரசின் (யூனியன்) மொழியாக எந்த மொழியைக் கொள்ளுவது?

(3) வெளியுலகத் தொடர்பு பற்றி நடைமுறை வழக்காறு மொழியாக எந்த மொழியைக் கொள்ளுவது?

பல்வேறு மொழிகளை உள்ளடக்கிக்கொண்டிருக்கும் பிற உலக நாடுகளைப் பார்த்து இந்தியா தன்னுடைய மொழிப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள முடியாதா? என்றால், இந்தியாவின் பண்பாட்டு–அரசியல் நிலை, பிற பல்மொழி நாடுகளோடு

---

(54–ம் பக்கத் தொடர்ச்சி)

நிலைக்கு இழுத்து வந்தன. **ஆண்டன், செஹோவ், டால்ஸ்டாய், டர்க்னீவ், டாஸ்டவஸ்கி** போன்ற எழுத்து வேந்தர்களுக்கிடையே கார்க்கியின் பெயரும் பொறிக்கப்பட்டது. மார்க்சிம் கார்க்கி கதை யுலக மேதை—சோவியத் தந்த சிந்தனைச் சிற்பி — அவர், மக்களின் பொதுச் சொத்து.

(போர்வாள்.)

முழுக்கவும் ஒப்பிட்டுப்பார்க்கக் கூடியதாக அமைந்திருக்கவில்லை; எனவே அந்நாடுகளின் எடுத்துக்காட்டு நமக்குப் பெரிதும் பயன்படுவதாக இருப்பதில்லை. மூன்று முக்கியப் பல்மொழி நாடுகளை எடுத்துக்கொண்டு ஆராய்ந்து பார்த்தால், இந்தியா அவற்றோடு ஒட்டிவாராதத் தனித் தன்மை பூண்டு விளங்குவதை எளிதில் கண்டுகொள்ளலாம்.

## அமெரிக்காவின் நிலை

அமெரிக்கா, உலகிலுள்ள கிட்டதட்ட எல்லா மொழி பேசும் மக்களையும் தன்பால் ஏற்றுக்கொண்டிருந்தாலும், அது ஒரு மொழிநாடாகக் காட்சியளிக்கிறது. அமெரிக்காவும் இந்தியாவும் வரலாற்று—பண்பாட்டுத் துறைகளில், எவ்வளவு வேறுபாடுகளைக் கொண்டிருப்பவை ஆகும் என்பதை விளக்கத் தேவையில்லை; யாவரும் எளிதில் உணர்ந்திருக்கவே செய்வர். அமெரிக்கா முதன் முதலில் முழுக்க முழுக்க ஆங்கிலேயரின் ஆதிக்கம் நிறைந்த குடியேற்ற நாடாக இருந்தது. டச்சு—பிரெஞ்சு—சுபெயின் நாட்டவர்கள் சிறிது சிறிது குடியேறியிருந்தனர் என்றாலும், மேற்கு நோக்கி மேலும் பரவத் தொடங்கிய ஆங்கிலக் குடியேறிகளுக்குள், அவர்களெல்லாம் நாளடைவில் கலந்து—மங்கி—மறைந்து போயினர். அண்மையில் குடியேறிய மக்களினங்கள், அமெரிக்கா ஒரு ஆங்கிலம் பேசும் நாடு என்று நிலைநாட்டப்பட்ட பிறகே புகுந்தனவாகும். புதிதாகக் குடியேறிய மக்கள் சிறு சிறு தொகையினராக இருந்தாலும், அவர்கள் அமெரிக்காவை வாழ்வதற்கேற்ற பாதுகாப்பான இடமாகக் கருதிச் சென்றதாலும், அவர்கள் எல்லோரும் அங்கு நிலை நின்ற ஆங்கில மொழியை விருப்பத்தோடும், ஆர்வத்தோடும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருந்தனர். அமெரிக்காவில் பல்வேறு மொழித் திட்டுகள் ஆங்காங்கு அமைந்திருக்கின்றன என்றாலும், அவைகள் பன்னெடுங் காலமாகவே அரசியல் மேம்பாடு பெறும் நோக்கத்தைப் பெறாமலேயே இருந்து வருவதால், அவைகள் பிரச்சினைக்குரியவைகளாகக் கருதப்படவே இல்லை. ஆங்கிலமே அமெரிக்காவின் அரசியல் மொழியாகவும் பொது மொழியாகவும் இருக்கும் நிலையை, அமெரிக்க வரலாறு, சிறு எதிர்ப்புக்கும் இடமில்லாத வகையில், நீண்டகாலமாகவே உருவாக்கிவந்துவிட்டது.

## சுவிட்சர்லாந்தின் நிலை

சுவிட்சர்லாந்து மூன்று மொழிகளைக் கொண்டிருக்கிறது. மூன்று மொழிகளுக்கும் சம அரசியல் உரிமை வழங்குவதன் மூலம் அது தன்னுடைய மொழிப் பிரச்சினையைத் தகராறுக்கு இடமில்லாத வகையில் தீர்த்துக்கொண்டுவிட்டது. [அண்மையில் ரோமன் (Romansch) மொழியையும் நான்காம் மொழியாகச் சேர்த்



துக்கொண்டுள்ளது.] இம்முறையை அது எளிதாகக் கடைபிடிப்பதற்குக் காரணம், அது இந்தியாவிலுள்ள பதினான்கு மொழிகளைப் போலில்லாமல். மூன்று மொழிகளை மட்டுமே கொண்டிருப்பதாகும். சுவிட்சர்லாந்து மிகச் சிறிய நாடாக இருப்பதால், பல்வேறு மொழிப் பிரிவினரும் ஒருவரோடொருவர் நெருங்கிப் பழகுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுவிடுகிறது; அதனால் ஒரு மொழிப் பிரிவினர் மற்றொரு பிரிவினரின் மொழியை எளிதில் கற்றுக்கொள்வதற்கு இயலுகிறது. எனவே மூன்று மொழிகளும் அரசியல்—பொது மொழிகளாக நடமாடுகின்றன.

## உருசியாவின் நிலை

உருசியா பல மொழிகளைக் கொண்ட ஒரு பெரிய நாடாகும். அந்நாட்டவர்கள் உருசிய மொழியைக் கூட்டாட்சி மொழியாக வைத்துக்கொண்டும், ஒவ்வொரு மாநிலத்தின் மொழியையும் அந்தந்த மாநிலத்தின் நடைமுறை வழக்காற்று மொழியாகவும், அந்தந்த மாநிலத்தின் கல்வி பயிற்றுவிக்கும் மொழியாகவும் ஆக்கிக்கொண்டும் தங்கள் மொழிப் பிரச்சினையைத் தீர்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

மேற்பார்வைக்கு உருசியாவின் நிலைமையும், இந்தியாவின் நிலைமையும் மொழிப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் ஒன்றுபோலவே தோன்றும். ஆனால் ஆழ்ந்து ஆராய்ந்து பார்க்கப்போனால், உண்மையில், உருசியாவின் நிலைமைக்கும் இந்தியாவின் நிலைமைக்கும் அடிப்படையான வேற்றுமைகள் நின்று நிலவக் காணலாம். அவற்றிலிருந்து இந்தியாவுக்கு உருசியாவை எடுத்துக் காட்டாகக் கொள்ளுதல், அடிப்படையிலேயே பொருந்திவராது என்பதை உணரலாம்.

உருசியாவில், உருசிய மொழி பேசும் மக்கள், பல நூற்றாண்டுகளாகவே ஆட்சி ஆதிக்கம் செலுத்தும் மக்களாக இருந்து வருகிறார்கள். உருசிய மொழி உயர் கல்விக்கேற்ற, பண்பாடு செறிந்த, இலக்கியங்கள் நிறைந்த, அறிவியல் நிரம்பிய மொழியாக அன்றும் இன்றும் இருந்து வருகிறது. உருசியாவில் இன்றும் அரசியல் கருத்துக்களைக் கோவைப்படுத்தி அழகுற எடுத்துச் சொல்லுவதற்கு ஏற்ற மொழியாகப் பயன்படுத்தப்படுவதும், அதற்கேற்றவாறு பக்குவப்படுத்தப்படுவதும் ஆனமொழி உருசிய மொழியேயாகும். காரல் மார்க்சும், எங்கெல்சும் தங்கள் கருத்துக்களைப் பெரும்பாலும் செர்மனி மொழியில் வெளியிட்டிருந்தபோதிலும் லெனின்—புகாரின்—சுடாலின் ஆகியோர் தங்கள் கருத்துக்களை உருசிய மொழியில்தான் எழுதி வெளியிட்டனர். உருசியாவின் அரசியல்—வரலாற்று—பண்பாட்டு மொழியாகப் பண்டு தொட்டு வளர்ந்து வரும் மொழி உருசிய மொழியாகும். வரலாற்றுச் சிறப்

பிலும் இலக்கியச் செறிவிலும் உருசிய மொழிக்கு ஈடாகவும், எடுப்பாகவும் சொல்லக்கூடிய வேறோர் மொழி; உருசியாவில் இல்லவே இல்லை. எனவே, அந்த மொழி உருசியாவின் மத்திய ஆட்சி மொழியாகவும், பொது மொழியாகவும் வந்தது என்றால் அது இயற்கைக்கு ஒத்த முறையேயாகும். உருசியாவின் ஆட்சியாளர்கள் மிகப் பெருந்தன்மையோடு, பல்வேறு வட்டாரங்களின் வட்டார மொழிகளை வளர்க்கவும், அந்தந்த வட்டாரங்களில் அந்தந்த வட்டார மொழிகளிலேயே உயர்தரக் கல்வியைப் பயிற்றுவிக்கவும் இயன்ற வழிவகைகளையெல்லாம் செய்தனர்—செய்து வருகின்றனர். உருசியாவில் உருசிய மொழிக்கு ஈடு எடுப்பான வேறோர் மொழி இல்லாத காரணத்தால், அதனையே உருசியாவின் பொதுமொழியாகவும், மத்திய ஆட்சி மொழியாகவும் ஏற்றுக்கொள்ளவேண்டிய நிலை பிற மொழியினர்க்கு ஏற்பட்டது. அது குறித்து எந்த மொழியினரிடத்தும் முணுமுணுப்பு ஏற்படவில்லை.

## வடக்கத்திய சமத்கிருத மொழிகள்

அதேபோது இந்தியாவை உற்றுக் கவனித்தால், வடக்கத்திய சமத்கிருத மொழிகள் எல்லாம் ஏறத்தாழ ஒரே சமநிலையில் இருப்பனவாகும். அவைகள் எல்லாம் சுமார் ஆயிரம் ஆண்டுகளாகத்தான் தனித்தனி மொழியாகத் தோன்றி வளர்ந்து வருகின்றன. அதற்கு முன்னால் அவைகளெல்லாம் பிராக்கிருத மொழிகளின் கூறுபாடுகளாக விளங்கி வந்தன. ஒவ்வொரு மொழியும் சென்ற ஆயிரம் ஆண்டு காலமாகத்தான் தமக்கேயுரிய தனித்தனி இலக்கியங்களை வளர்க்கத் தொடங்கின. அவைகளில் வங்காளி, மராத்தி, குசராத்தி ஆகிய மொழிகள் சிந்தி—பஞ்சாபி—இராசதானி— இந்தி—ஒரியா போன்ற மொழிகளைக் காட்டிலும் வளர்ச்சியிலும் சரி, வளத்திலும் சரி, இலக்கியச் செறிவிலும் சரி, மிக மிகச் சிறந்தனவாகும். இந்தி மொழியினைப் பேசும் மக்களின் எண்ணிக்கை பிற எந்த ஒரு மொழி பேசும் மக்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் சற்று மிகவானதாக இருந்தபோதிலும், அது கொண்டிருக்கும் இலக்கியங்கள் அளவிலும் சரி, அருமையிலும் சரி மிக மிகத் தாழ்ந்த தரத்தினவாகும். வடநாட்டு மொழிப் பகுதிகளில் இந்தி மொழி, சமயவியல்—தத்துவவியல்—அரசியல்—இலக்கியவியல் ஆகிய துறைகளில் உணர்ச்சி தரும் ஒரு மொழியாக என்றும் இருந்ததாகச் சொல்லவே முடியாது.

## தென்னாட்டுத் திராவிட மொழிகள்

தென்னாட்டைப் பொறுத்த வரையில் எடுத்துக்கொண்டால், திராவிட மொழிகள் மிக உயர்ந்த இலக்கியங்களை மிக நீண்டகாலமாகவே கொண்டிருக்கின்றன.



தமிழ்மொழி இற்றைக் கால மேற்கு ஐரோப்பிய மொழிகளிலுள்ள இலக்கியங்களைக் காட்டிலும் மிகப் பழைமையான இலக்கியங்களைத் தன்னகத்தே கொண்டிருக்கிறது. இற்றைக்கால வட இந்திய மொழிகளைக் காட்டிலும் மிக நீண்டகாலத்திற்குமுன்பே தமிழ்—தெலுங்கு — கன்னடம் ஆகிய மொழிகள் வளர்ச்சிபெற்றிருந்தன. அவைகள் விறுவிறுப்பான இலக்கிய வழிவழி முறையைக் கொண்டிருப்பதோடு, அகில இந்தியாவையும் கவர்ச்சிபடுத்திய சமய—தத்துவ இயக்கங்களின் வழிவழி முறையையும் கொண்டிருக்கின்றன.

## இந்தி ஏற்புடைத்தான பொதுமொழி அல்ல

இப்படிப்பட்ட சூழ்நிலைகளைக் கொண்ட இந்தியாவோடு உருசியாவை ஒப்பிட்டுப் பார்ப்பது எந்த வகையிலும் பொருந்திவராது என்பதை எவரும் உணர்ந்து கொள்ளலாம். பெருமை கொள்ளத்தக்க இலக்கிய — அரசியல் உயர்வைக் கொண்டிருக்கும் இந்தியாவின் மொழிகள், அவைகளைவிட எல்லாவகையிலும் குறைபாடுடைய இந்தியைத் தமக்குச் சமமாகக் கொள்ள ஒருபொழுதும் ஒருப்படா; இந்திக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவத்தையும் முதன்மையாதிக்கத்தையும் ஏற்க மனம் கொள்ளா.

ஆனால் உருசியாவிலோ உருசிய மொழி மற்ற எல்லா மொழிகளைக் காட்டிலும் மிகச் சிறந்து விளங்குகிறது. உருசியமொழியோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, பிற உருசியநாட்டு மொழிகள் தரத்தில் மிகமிகக் குறைந்திருப்பதோடு, சில எழுதும் வழக்கு அற்றே வாழ்கின்றன. அவைகள் உருசியமொழியைப் பொது மொழியாக ஏற்றுக்கொள்வதிலே அருவருப்போ முணுமுணுப்போ கொள்ள வழி ஏதுமில்லை. அவைகள் உருசிய மொழியை விரும்பி ஏற்றுக் கொள்ளும் அவசியமான நிலையிலிருந்தன. எனவே உருசிய மொழி, உருசியாவின் மத்திய ஆட்சிமொழியாகவும் பொது மொழியாகவும் ஆவதில் தகராறு ஏதும் ஏற்படவில்லை.

உருசியாவின் மொத்த மக்களில் உருசியமொழி பேசும் மக்களின் விகிதாசாரம், இந்தியாவின் மொத்த மக்களில் இந்திமொழி பேசும் மக்களின் விகிதாசாரத்தைவிட மிகவாகும் என்பதும் உணரவேண்டிய தொன்றாகும்.

இந்தியாவில் இந்திமொழி பேசப்படும் பகுதியைக் காட்டிலும், பிறமொழி பேசப்படும் பகுதிகள் உயர்வாகவோ அல்லது அதற்குச் சமமாகவோதான் இருந்து வருகின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலையில், இந்தி இந்தியாவின் ஆட்சி மொழியாகவும் பொது மொழியாகவும் ஆக்கப்படுமேயானால், இந்தி பேசும்

பகுதி அரசியல்—பண்பாட்டுத் துறையில் ஏராளமான வசதிகளைப் பெறவும், பிறபகுதிகள் அவ்வசதிகளைப் பெறமுடியாமல் வாடவும் ஆன நிலைமை ஏற்பட்டு விடும். இது இந்தியைத் தாய்மொழியாக்க் கொள்ளாத எல்லா மக்களுக்கும் இழைக்கப்படும் அநீதியாகத்தான் சென்று முடியும். ஒரு திறமையும் இல்லாத இந்தி நாளடைவில் எல்லா வசதிகளையும் வாய்ப்புகளையும் பெறும்; அதற்கு எதிராகச் சொல்லப்படும் எந்த ஒரு சொல்லும் பெரிய அரசக் குற்றமாகக் கருதப்படும் என்ற நிலைதான் ஏற்படும். இந்தியை மதிக்கக்கூடிய ஒரு மொழியாகவோ, வழிகாட்டும் மொழியாகவோ, துணைபுரியும் மொழியாகவோ பிற இந்திய மொழி எதுவும் ஏற்றுக்கொள்ளாது என்பது வெளிப்படை.

## ஆங்கில மொழி

அகில உலகப் பொதுமொழியாக விளங்கும் ஆங்கிலம், இந்தியாவில் சென்ற 200 ஆண்டு காலமாக ஆட்சி மொழியாக இருந்ததால், அதனோடு பழகும் நல்ல வாய்ப்பு இந்திய மக்களுக்கு முன்கூட்டியே ஏற்பட்டுவிட்டது. இற்றைக் காலத்திற்கேற்ற எண்ணத்தையும், நடவடிக்கையையும் இந்திய மக்களுக்குத் தந்ததும்—தந்துவருவதும் ஆனமொழி ஆங்கிலமேயாகும். இந்தியாவின் விடுதலைப் போராட்டம், இந்திய அரசியலமைப்புச் சட்டம், மக்களாட்சிக் கொள்கைகளை ஏற்றுக் கொள்ளுதல், எல்லா மக்களுக்கும் சமத்துவம் வழங்குதல், நல்வாழ்வுக்கு உறுதியளிக்கும் அரசு, சமதர்மம் போன்ற பலவும் ஆங்கில ஆட்சியில் ஆங்கில மொழியின்மூலம் கிடைத்த பலன்களேயாகும்.

ஆங்கிலம், இப்பொழுது இந்தியாவில் கற்றறிந்தவர்களின் மொழியாகவும், மாநிலங்கள் ஒன்றுடன் ஒன்று பேசிக்கொள்வதற்கான மொழியாகவும் இருந்து வருகிறது. உயர்தரக் கல்வி பயிலுவதற்கேற்ற பாடமொழியாக இந்தியா முழுவதும் ஒரு தன்மையாகக் கையாளப்பட்டு வருகிறது. புதிய கருத்துக்களையும்—பண்பாடுகளையும் அறிந்துகொள்வதற்காகவும், அரசாங்க அலுவல்களில் அமர்வதற்காகவும், பலரால் கற்றுக் கொள்ளப்பட்டது. இப்பொழுது பார்த்தால், ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள கற்றறிந்தவர்கள் தங்கள் தங்கள் தாய்மொழியோடு ஆங்கிலத்தையும் நன்கு கற்றறிந்து வைத்துள்ளார்கள். ஆங்கிலத்தின்மூலம் பெறப்படும் அரசியல்—சமூகக் கருத்துக்கள் தாம் நம்மைச் செம்மைப்படுத்தின—செம்மைப்படுத்தி வருகின்றன என்பதை யாரும் மறுத்தற்கில்லை.

## மாநில ஆட்சி மொழி

ஒருவருக்குப் பாடம் பயிற்றுவிக்கும் மொழி அவர் தம் தாய்மொழியாகத்தான் இருக்கவேண்டும் என்ற கருத்தில் யாருக்கும் வேறுபாடு இருக்கச் செய்யாது.



இளையோரும் சரி, முதியோரும் சரி, கல்வி பயில அவர்தம் தாய்மொழிதான் ஏற்ற பற்றுக்கோடாகும் என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். உருசியாவில் எழுத்து வழக்கற்றிருந்த மொழிகளில்கூட எல்லா நிலைக் கல்வியையும் போதிக்கலாம் என்ற நிலைக்கு அவைகளை வளர்த்திருக்கும்போது, நன்கு வளர்ந்துள்ள இந்திய மொழிகளில் பாடம் சொல்லிக் கொடுப்பது என்பது அவ்வளவு கடினமானதாக ஆகிவிடாது. போதுமான பாடப் புத்தகங்கள் இல்லை என்ற குறைபாடு ஒரு பெருங் குறைபாடு ஆகாது. அந்தக் குறைபாட்டை எளிதில் விரைவில் போக்கிக் கொள்ளலாம்.

ஆகவே ஒவ்வொரு மொழிவழி மாநிலத்திலும் ஆரம்பக் கல்வி முதல் பல்கலைக் கழகப் பட்டப் படிப்பு வரையில் வட்டார மொழியான தாய்மொழியே பாடம் பயிற்றுவிக்கும் மொழியாக இருக்கலாம். பல்வேறு மொழி பேசும் கலப்படப் பகுதிகளிலும், கலப்பட நகரங்களிலும், வட்டார மொழியைத் தவிர்த்த வேறு மொழிகளிலும் பாடங்கற்பிக்கப் போதுமான வசதிகளைச் செய்து தரலாம். **ஒவ்வொரு மொழிவழி மாநிலத்திலும் அந்தந்த நிலத்திற்குரிய மொழியே அந்தந்த மாநில ஆட்சி மொழியாக இருக்க வேண்டும்.** மாநில ஆட்சியைச் சேர்ந்த அலுவலாளர்கள் அத்துணைப் பேரும் அந்தந்த மொழியையும் ஐயந்திரிபற அறிந்தவர்களாக இருக்கவேண்டும். மாநிலத்திற்குள்ளே நடைமுறை வழக்காற்றிற்கும், கல்விப் பயிற்சிக்கும் உரிய மொழியாக எந்த மொழியைக் கொள்ளுவது என்ற பிரச்சினையை மேற்கண்டவாறு தீர்த்துக் கொள்ளலாம்.

## பொது மொழி

**நமக்கு இந்திய யூனியன் ஆட்சியை நடத்த ஒரு மொழி தேவைப்படுகிறது; மாநிலத்தோரு மாநிலம் தொடர்பு கொள்ள ஒடு மொழி தேவைப்படுகிறது; உலகின் பிற நாடுகளோடு தொடர்பு கொள்ள ஒரு மொழி தேவைப்படுகிறது; இந்த மூன்று தேவைகளையும் சேர்த்து நிறைவேற்றித் தரக்கூடிய ஒரே மொழி இன்றைய நிலையில் ஆங்கிலந்தான். எனவே அகில உலகப் பொது மொழியாக விளங்கும் ஆங்கிலமே இந்திய யூனியன் ஆட்சி மொழியாகவும், இந்திய மாநிலங்களின் பொது மொழியாகவும் கொண்டால் எல்லாப் பிரச்சினைகளும் எளிதில் தீருவனவாகும்.** [திராவிடக் கூட்டாட்சி ஏற்படும் போது திராவிடக் கூட்டாட்சி மொழியாகவும், திராவிடப் பொது மொழியாகவும் ஆங்கிலம் இருக்கலாம்—(ஆ.ர்)] அப்படிப் பார்க்கும்போது இந்தியாவில் எல்லோரும் இரண்டு வகை மொழிகளை மட்டுமே கொண்டால் போதும் என்ற நிலை ஏற்படும்: (1) மாநிலங்களின் மொழிகள் (குறிப்பிடத்தக்க 14 மொழிகள்) (2) யூனியன் மொழி

(அதாவது ஆங்கில மொழி).

மேற்கண்ட முறைப்படி பார்த்தால், இந்தியாவிலுள்ள பெரும்பாலோரும் தாங்கள் தங்கள் தாய்மொழி அல்லது வட்டார மொழியோடு ஆங்கில மொழியைக் கட்டாயமொழியாகக் கற்றுக் கொண்டால் போதும் என்ற நிலை ஏற்படும். ஆங்கிலமொழி நடுத்தரப் பள்ளியில் துவங்கிப் பல்கலைக் கழகம் வரையில் இரண்டாவது கட்டாய மொழியாகப் பயிற்றுவிக்கப்பட வேண்டும்.

ஆங்கிலத்தைப் பொதுமொழியாக ஏற்றுக்கொள்ளுவதென்றாலும், இந்தியாவிலுள்ள எல்லா மாநிலங்களும் உலக அரசியல் தொடர்பு, உலக வாணிகத் தொடர்பு, உலக அறிவியல் தொடர்பு ஆகியவற்றை நேரிடையாகப்பெற வாய்ப்பு ஏற்படும்; வாய்ப்புகளும், வசதிகளும், சலுகைகளும் ஒன்றுக்குக்கூட மற்றொன்றிற்குக் குறைய என்ற என்ற வேறுபாடில்லாமல் எல்லா மாநிலங்களும் சமநிலையை அடைய முடியும்.

ஆங்கிலம் நமது தேசிய வாழ்வில் இடம் பெறும்; நமது தாய்மொழியால் செய்து தரமுடியாத வற்றைச் செய்துதரும் அளவுக்குத்தான் இடம் பெறும்; பண்பாட்டு வளர்ச்சியைப் பொறுத்த வரையில் வட்டார மொழியோடு போட்டிபோடும் இடத்தைப் பெறாது. **நமக்கென்று இருக்கும் தேசியமொழி நமது தாய்மொழியாகும்; தேவைக்கென்று எடுத்துக்கொள்ளும் மொழி ஆங்கில மொழியாகும்!**

—"மன்றம்"

**புயல் நிவாரணம்**

## பிரைவேட் பள்ளி ஆசிரியருக்கு உதவி

**பிராவிடண்ட் நிதியிலிருந்து 2 மாத அட்வான்ஸ் தர சர்க்கார் உத்திரவு**

தஞ்சை, திருச்சி, மதுரை, ராமநாதபுரம் ஜில்லாக்களில் புயலால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ள தனியார் ஆரம்ப, செகண்டரி பள்ளிக்கூட ஆசிரியர்களுக்கு அவரவர் பிராவிடண்டு நிதியிலிருந்து இரண்டு மாத சம்பளத்தை அட்வான்ஸ் தந்து உதவ வேண்டும் என்று சர்க்கார் உத்தரவிட்டுள்ளனர். இந்த அளவு உதவி தருவதற்குப் போதிய அளவு பிராவிடண்ட் நிதியில்லாத ஆசிரியர்களுக்கு குறைவாக அட்வான்ஸ் தரலாம் என்றும் சர்க்கார் உத்தரவிட்டுள்ளனர். பிராவிடண்டு நிதி இல்லாத ஆசிரியர்களுக்கு தலா ரூ. 30 சர்க்காரால் அட்வான்ஸ் தரப்பட்டு, பள்ளி நிர்வாகத்தின் மூலமாக 12 தவணைகளில் திரும்பப் பெறப்படும்.

—"சுதேசமித்திரன்"

## ஆசிரியர்களுக்கு உபகாரச் சம்பளம்

"பள்ளி ஆசிரியர்களுக்கு ஓய்வு கால உபகாரச் சம்பளம் (பென்ஷன்) தரும் திட்டம் குறித்து ஆசிரியர் மனதில் ஒருவகைக் குழப்பம் நிலவுவதாகத் தெரிகிறது.

"இந்தத் திட்டம் வரும் 1956 ஏப்ரல் முதல் அமுலுக்கு வரும்; இது துவக்கப் பள்ளிகளிலும், செகண்டரி பள்ளிகளிலும் இப்போது பணியாற்றும், 'லோயர் கிரேடு', 'ஹையர் கிரேடு', 'செகண்டரி கிரேடு' ஆசிரியர்களுக்கு உரியதாகும்.

"எல். டி, பி. டி., மற்றும் உடற் பயிற்சி ஆசிரியர்களுக்கு இது உரியதல்ல,"

என்று, சென்னை கல்வித் துறைத் தலைவர் என். டி. சுந்தரவடிவேலு அவர்கள், தமக்கு நாசரத் வட்டார ஆசிரியர்கள் அளித்த வரவேற்பிற்குப் பதில் அளிக்கையில் விளக்கம் தந்திருக்கிறார்.

* * *

## அடுத்த மாதம் அமுல்?

"சட்டசபையில் வெளியிடப்பட்ட அடிப்படையில், ஆசிரியர்களுக்குப் 'பிராவிடண்டு நிதி—பென்ஷன்' திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருவதற்கான உத்தரவை சர்க்கார் அடுத்த மாதம் பிறப்பிக்கும்," என்று, கல்வி 'டைரெக்டர்' என்.டி. சுந்தரவடிவேலு தெரிவித்துள்ளார்.

—"நம் நாடு"

---

# "அறிஞர்களின் அறிவுரைகள்"

(தொகுத்தவர் அ. திருப்பதி, ஆசிரியர், ஸ்ரீ லட்சுமி நாராயண உயர்தர ஆரம்ப ஆதாரப் பாடசாலை, வண்டாரி.)

"சுயராஜ்யம் என்பது ஒவ்வொருவரும் உரிமை பெறுவது."

—காந்தியார்.

"உள்ளத் தூய்மையுள்ளவனே நன்னெறியில் ஓடுகின்ற உணர்ச்சிகளுக்கு உருக்[illegible]க்க முடியும்."

—நியூமன்.

"நீதியும், உரிமையும் நெருங்கியிருக்க வேண்டும். [illegible]ண்டுக்குமிடையே பிரிவினை [illegible]ற்படின் ஒன்றும் வாழாது."

—எட்ம[illegible]ட் பர்க்.

"வைதிகம் என்னும் நோயைப் பகுத்தறிவு என்ற ஒரே மருந்தால்தான் போக்க முடியும்." —அண்ணாதுரை.

"பணிவில்லாத மகள் நாளை பணிவில்லாத மனைவியாக மாறிவிடுவாள்." —பெஞ்சமின் ஃ பிராங்களின்.

"பொறுமை என்பது ஒரு கசப்பான காய்; ஆனால் அது கனிந்தால் மிக இனிப்பானதோர் பழமாகும்" —ரூஸ்சோ

"எனக்கு விடுதலை வேண்டும். இல்லையேல் மரணம் வேண்டும்." —பாட்ரிக் ஹென்றி.

"கணவன் சம்பாதிக்க வேண்டும்; மனைவி சேமிக்க வேண்டும்". —மார்டின் லூதர்.

"எதிர்காலம் எவ்வாறிருக்குமென நமக்குத் தெரியாது. ஆனால், நம் நோக்கங்களே எதிர்காலத்தை உருப்படுத்தப் போகின்றன." —நேரு.

"செல்வாக்கு நீடித்து நிற்கவேண்டுமானல், செல்வத்தைப் போல அதையும் சிக்கனமாகவே செலவழிக்க வேண்டும்." —டால்ஸ்டாய்.

"அன்பும் அறிவும் கைகோர்த்து இன்பத்தாண்டவம் ஆடும் போதுதான் நாகரீகம் நிலைக்க முடியும்." —பெர்ட் ராண்ட்ரஸ்ஸல்.

"பொதுவுடைமைக் கொள்கையை ஒழிக்க நடத்தும் யுத்தமே அதைப் பரவச்செய்யக் கூடும்." —சர் இராதாகிருஷ்ணன்.

"அன்புடையவனே வாழ்கிறான்; சுயநலமுள்ளவன் செத்துக் கொண்டிருக்கிறான்." —விவேகானந்தர்.

"காதல் என்பது மகளிர், ஆடவர் என்கிற இரண்டிடங்களில் ஒத்திருப்பின் மட்டுமே இன்பம் பயப்பதாகும்." —திருவள்ளுவர்.

"அன்புள்ள தோழர்களே!—உங்கள் செயலில் வீரம் இருக்கட்டும்—வீம்பு [illegible] நிறையட்டும்—ஆவேசம் குறையட்டும் [illegible] வீண் பிரதாபம் வேண்டாம் [illegible] பாட்டோடு இருங்கள்—[illegible]ளாக வேண்டாம்." —அண்ணாதுரை

Edited, Printed and Published by [illegible]RARAGHAVAN at the '[illegible]tesan Press,' 94-95, New St., Mannady, Madras-1.

## வீரபாண்டியன் தமிழ் வாசகங்கள்

| | புத்தகத்தின் விலை | | | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|---|---|
| முதல் வகுப்பு | 0 | 4 | 0 | 25 | 19–5–'54 |
| இரண்டாம் வகுப்பு | 0 | 5 | 0 | 25 | 19–5–'54 |
| மூன்றாம் வகுப்பு | 0 | 8 | 0 | 25 | 19–5–'54 |
| நான்காம் வகுப்பு | 0 | [illegible] | 0 | 25 | 19–5–'54 |
| ஐந்தாம் வகுப்பு | 0 | 10 | 0 | 25 | 19–5–'54 |

மாதிரிப் பிரதிக்கு ரூ. 1–2–0 அனுப்பவும்.

### கதைப் புத்தகங்கள்

(S. S. அருணகிரிநாதர்)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பாலர் நல்ல கதைகள்** | | | | | |
| நான்காம் வகுப்பு | 0 | 5 | 0 | 28 | 19–5–'54 |
| **பாலர் கதா போதினி** | | | | | |
| ஐந்தாம் வகுப்பு | 0 | 5 | 0 | 59 | 19–5–'54 |

இந்த இரண்டு புத்தகங்கள் மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் ரூ. 0–5–0 அனுப்பவும்.

### இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்

(M. விவேகானந்தா, B. Sc. L. T.)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மூன்றாம் வகுப்பு | 0 | 5 | 0 | ... | ... |
| நான்காம் வகுப்பு | 0 | 7 | 0 | 18 | 19–5–'54 |
| ஐந்தாம் வகுப்பு | 0 | 8 | 0 | 18 | 19–5–'54 |

இந்த மூன்று புத்தகங்கள் வேண்டுவோர் ரூ. 0–10–0 அனுப்பவும்.

### புதிய தேச ஆட்சி முறை

(D. சிவசங்கரராவ், B.A.,L.T.)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மூன்றாம் வகுப்பு | 0 | 5 | 0 | 11 | 19–5–'54 |
| நான்காம் வகுப்பு | 0 | 7 | 0 | 8 | 19–5–'54 |
| ஐந்தாம் வகுப்பு | 0 | 8 | 0 | 8 | 19–5–'54 |

இந்த மூன்று புத்தகங்களை மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் ரூ. 0–10–0 அனுப்பவும்.

Regd No. M. 5018.

## புதுமுறை சங்கக் கணிதம்

K. வீராசாமி, B.A., B.T.

| | புத்தகத்தின் விலை | | | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|---|---|
| மூன்றும் வகுப்பு | 0 | 8 | 0 | 14 | 19–5–'54 |
| நான்காம் வகுப்பு | 0 | 10 | 0 | 14 | 19–5–'54 |
| ஐந்தாம் வகுப்பு | 0 | 12 | 0 | 14 | 19–5–'54 |

மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் ரூ. 0–15–0 அனுப்பவும்.

## நம் நாட்டு வரலாறு

M. தக்ஷிணாமூர்த்தி, B. A., B. T.,
T. S. உமாபதி, M. A., L. T.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மூன்றும் வகுப்பு | 0 | 5 | 0 | 11 | 19–5–'54 |
| நான்காம் வகுப்பு | 0 | 7 | 0 | 8 | 19–5–'54 |
| ஐந்தாம் வகுப்பு | 0 | 9 | 0 | 10 | 19–5–'54 |

மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் ரூ. 0–11–0 அனுப்பவும்.

## தமிழ் இலக்கணம்

T. S. உமாபதி, M.A.,L.T.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4, 5–வது வகுப்புகளுக்கு | 0 | 5 | 0 | 8 | 4–5–'55 |

மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் ரூ. 0–2–0 அனுப்பவும்.

## சிறுவர் பூகோளம் (Tamil)

T. S. உமாபதி, M. A., L. T.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இரண்டாம் வகுப்பு | 0 | 5 | 0 | 13 | 19–5–'54 |

V. K. சேஷாத்திரி, B. A., B. T.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மூன்றும் வகுப்பு | 0 | 7 | 0 | 12 | 19–5–'54 |
| நான்காம் வகுப்பு | 0 | 10 | 0 | 12 | 4–5–'55 |
| ஐந்தாம் வகுப்பு | 0 | 12 | 0 | 12 | 19–5–'54 |

மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் ரூ. 1–1–0 அனுப்பவும்.

**Mother India English Reader Primer - I 0—5—0**

மாதிரிப் பிரதிகளுக்கு ரூ. 0–2–0 அனுப்பவும்.

Printed at the Venkatesan Press, Madras-1.